ACL-TNAL
03390

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1938
MADRAS

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்



| மலர் | தாது௵ கார்த்திகை௴ | இதழ் |
| --- | --- | --- |
| 7 | 1936௵ நவம்பர்௴ 15௳ | 11 |



ACL-TNAL
03390
(2944)


பொருள் அடக்கம்


ஆசிரியர் குறிப்புகள் ... 802
சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் ... 805
ஓர் விண்ணப்பம் ... 809
கமலகாந்தா ... 810
உள்ளங்கவர்ந்த கள்ளன் ... 817
பேய் வாத்தியார் ... 823
'நவநாகரிகக் கொள்ளை' ... 834
'ஏமாயினோ' ... 845
கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல் ... 849
ஆசை அறுபது நாள்! மோகம் முப்பது நாள்! ... 859
தேர்தல் கொண்டாட்டம் ... 868
எனது குருட்டு அதிர்ஷ்டம் ... 870


குறிப்பு:—தமிழரசில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## காங்கிரஸ் வெற்றிக்குக் காரணம் என்ன?

சென்றமாதம் நடந்த சென்னை கார்பொரேஷன் தேர்தலில் காங்கிரஸ் கட்சியார் பெரும்பான்மையோராக வெற்றி பெற்றனர். புதிய முனிசிபல் கார்பொரேஷன் ஆக்ட்படி அறுபத்தெட்டுப் பேர்களைக் கொண்ட சென்னை கார்பொரேஷனில் அவர்கள் சுமார் முப்பத்தைந்து பேர்கள் இருக்கின்றனர். இப்போது நடந்ததேர்தலில் காங்கிரஸ் கட்சியார் பெரும்பான்மையோராக வெற்றிபெறுவர் என்பது முன்னதாகத் தெரிந்ததே. ஆனால் காங்கிரஸ் கட்சியார் தங்கள் வெற்றியை அதிக ஆடம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அது அவ்வளவாய் மெச்சத்தக்கதல்ல. முதலாவது அறுபத்தெட்டுப் பேர்களைக்கொண்ட சபையில் சுமார் 35 பேர்களிருப்பது பெரும்வெற்றியாகாது. இரண்டாவது நாற்பது பொதுத் தொகுதிகளில் ஒன்றிரண்டு ஸ்தானங்களைத் தவிர மற்றவைகளை தாங்கள் கைப்பற்றி விடலாம் என்று எண்ணினர். அதுமுடியாமற் போய்விட்டது அதில் 27 ஸ்தானங்களையே அவர்களால் கைப்பற்ற முடிந்தது. மற்றும் ஸ்தலஸ்தாபன தேர்தல் வெற்றி மக்களின் உள்ளக்கிடக்கையை தெரிவிப்பதாகாது. இது நமது அபிப்பிராய மட்டுமல்ல. நமது சென்னையிலேயே தன்னை ஒப்பதும் மிக்கதுமின்றித் திகழ்ந்துவரும் ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகையின் அபிப்பிராயமுமாகும். மற்றும் காங்கிரஸ் வெற்றிக்கு அக்கட்சியார் சாமர்த்தியம் காரணமென்றும் கூறமுடியாது. பிப்பிரவரி மாதம் நடக்கவிருக்கும் சென்னை அசெம்பிளி தேர்தலிலும் அவர்கள் வெற்றிபெற்றாலும்- அவர்கள் பெரும்பான்மையோராக வெற்றிபெறுவாரென்றே நம்புகிறோம் அதுவும் அவர்களின் சாமார்த்தியத்தையோ திறமையையோ காட்டுவதாகாதென்றே கூறுவோம். ஏனென்றால் அவர்களின் வெற்றிக்குக் காரணம்வேறு. அவர்களின் வெற்றிக்கு எதிர்கட்சியாரின் திறமைக்குறைவே காரணம். எதிர்கட்சி சர். பி. தியாகராயச் செட்டியாரும், ராஜா சர். பி. ராமராய நிங்கவாரும் (பானகல் ராஜாவும்) காலஞ்சென்ற பின்பு சரியான தலைவரின்றித் தத்தளிக்கின்றது. மற்றும் அக்கட்சியில் மக்களிடையே செல்வாக்குள்ள நன்மதிப்புப்பெற்ற, மக்கள் மனதை ஒருங்கே கவரும்படி பேசும் திறமைவாய்ந்த சில மெம்பர்களும் சில அரசாங்கப்பதவிகளை ஏற்றுக்

கொண்டனர். அதனால் அவர்கள் அரசியல் விவகாரங்களிலும் தேர்தல்களிலும் கலந்துகொள்ள முடியாமற் போய்விட்டது. சர். கே. வி. ரெட்டி தென்னாப்பிரிக்காவிற்கு இந்திய சர்க்காரின் ஏஜெண்டு-ஜெனரலாகச் சென்றார். இப்பொழுது அவர்கள் சென்னை சர்க்காரின் லா (சட்ட) மெம்பராய் இருக்கிறார். ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் சென்னை சர்க்காரின் ஹோம் (உள்நாட்டு) மெம்பராக இருக்கிறார். திவான்பஹதூர் ஏ. ராமசாமி முதலியார் லண்டன் சென்றுவிட்டார் எனவே இவர்கள் எல்லாம் தேர்தலில் கலந்துகொள்ள முடியாமலிருக்கின்றனர். இவ்விதம் தேர்தலில் கலந்துகொள்ள முடியாதபடி தடுக்கும் பதவிகள் எதையும் காங்கிரஸ் கட்சியினர் வகிக்கவில்லை. மற்றும் எதிர்கட்சியில் தற்போதிருக்கும் தலைவர்களென்போர் கட்டுப்பாடாய் ஒழுங்காய் காரியம்செய்யும் ஆற்றலில்லாதவர்களாயிருக்கின்றனர். இன்னும் பட்டம்பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த பலர் காங்கிரசுக்கு ஆக்கம் அளித்துள்ளனர். காங்கிரசின் வெற்றிக்கு இவைகளே காரணமாகும். எதிர்கட்சியின்பால் மக்கட்கு அநுதாபமில்லை என்பது காரணமல்ல. தேர்தல் பிரசாரத்தின்போது ஜஸ்டிஸ்கட்சி தற்போதிருக்கும் நிலைமையில் அதனிடத்தில் அநுதாபமில்லை என்றாலும், அக்கட்சியின் கொள்கையில் மக்கட்கு எவ்வளவுதூரம் அநுதாபமிருக்கிறதென்பதை காங்கிரஸ்வாதிகள் நன்குணர்ந்திருக்கின்றனர். எனவே அக்கட்சிக்கு கட்டுப்பாடாய் திறமையாய் சாமர்த்தியமாய் காரியம்செய்யும் தலைவரில்லாக்குறையே காங்கிரசின் வெற்றிக்கு முக்கியமான காரணமாகும். எனவே காங்கிரஸ் கட்சியினர் தங்களின் இப்போதைய வெற்றியைப்பற்றி அளவுகடந்த சந்தோஷம்கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் 1937-ம் வருஷத்திற்குப் பின்நடக்கும் தேர்தல்களில் இவ்விதவெற்றி யடைந்தால், அப்பொழுது இவ்விதம் சந்தோஷம் கொள்ளலாம்.

'தெளிச்சை'

நம் நாட்டில் எவரேனும் கடும் நோய்வாய்ப்பட்டு மதிமயங்கி சாகும் தருவாயிலிருக்கும்போது நன்றாகப் பேசவும் விவகாரங்களை உணர்த்தவும் செய்தால் அவருக்கு 'தெளிச்சை' ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவது வழக்கம். அதைப் போலவே இப்பொழுது இத்தாலியின் மண்ணாசை என்ற நோய்வாய்ப்பட்டு சாகும் நிலையில் இருக்கும் அபிஸீனியாவுக்கு தெளிச்சை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறோம். சென்ற செப்டம்பர் மாதம் கூடிய அகிலதேச சங்கக் கூட்டத்தில் அபிஸீனியாப் பிரதிநிதிக்கு ஸ்தானம் கொடுப்பதைப்பற்றி கேள்வி எழுந்தது. இத்தாலியோ தானே அபிஸீனியா தேசத்துக்கு அதிகாரி என்றும், எனவே அபிஸீனியாவுக்கு என்று

தனியாகப் பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாதென்றும், அப்படிக் கொடுத்தால் தான் சபையிலிருந்து விலகி விடுவதாயும் உறுமிற்று. அபிஸீனியா சக்ரவர்த்தியோ அபிஸீனியா முழுவதையும் இத்தாலி கைப்பற்றி விடவில்லை என்றும், சற்றேறக்குறைய முக்கால்பாகம் சுவாதீனமாகவே இருக்கிறது என்றும், எனவே அபிஸீனியாவுக்கு ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார் அதற்காக அவர் லண்டனிலிருந்து ஜினிவாவுக்கும் வந்தார். முதலில் இக்கேள்வியை ஹேக்கோர்ட் என்னும் அகிலதேச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் அப்பொழுது நடக்கவிருக்கும் கூட்டம் ஆரம்பிக்கும் முன் ஹேக்கோர்ட் தீர்ப்புக் கூற முடியாது என்றும், எனவே அக்கூட்டத்தில் அபிஸீனியாவுக்கு ஸ்தானம் கொடுத்து விடுவதென்றும், பின்னர் அதை ஹேக்கோர்ட் தீர்ப்புக்கு அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அபிஸீனியாவுக்கு அக்கூட்டத்திற்றான் அகிலதேச சபையில் ஸ்தானம் இருக்கிறது. இனிமேல் நடக்கும் கூட்டங்களில் அதன் பிரதிநிதிக்கு ஸ்தானம் இருக்குமா என்பது நிச்சயமற்றதாகவே இருக்கிறது. அதனாலேதான் நாம் அபிஸீனியாவுக்கு தெளிச்சை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறோம்' என்று கூறினோம். அகில தேச சபை தான் செய்யத்தவறிய கடமையைச் செய்ய, வழங்கத் தவறிய நீதியை வழங்க அதற்கு இது மற்றொரு சந்தர்ப்பமாகும். அபிஸீனியா மன்னர் முக்கால்பாகம் சுவாதீனமாக இருக்கிறது, அதன் அரசாங்கத்திற்கு தலைநகரம் கோர் என்று கூறுவதை இத்தாலியின் செய்கையே மெய்ப்பிக்கிறது. இத்தாலி கோர் நகரைப் பிடிக்க பெரும்படையை அனுப்புகிறது. அதன் படையினரில் ஒருசிலர் அந்நகர்குள் புகுந்துவிட்டதாய் கூறப்படுகிறது. எனவே இப்பொழு தாவது அகிலதேச சங்கம் அபிஸீனியா சக்ரவர்த்திக்கு வேண்டிய உதவியையளித்து அந்நாட்டின் சுயேச்சையை காக்கவேண்டும். அந்த வேலையும் சுலபமாக இருக்கும்படி அபிஸீனிய சக்ரவர்த்தி செய் திருக்கிறார். அவர் இப்பொழுது இத்தாலி கைப்பற்றி இருக்கும் பாகத்தை வைத்துக்கொள்ளச் சம்மதிப்பதாகவும், ஆனால் மீத முள்ள பாகத்தை சுவாதீன அபிஸீனியாவாக அங்கீகரித்தால் போதும் என்றும் அகிலதேச சபைக்கு கடிதம் எழுதி இருக்கிறாராம். அகிலதேச சபை இந்த அளவுக்காவது நீதி செய்ய முன் வருமா?

சில மாதங்களுக்குமுன் கனம் C. R. அவர்கள் பொதுஸ்தா பனங்களை இந்தியர் ஒழுங்காய் நடத்த முடியாததால் அவைகளை முன்போல அரசாங்கத்தினிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்று சொன்னாரல்லவா? இன்று சென்னை கார்ப்பரேஷன் தேர்தலின்பின் என் சொல்லுகிறார் என்பதைப் படித்தீர்களா?

---

# சென்னை கார்ப்பரேஷன் தேர்தல்

சென்னையில் நடந்த கார்ப்பரேஷன் தேர்தலில் பெருவாரியானவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வெற்றியடைந்தனர். வெற்றிபெற்ற அங்கத்தினர்களில் பலர் மக்களுக்கு காங்கிரசினிடம் உள்ள அபிமானம் காரணமாகவே வெற்றி யடைந்தனர் என்பது நிச்சயம். நாம் முன் சஞ்சிகையில் எழுதியபடி லோகல் போர்டுகளிலும் முனிசிபாலிடிகளிலும் காங்கிரஸ் ஊக்கங்காட்டாதிருந்திருக்குமாகில் நன்றாக இருந்திருக்கும்.

ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் நோக்கம் எல்லா ஸ்தாபனங்களையும் கைப்பற்றி விடுவோமானால் காங்கிரசுக்கு பலம் அதிகரித்துவிடும், எல்லாக்கட்சியினர்களுக்கும் பயம் உண்டாகிவிடும், ஆங்கிலேயர்களுக்கும் மற்ற நாட்டவர்களுக்கும் இந்தியாவில் காங்கிரசுக்கு உள்ள பலம் தெரியும் என்பதும், தவிர மக்கள் காங்கிரஸினிடம் கொண்டுள்ள அபிமானத்தை உணரலாம் என்ற எண்ணமிருக்கும் போலும். இதனை ஒருவரும் மறுக்க இயலாது என்றாலும் பல கஷ்டங்களும் இதில் இருக்கின்றன என்பதை உணரவேண்டும்.

## முட்டுக்கட்டை போடுவது காங்கிரசின் கொள்கை

வெள்ளையர் வழங்கியுள்ள வெள்ளைக்காகித சீர்திருத்தத்தை உதறித் தள்ளி அதை அமுலுக்குக்கொண்டு வரவொட்டாதபடி சகல ஸ்தாபனங்களிலும் புதிய சீர்திருத்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டு தடுப்பது காங்கிரசின் திட்டம் (?)

இப்போது யோசித்துப் பாருங்கள். புதிய சீர்திருத்தத்தை ஆதாரமாய்க்கொண்டு கார்ப்பரேஷன் நடத்த வேண்டிய திட்டத்தின்படி தேர்தல் நடந்தது. அதன்படி காங்கிரஸ் கட்சியினர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றனர். இனி வழங்கியுள்ள சீர்திருத்தத்தை நடத்துவதா அல்லது முட்டுக்கட்டை போடுவதா? நடத்தித்தான் ஆகவேண்டும். அப்படி நடத்த முற்பட்டால் நாட்டுக்கு நலன் செய்யவேண்டுமே!

சீர்திருத்த முறையில் முக்கிய அம்சங்களை மாற்றியமைத்தாலொழிய நாட்டுக்கு நலஞ்செய்ய முடியாது.

### கார்ப்பரேஷனில் செய்ய வேண்டியவை

கார்ப்பரேஷனில் கமிஷனருக்கு அரசாங்கத்தாரால் கொடுத்திருக்கும் அதிகாரத்தை ரத்துசெய்து சபையினருக்கு சர்வ அதிகாரமும் கொடுக்கச் செய்யவேண்டும். இல்லாவிடில் தமாஷ் கூட்டமாகவே கார்ப்பரேஷன் கூட்டம் நடைபெற ஏற்படும். இது சாத்தியமில்லை. ஏனெனில் மாற்றியமைக்க சட்டம் இடந்தரவில்லையே?

கமிஷனர் முதலான சகல உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும். கண்டிராக்ட் முறையை மாற்றி டிபார்ட்மெண்ட் மூலம் சகலமும் செய்ய வேண்டும் விளக்கு சுகாதாரம் முதலான விஷயங்களை டிபார்ட்மெண்டு மூலம் செய்தல் முதலான காரியங்களைச் செய்தால் ஏழைகளின் வரிச்சுமையைக் குறைக்க வழியுண்டாகும். இதைச் செய்ய முடியுமா?

இன்னும் இதுபோல எத்தனையோ காரியங்களைச் செய்ய இடமுண்டு. ஆனால் இப்பொழுது ஏற்பட்டுள்ள சீர்திருத்தத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்பதை திரு. கே. பாஷியம் ஐயங்காரே கூறிவிட்டார். வேண்டுமானால் வாய்ச் சம்பம் பேசலாம்.

### காங்கிரஸில் வகுப்பு வாதம்

ஜஸ்டிஸ் கட்சி இன்றுவரையில் சென்னைக் கார்ப்பரேஷனில் அமுல் செலுத்தி வந்ததென்றும், இனி காங்கிரஸ் கட்சி அமுல் நடத்தும் என்றும் காங்கிரஸ் தலைவர்களும் பத்திரிகைகளும் கூறுகின்றன. முதலிலேயே தவறான வழியில் செல்லுவதாய் மக்கள் உணரும்படியான விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டன. அவை யாதெனில் ஜஸ்டிஸ் கட்சியின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டப்படி இவ்வாண்டிற்கு பிராமணரல்லாதார் மேயராக வரவேண்டும். ஆதலால் பிராமணரல்லாதாராகிய திரு. ஸ்ரீராமுலு நாயுடுவை மேயராய் தேர்ந்தெடுத்தோம் என்று வெளிப்படையாய் கூறியிருப்பதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் காங்கிரசில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் அனுஷ்டானத்திற்கு கொண்டு வரப்பட்டாய்விட்டது என்று கருதமாட்டார்களா? அப்படி கருதும் பட்சத்தில் காங்கிரஸ் கட்சியானது ஜஸ்டிஸ்கட்சியை புதைத்துவிட்டது என்பதற்குப் பதிலாக அதை தன்னுள்ளடக்கிக் கொண்டது என்று நினைக்க மாட்டார்களா?

### (காங்கிரஸ் மெஜாரிடி)

சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்தில் சிறுபான்மையாகிய ஜஸ்டிஸ்கட்சி அங்கத்தினர்களை பொருட்படுத்தாமல் ஒதுக்கிவிட்டு

தங்கள் கட்சிக்குள்ளேயே எல்லா பதவிகளையும் வகித்துக்கொண்டு காரியம் நிறைவேற்ற முற்பட்டிருப்பதைப் பார்த்தால் பொது ஸ்தாபனங்களில் கட்சி பிரதி கட்சியைக்கொண்டு நிர்வாகத்தை நடத்துவது நாட்டிற்கு தீங்கை உண்டுபண்ணத்தக்கதாகும். இந்த சிறு ஆதிக்கத்திலேயே இப்படி நடந்து கொள்வார்களேயானல் பெரும் ஆதிக்கம் இவர்கள் கையில் சிக்கினல் சிறுபான்மையாளர்களாகிய மகம்மதியர், ஆதிதிராவிடர், கிருஸ்தவர்கள் முதலான கட்சியினர்களை என்ன பாடுபடுத்துவார்கள் என்ற பயம் மக்களுக்கு உண்டாகாதா ?

சென்ற ஆண்டு மேயராய் இருந்தவர் ஜஸ்டிஸ் மெஜாரிடியாய் இருந்த காலத்தில் வகுப்பு வாரி தீர்மானத்தின்படி ஒரு மகம்மதியராகிய காங்கிரஸ் கட்சியினராகிய கனம் ஹமீத்கான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லவா? ஒருநாள் கூட செல்லவில்லையே இதற்குள்ளாக மறந்துவிட்டால் உலகம் உங்களை சுயநலமிகள் நன்றிகெட்டவர்கள் எனக் கூருதா ?

நேற்று கோயமுத்தூரில் நிறைவேற்றிய தீர்மானத்தை கவனித்தால் காங்கிரஸை மக்கள் வெறுக்கத்தக்கவாறு காண்கிறது. அந்த தீர்மானத்தில் காங்கிரஸ் அடாக்கமிட்டிக்கு கட்டுப்படாமல் அடாக்கமிட்டி செய்தது தப்பு என்று கிளர்ச்சி செய்த நபர்களில் 13 பேர்களை சிட்சை செய்துவிட்டார்கள். அதாவது (3 வருட கடினகாவல் விதித்தார்கள்.) அந்த லிஸ்டில் காங்கிரசை எதிர்த்த (தலைவர் பதவியை பிடுங்கவேண்டும் என்று கூட்டம்போட்ட) திருவாளர்கள் கே. பாஷியம் ஐயங்கார் முத்துரங்க முதலியார் பக்தவத்சல முதலியார் அவர்களும் வேலூரில் காங்கிரசை எதிர்த்து வேலைசெய்த திரு. வெங்கடரங்கம் நாயுடு அவர்களும் திருச்சியில் காங்கிரசை எதிர்த்து ஓட்டு செய்த டாக்டர் ராஜன் முதலானவர்களையும் நீக்கி இருப்பதின் காரணம்யாதோ?

இப்பொழுது காங்கிரஸ் தலைவர்கள் செய்துவரும் செய்கைகளைப் பார்த்தால் காங்கிரஸ் ராஜ்யம் வந்துவிட்டால் காங்கிரசில் செய்யும் குற்றங்களை எதிர்ப்போர்களையும் கண்டிப்பவர்களையும் கட்டுப்படாதவர்களையும் தூக்குமேடைக்கு அனுப்பி விடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அந்த ஆட்சியே (ராமராஜ்யம்) என்று சொன்னலும் கொடுங்கோல் ஆட்சி என்றுதான் கூறவேண்டும். இதை நோக்க அரசாங்கத்தில் நடக்கும் காரியங்களை தப்பு என்று சொல்லி போராடும் இவர்கள் தங்கள் நடத்தை தப்பு என்று கூறுபவர்களிடம் கடுமையான சட்டத்தால் அடக்கிவிட முயற்சிப்பது போல பிரிட்டிஷ் அரசாங்கம் செய்யுமானல் இவர்கள் நிலை என்ன ஆகும். என்பதை யோசித்தல் அவசியமல்லவா?

எனவே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களின் போக்கு நாட்டின் மக்களுக்கு தீமையே உண்டுபண்ணும் சமதர்ம ராஜ்ஜியத்திற்கு எதிர்ப்பையே உண்டுபண்ணும். அடிமை வாழ்க்கையை விருத்தி செய்யும். ஆதலால் தற்கால நடைமுறையின் போக்கை உணர்ந்த எவரும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் (முசோலினி) ஆட்சியை வெறுப்பர் என்பது நிச்சயம்.

இத்தகைய இவர்கள் பொதுமக்களிடத்திலே பணம் தண்ட முற்படுவது சட்ட விரோதமானதே. இவர்கள் அறிக்கையில் பூர்ண சுயஆட்சியை வாங்கி தருகிறோம். அதற்காக இரண்டு லக்ஷம் ரூபாய் நீங்கள் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்றனர். இதன் அர்த்தம் யாதெனில் வெள்ளேயர்களை ஊரைவிட்டு துரத்திவிட்டு ஆட்சி செலுத்துகிறோம் என்று கூறுதல் வேண்டும். இது உண்மையானல் அரசாங்கம் இதை சம்மதிக்கின்றதா? சம்மதித்து இதற்காக பொதுஜனங்களிடம் பணம் வசூல்பண்ண அனுமதிக்கின்றதா?

அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்றால் ஜனங்களிடம் மோச வார்த்தைகளைக் கூறி பணம் தண்ட முற்பட்டுள்ளதும் சட்டத்திற்கு மீறிய குற்றத்துக்கு உள்ளானதென தீர்மானிக்க வேண்டுமல்லவா? ஏனெனில் பொய் சொல்லி பணம் தண்டி எலக்ஷனில் வெற்றி பெறும் சூழ்ச்சி என்று தீர்மானிக்க இடம் தருகின்றதால்?

பொது ஜனங்களிடம் பணத்தை வசூலித்து லாட்டரி சீட்டு போட்டு உங்களை பணக்காரர்களாக்கி விடுகிறோம் என்று சொல்லி பணம் தண்டும் குற்றத்தைக் காட்டிலும் வெள்ளேயர்களைத் துரத்தி விட்டு ராஜியத்தை உங்களுக்கு வாங்கித் தருகிறோம் என்று கூறி பணம் தண்டுவது பெரும் குற்றமாகும் என்பதை காங்கிரஸ் தலைவர்கள் உணராத காரணம் யாதோ?

உண்மையில் நாட்டில் செல்வாக்குள்ள கட்சி காங்கிரஸ் கட்சி என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் பொய் சொல்லி மோச வார்த்தைகளால் பணம் தண்ட முற்படும் காரணம் யாதோ?

ஆகவே இத்தகைய மோசடியான காரியங்களுக்கு பொது மக்களோ அல்லது அரசாங்கமோ இடந்தாலாகாதென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## போராட தீவிரக் கட்சி

இக்காரியங்களை நோக்க தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையைக் கைப்பற்றி ஜஸ்டிஸ் பெயரை அழித்து விட்டபடியால், அரசாங்கத்தோடு போராட காங்கிரஸ் தீவிரக்கட்சியைப் பலப்படுத்த மக்கள் முற்படும்படி ஏற்பட்டுவிட்டது. ஆதலால்

# ஓர் விண்ணப்பம்

தமிழ்நாட்டில் உள்ள ஜஸ்டிஸ் கட்சியினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம் யாதெனில் கீழ்குறிக்கும் காரணத்தை முன்னிட்டு ஒரு வினடியும் வீண்போக்காமல் எதிர்வாதம் செய்யாமல் அனைவரும் காங்கிரசில் சேரவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். தனித்தனியாக சேருவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தாலும் ஒரு மகாநாடுகூட்டி அந்த மகாநாட்டில் தீர்மானித்து காங்கிரசில் சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம்யாதெனில் காங்கிரஸ் கட்சியானது ஜஸ்டிஸ்கட்சியின் கொள்கையை பூராவும் ஒத்துக்கொண்டது. எப்படியெனில் சென்னை கார்ப்பரேஷன் பிரவேசகாலத்தில் ராஜகட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றோம், ராஜாவால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு கட்டுபட்டு நடக்கின்றோம், ராஜாவுக்கு விரோதமாக எந்தக்காரியத்தையும் நாங்கள் செய்யமாட்டோம், ராஜபக்தியோடு நாங்கள் இருப்போம், என்ற ராஜவிஸ்வாச பிரமாணத்தை செய்துவிட்டார்கள். இனி இந்த பிரமாணத்தைமீறி முட்டுக்கட்டை போடுவதென்பது அர்த்தமற்றதாகும். தவிர வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொண்டு இவ்வாண்டு பிராமணரல்லாத ஒருவரை மேயாக நியமித்தோம், என்று கூறிவிட்டார்கள். இதை மேயர் தேர்தல் நடந்த உடனேயே திவான்பகதூர் டாக்டர் C. நடேச முதலியார் அவர்களும் எடுத்துக்கூறி வாழ்த்தி இனி நாமும் வேறுகட்சி என்று சொல்லிக் கொள்ளமுடியாது என்று பேசி இருக்கின்றார்.

ஆதலால் ஈ. வெ. ரா. அவர்களும் மற்ற பிரமுகர்களும் சேர்ந்து ஒரு கூட்டத்தைக்கூட்டி அனைவரும் காங்கிரசில் ஒரே காலத்தில் கூட்டமாகவந்து சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிடில் மோசம் போவீர்கள்! மோசம் போவீர்கள்!! மோசம் போவீர்கள்!!!

---

ஏழைகளின் கட்சியாக விளங்கும் கட்சி, விவசாயிகள் கட்சி, தொழிலாளர்கட்சி, சமாசக்கட்சி, என்று பொருள் கொள்ளக்கூடிய சமதர்ம கட்சி என்ற தீவிரக்கட்சி பலப்பட்டுபோராட முற்படவேண்டும் என்பதை சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் தூண்டிவிட்டது.

# கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## அத்தியாயம் 16.



### வாரசாரம்

ஜெர்மனிக்குச் சென்ற கமலகாந்தன் ஒவ்வொரு நாளும் தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும், அவைகளைப்பற்றிய தனது அபிப்பிராயத்தையும் தீட்டி வைக்கலானான். அவைகளில், முதல் வாரசாரத்தை நோக்கி மேலே கதையைத் தொடங்குவோம்.

ஞாயிற்றுக்கிழமை: இன்றுகாலை கப்பலை விட்டிறங்கினேன். சமுத்திரத்தில் முன்பின் யோசியாமல் என்னைத் தள்ளிய ஊமையனை சிறைப்படுத்திய காட்சியைக் கண்டேன். அந்தப் பாதகனின் அடாச் செயல் குறித்து ஒரு பக்கம் துக்கமும், மற்றொரு பக்கம் நான் பிழைத்தமைபற்றி சந்தோஷமுங் கொண்டேன். மிஸ். சரோஜினிக்கு ஒரு கடிதமும் கடல் சம்பவம் அச்சிடப்பட்ட சமாச்சாரப் பத்திரிகையும் அனுப்பினேன்.

திங்கட்கிழமை: இன்று காலையில் நாகரிக முறைப்படி உடையுடுத்தி பெரிய தெரு வழியாய் ரசாயனக் கல்லூரி இருக்குமிடம் நாடிச் சென்றேன். வழியில் என்னைக் கண்டோர் உற்றுநோக்கினர். ஒரு சிறு வாலிபன் என்னை யணுகி, 'நீ ஒரு இந்தியன்தானே!" என்றான். 'ஆம்' என்றேன். 'பின் ஏன் உங்கள் நாட்டு முறைப்படி ஆடையணியாமல் எங்களைப்போல் உடுத்தியிருக்கின்றாய்!" என்றான். எனக்கு ஒரு பக்கம் வெட்கமும் மற்றொரு பக்கம் அவன்பால் பிரீதியும் ஏற்பட்டது. மறுநாள் முதல் எண்ணற்ற இந்திய ஏழை மக்களுக்கு கஞ்சி வார்க்கவல்ல கதருடை யணிவதென்ற தீர்மானத்துடன் அவ்விடம் விட்டகன்றேன். கல்லூரியை யடைந்து அதிகாரியுடன் கலந்து பேசி அன்று மாலையிலேயே வகுப்பில் சேர்ந்து கொண்டேன்.

செவ்வாய்க்கிழமை: குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி நேரம் முன்னதாகவே கல்லூரியை யடைந்தேன். வாசகசாலைக்குச் சென்

றேன். அங்குகண்ட அத்தனை புத்தகங்களை நான் எங்கும் கண்டதில்லை. காலத்தில் வகுப்பிற்குள் சென்றேன். மாலையில் உடற்பயிற்சி செய்தேன். அன்று இரவில் நித்திரை கொள்ளவில்லை. தாய் நாட்டின் ஞாபகமும், வயது முதிர்ந்த என் அன்னையின் உருவமும், கண்மணி கமலகாந்தாவின் தோற்றமும் ஒன்றன்பின் ஒன்ருகத்தோன்றி அவ்வாறு செய்தன.

புதன்கிழமை : இன்று காலையில் முக்கிய சம்பவங்களொன்றுமில்லை. மாலையில் வகுப்பில் ஈடுபட்டிருந்தபொழுது என் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு ஜர்மனிய மாணவி அவளுடைய நோட்டுப்புத்தகத்தில் என்போன்ற ஒரு உருவமும், அதன்பக்கத்தில் அவள் போன்ற ஒரு உருவமும் வரைந்து, 'நாமிருவரும் ஏன் இவ்வாறு ஒருமித்திருக்கலாகாது?' என்று தன் உள்ளக்கிடங்கையை அப்படங்களின் கீழ் எழுதி என்முன் வைத்தாள். இதனைக்கண்ட நான் அவளை ஒருமுறை ஏற இறங்க நோக்கினேன். அவளின் தேகக்கட்டும் முகவசீகரமும் புன்சிரிப்பும் என் இதயத்தைக் கொள்ளை கொண்டன. உடனே அவள் விருப்பத்திற்கிணங்க எண்ணினேன். ஆனல் தாய் நாட்டிலுள்ள கமலகாந்தாவின் ஞாபகம் அவ்வெண்ணத்தை மறைத்தது. பின்பு சற்று தேறியவனாய் அந்நங்கையைப் பரிகசிக்க எண்ணி 'இப்பொழுது அடுத்தடுத்து ஒருமித்துத்தானேயிருக்கின்ருேம்! இன்னும் என்ன?' என்றேன். 'இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே' என்ருள். 'அது முடியாத காரியம். நான் உன்னை சகோதரியாகப் பாவிக்கின்றேன்' என்றேன். அம்மங்கை சோகமுற்ருள். அதற்கு நானென் செய்வேன்?

வியாழக்கிழமை: இன்று கல்விச்சாலை வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு மாலையில் ஜாகைக்குத் திரும்பும்பொழுது டமாரச் சத்தம் 'டாங்டாங்' எனக் கேட்டது. சற்று தாமதித்தேன். விளம்பரக் காகிதமொன்று கிடைத்தது. என்னே நான்கொண்ட ஆச்சரியம்! ஜர்மனி தேசத்தில் அன்று இரவில் தென்னிந்திய சங்கீதக் கச்சேரி நடக்கப்போவதென்ருல் நான் ஆச்சரியப்படாமலிருக்க முடியுமோ! கச்சேரியில் கலந்துகொள்ளத் திட்டம்போட்டு அவ்வாறே செய்தேன். மேல்நாட்டில் தென்னிந்திய சங்கீதத்திற்குள்ள மதிப்பை எழுதத்தரமன்று. ஒவ்வொருவரும் திறந்தவாயை மூடாமல் சங்கீதத்தி லாழ்ந்தனர். இவ்வாருக இருந்த வேளையில் இருபோலீஸ் சேவகர்கள் என்னை யணுகி, 'உம் பெயர் கமலகாந்தன் தானே?' என வினவினர். என் மனம் பீதியால் பீடிக்கப்பட்டது. 'ஆம்' என்றேன். 'உம்மை கைது செய்துவர எங்களுக்கு உத்தரவு ஏற்பட்டிருக்கிறது' என்றனர். எனக்கொன்றுமே விளங்கவில்லை. ஏன்? எனக் கேட்டேன். 'நேற்று, கல்லூரியில் உமதருகில் வீற்றிருந்த ஜர்மனியப் பெண்ணொருத்தியை நீர் வலுவில் இழுத்து.

காதல் வார்த்தைகள் புகன்று அவளை அவமானப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது' என்றனர். ஒரு பக்கம் வியப்பும் மற்றொரு பக்கம் திகைப்பு மேற்பட்டது. என்னே அநீதி இது? தெய்வமே என்றிருந்த என்னை வலுவில் வம்புக்கிழுத்து இப்பொழுது நிரபராதியான என்மேல் அபராதியான அவள் குற்றமும் சாட்டினாள்! நான் விசாரிக்கப்பட்டேன். எவ்வளவோ உறுதி கூறியும் என்னை நீதிபதி குற்றவாளியென்றே தீர்மானித்து ஆயிரம் 'மார்க்'குகளை நன்னடக்கை ஜாமீனாகக் கட்டவேண்டுமென்றும், இல்லாவிடில் அவ்வூரினின்றும் அன்றே அகலவேணடுமென்றும் உத்தரவு பிறப்பித்தார். என்னே அநீதி யிது! விதிபோலும்! கொடுங்கோலில், நீதி நெறியற்றவிடத்தில் வாழ்வதினும் கடும்புலி வாழும் கானகம் நன்றாம். ஆனால் சிரமேற்கொண்டு வந்த காரியத்தில் ஜெயம் பெறாது அவ்வூரைப் பிரிய மனமற்று ஆயிரம் மார்க்குகளை எண்ணிக்கொடுத்து விடுதலை பெற்றேன். கேவலம் ஒரு பெண் விலைமதிக்க வொண்ணா கற்பை என் மூலம் பங்கப் படுத்திக்கொள்ள முனைந்தாள்! கேவலத்திலும் கேவலம்! நானோ என் தாய்க்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றவும் கமலகாந்தாவை கண்காணிக்கவும் உறுதிகொண்டு அவளைப் புறக்கணித்து அத்திய வழியினின்றும் நல்வழிப்பட முனைந்தேன். இதனால் நான் பட்டபாடுதான் பலன்! இக்காலத்தில் உண்மையாளர்களுக்கும் உத்தமத் தியாகிகளுக்கும் மதிப்பில்லை! பெருமையில்லை! வெற்றியில்லை! கலிகாலத்தின் கோலம்! என்றாலும் சத்தியத்திற்கு பங்கம் ஒருபொழுது மேற்படாது' உண்மைக்கு கட்டாயம் ஜெயமுண்டு!

வெள்ளிக்கிழமை: இன்று இரவில் அயர்ந்து நித்திரை செய்யும் பொழுது ஒரு பயங்கரக் கனவு கண்டேன். எனது காதலி தாய் நாட்டிலுள்ள ஒரு காளிதேவி சன்னதியில் ஒரு நள்ளிரவில் உருவிய கத்தியுடன் மண்டியிட்டு, 'ஏதேவி! இதோ பிராணத் தியாகம்செய்து கொள்ளுகின்றேன். ஏற்றுக்கொள்' என்று கூறி தனது கத்தியை உயர்த்துவது போலவும், அப்பால் யாரோ அக் கத்தியை கையினின்றும் பறிப்பது போலவும், அவள் மூர்ச்சித்து விழ்வது போலவும், பின் எங்கோ ஒரு மாளிகையில் அடைபடுவது போலவும், தப்பவியலாமல் தத்தளிப்பது போலவும், ஒரு மூடன் அவளை பலவந்தப் புணர்ச்சி செய்ய முயல்வது போலவும், ஆனால் அவள் இடங்கொடாமல் உயிர்விடத் துணிவது போலவும் கண்டேன். திடீரெனக் கண்விழித்தேன். பின் யாதொன்றும் நிகழவில்லை. கனவு பலிக்குமோவென்றெண்ணிப் பயந்தேன். ஒருவாறு திடங்கொண்டு கடவுளைத் தியானம் செய்துகொண்டு திரும்பவும் உறங்கினேன்.

சனிக்கிழமை: இன்று கல்லூரி விடுமுறை. ஆனதினால் காலைப் பொழுதை ஜாகையில் கழித்து, மாலைப்பொழுதை கடற்கரையில்

செலவிட எண்ணினேன். அவ்வாறே சென்றேன். ஒரு பெரிய மனிதர் ஆகாயவசனி மூலம் பிரசங்கம் செய்தார். பிரசங்கம் வீரமாகவும் விளக்கமாகவும் இனிமையாகவுமிருந்தது. முதலில் 'சகோதரிகளே!' என்று ஆரம்பித்தார். எத்தனையோ ஆண்மக்கள் குழுமியிருக்க, அவர்களை முதலில் கூறாமல் பெண் மக்களை ஏன் முதற்படுத்தினர் என்னும் வினு என் இதயத்தில் எழுந்தது. காரணம் என்னவென ஆராயப்புகுந்தேன். 'ஒரு நாட்டின் முன்னேற்றம் எல்லா வழிகளாலும் பெண் மக்களையே சார்ந்திருக்கிறது. ஆனால் இன்றைய உலகில் பெண்கள் சக்தியற்றவர்களாய், தேகபலம் குன்றியவர்களாய் கல்வி வாசனையற்றவர்களாய், அடுப்பூதும் அணங்குகளாய் பிரசவிக்கும் இயந்திரங்களாய் வாழ்கின்றார்கள். இவ்வித தாழ்நிலைக்குக் காரணம் யாரென நோக்கின் ஆண்களே தான்! எனவே பெண்களின் தாழ்நிலைக்குக் காரண கர்த்தர்களாகிய ஆண்மக்களை ஏன் முதற்படுத்த வேண்டும்?' என்று எண்ணியே, தமது பிரசங்கத்தை சகோதரிகளே! என்று ஆரம்பித்தார் போலும். பின்னர் அவர் பேச்சைக் கவனித்தேன். 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஆதவன் அஸ்தமிப்பதில்லை என்பதுபோல், எந்த நாட்டிலும் ஒரு இந்தியனில்லாமலில்லை. இவ்விதப் புகழுக்குரிய இந்தியா இன்று இந்த ஸ்திதியில் இருப்பானேன்? என்றால் பெண்கள் தான் முதற் குற்றவாளிகள். முன்னளில் பெண்கள் நூற்றார்கள் நெய்தார்கள், தாங்களால் நூற்றுநெய்து தரிபிடப்பட்ட துணிகளை உடுத்தினர்கள். அதனல் ஆடைக்காக அரைக் காசும் அன்னியநாட்டிற் புகவில்லை இப்பொழுது 'கதர்' என்றால் 'கனம்' என்கின்றார்கள். இதனைத் தாங்க தகுதியற்ற பெண்கள் எதற்குத்தான் தகுதி! இந்நாளில் ஆடையின் பொருட்டு அயல் நாட்டார் கொள்ளும் பொருள் கொஞ்சமல்ல. மற்றும் இந்தியப் பெண்மணிகளை ஒன்றுக்கும் உதவாதவர்களாகச் செய்ய கொடிய இயந்திரங்கள் குடிபுகுந்தன. இதனல் சுகாதாரம் சாகத் தொடங்கியது. வலிமை யிழந்தனர். ஆக, இந்தியாமட்டுமல்ல, இந்தியா போன்ற ஏனைய தாழ்ந்த நாடுகளும் உன்னதமடையவேண்டுமாயின், அந்நாட்டு பெண்மணிகள் விழித்தெழுந்து, அயல்நாட்டுப் பண்டங்களை அறவே யொழிக்க முன் வரவேண்டும். கைத்தொழி லபிவிருத்தியில் 'நான், நீ' என்று போட்டியிட வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்' எனக் கூறி முடித்தார்.

## அத்தியாயம் 17.

### கவர்ந்த கள்வன்?

ஆதவன் அஸ்தமித்த நேரம். பிசுபிசுவென்று மழைபெய்து கொண்டிருந்தது. கிருஷ்ணபுரியிலிருந்து வடக்கு நோக்கிப்போகும் ஒரு வண்டிப்பாட்டை. வழியிலுள்ள தீபங்களெல்லாம் மூடுபனி

யால் மூடப்பட்டாற்போல் மங்கலாகவிருந்தன. பாட்டைப்பாக்கம் முழுமையும் சேறும் சகதியுமாய் இருந்தது. அவ்வழி நடப்போர் யாருமிலர். பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் வெள்ளம் பயங்கரமாகவிருந்தது இந்நிலையில் ஒரு ஆடவன் கருப்பு நிறமான மழை ஆடையை உடுத்தி, கையில் ஒரு பாட்டரி விளக்குடன் அவ்வழியே நடந்துகொண்டிருந்தான். அவனுக்கு பின்னால் சில அடி தூரத்தில் இரண்டு பிச்சைக்காரர்கள் போய்க்கொண்டிருந்தனர். முன்னே சென்ற மனிதன் சிறிது நடப்பதும், அப்பால் பின்னால் வருகிறவர்களைச் சற்று திரும்பிப் பார்ப்பதும் நடப்பதுமாகவிருந்தான். இவ்வாறாக அரைமணி நேரம் கடந்த பின் முன் சென்ற ஆடவன் ஒரு அழகிய சிறிய பங்களாவை யடைந்தான். கதவுதிறக்கப்பட்டது. தடதடவென்று ஹாலினுள் நுழைந்தான்.


இவன் வரவைக்கண்ட அங்கிருந்த ஒரு வாலிப மங்கை திடுக்கிட்டு சுவரோடு சுவராய் ஒட்டினாள். இதனைக்கண்ட அவ்வாடவன், 'கண்ணே! நானென்ன பேயா? அன்றி பிசாசா? ஏன் இவ்வளவு பயம்? அருகினில்வா? வீணில் காலத்தைக்கடத்தி என் கோபத்திற்காளாகாதே. என் விருப்பத்திற்கிணங்கினால் நீ ஒரு மகாராணிபோல் வாழலாம். நீ இருவென இருப்பேன். உன் கட்டளையை சிரமேற்றாங்கி நடப்பேன்! வா! கண்மணி! காதற்கனியே! இன்னும் வர்மமேன்!' என்றான்.

இச்சொற்களைச் செவிமடுத்து, தப்ப வழியற்றுவாடி அங்கு நின்றிருந்த நங்கையாம் நம் கமலகாந்தா தீயில் விழுந்தபுட்போல் துடித்தாள். எனினும் நயவார்த்தைகளால் பயன்பெற வெண்ணி, 'அன்புடையோய்! உலகத்து மக்களை சகோதர சகோதரிகளாகப் பாவிக்க வேண்டுவது ஆறறிவுள்ள மாந்தர்கடமை. அவ்வாறின்றி கண்ட பெண்களின்மேல் கொண்ட மையலைத் தீர்த்துக்கொள்வதென்பது விலங்கினச் செயல். இதனைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். தங்களுக்கு இவ்விஷயத்தை ஒரு பேதைப் பெண் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. ஆனால் மக்களுக்கு மறதி என்பது சீக்கிரத்தில் ஏற்படுவதினால் ஞாபக மூட்டினேன். ஏழை என்னை தொந்தரவு செய்ய வேண்டாம். அன்றியும் ஒன்றுபடாதவிடத்து இன்பம் நுகரவும் இயலாது. ஆதலின் என்னை விடுவித்து விடுங்கள்' என்று மன்றாடினாள்.

அவ்வாலிபன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். 'காதலி! உன் வேதாந்தமெல்லாம் இங்கு வேண்டற்பாலது! ஏன் வீணில் வார்த்தையாடுகிறாய்? உன்னை தொந்தரவு செய்ய என் மனம் இசையாது. அருகினில் வா' என்றான்.

'அடா! துன்மார்க்கா! என்ன துணிச்சல் உனக்கு! பிற பெண்ணொருத்தியை அவள் விருப்பத்திற்கு மாறாக, 'காதலி!' என்றழைத்தாய்!......நன்று! இவள் பேதைப் பெண்...இவளால் யாதுசெய்ய

முடியுமென்றெண்ணினுய் போலும்! ரஜபுத்திர வீரப் பெண் திலகங்கள் உதித்த பாரத தேசத்தில் உதித்தவள் நான்! ஞாபக மிருக்கட்டும். எனக்கும் பலமுண்டு! ஆணவம் உண்டு! ஆங்காரம் உண்டு! எனது கற்பைக் காத்துக்கொள்ள என் தேகத்திலுள்ள இறுதிச் சொட்டு இரத்தம் சிந்தும்வரை போராடியே தீருவேன். எனவே வீணில் புாபத் திற்குள்ளாகாதே' என்று கூறும்பொழுது அவ்வாலிபன் அவள் மேல் புலிபோல் பாய்ந் தான். கதவு திடீரெனத் திறக்கப்பட்டது. முன்பு இவனைப் பின் தொடர் ந்து வந்த இருபிச்சைக் காரர்களும் உள் நுழைந் தனர். வாலிபன் திடுக் கிட்டான். மெய் மயக் கம் கொண்டான். அப் பிச்சைக்காரர்கள் அவனை நோக்கி,



'அடா! கதிரேசா! குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பே! உன் பெற்றோரின் குலமென்ன! தரமென்ன! அந்தஸ்தென்ன! மானமென்ன! மரியாதை என்ன! அவர்களுக்கு நீ மகனுய் பிறந்தாய்! உனக்குமானமில்லையா! வெட்க மில்லையா! இரதிபோன்ற பெண்டாட்டி வீட்டிலிருக்க, அவளை வஞ்சித்து, கேவலம் நாயினும் கேடு கெட்ட நிலையில் ஆரம்பித்து விட்டாய். ஒரு பேதைப் பெண்ணை—அதிலும் சொந்த மாமன் மகளை இவ்வாறு செய்யத் துணிந்தாய்! அடபாவி! இயற்கையில் இரக்கச் சித்தமில்லாவிட்டாலும் அவளின் பரிதாப நிலையையும் தாழ்ந்த சொற்களையும் கேட்டுமா இரக்கமேற்படவில்லை! என்ன விந்தை, உன் மனம் என்ன கல்லா? அன்றி இரும்பா?' என்று ஒருவர் மாற்றி ஒருவர் இடித்துரைத்தனர்.

கதிரேசன், செய்யும் உபாயம் தோன்றாது தலைகுனிந்து கண்ணீர் சொட்ட நின்றான். தனது வருங்கால நிலை எப்படியோ வெனப் பயந்தான்.

இதுவரையும் அவனை இன்னனென அறியமாட்டாமல் தத்த ளித்த கமலகாந்தா, தன்னை அக்கதிக்குள்ளாக்கிய கதிரேசனின் கொடுஞ்செயலை எண்ணி பரிதவித்தாள். சற்று தெளிந்து கடவுள்

தான் பிச்சைக்காரர்கள்போல் உருக்கொண்டு தன்னைக் காப்பாற்ற வந்ததாக எண்ணி, தெண்டனிட்டு, கரங்குவித்து,

‘மெய்யடியார்களே! இவ்வாபத்தில் தத்தளித்த என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு என்ன கைமாறு செய்யப் போகின்றேன்! அடியவர்காள்! இங்கு எவ்வாறு வந்தீர்கள்?’ எனக் கேட்டாள்.

அவ்விரு பிச்சைக்காரர்களுள் சிவந்தமேனியும், பூரித்த மார்பும் அழகிய தேகக்கட்டும் அமைந்த ஒருவன் கமலகாந்தாவை நோக்கி, ‘பெண்ணே! வெளுத்ததெல்லாம் பாலல்ல! மின்னுவதெல்லாம் பொன்னல்ல! அதேபோல்...’ என்று முடிப்பதற்குள்,

‘அப்படி என்றால் அர்த்தமென்ன?’ என்று கேட்டாள் கமலகாந்தா.

‘பெண்ணே! எல்லாம் வரவர விளங்கும்! அது கிடக்கட்டும்;.... கமலகாந்தன் க்ஷேமந்தானா?’ என்று கேட்டவண்ணம் நகைத்தான்.

கமலகாந்தா சற்று திகைத்தாள். ‘எனக்கும் அவருக்கு மேற்பட்ட பாந்தவ்யத்தை தாங்கள் எப்படி உணர்வீர்கள்? ஐயா! என்னை மென்மேலும் சோதனைக்குள்ளாக்க வேண்டாம். தாங்கள் யார்? தங்களின் விருத்தாந்தமென்ன? கூறுங்கள்’ என்று கெஞ்சிக் கேட்டாள்.

அப்பிச்சைக்காரன் முதலில் தனது சிகையை அவிழ்த்தான். பின்பு நீண்ட கூந்தலை கோதி அள்ளி முடித்தான். பின்பு தானணிந்திருந்த கிழிந்த கந்தலுடைகளை நழுவவிட்டான். அவனாக நடித்த அவ்வுருவம் அவளாக மாறியது. இதனைக் கண்ணுற்ற கமலகாந்தா, அன்புப் பெருக்கெடுக்க, ‘சரோஜினி! நீயா! நான் காண்பது நீதானா? ஆம்! உனக்கு சகல வேஷமும் பொருந்தும்போலும்! இப்பொருத்தங்கள் உனது தொழிலுக்கு மிகவும் பயன்பெறும். அதுபோகட்டும் அவரிடமிருந்து கடிதங்கள் வந்ததா? அவரின் அன்னை க்ஷேமந்தானா?’ எனது பெற்றோர்கள் சுகமா?’ என்று பல கேள்விகளைக் கேட்டாள். சரோஜினி அனைவரின் க்ஷேமலாபங்களையும் கூறி, கமலகாந்தனின் கடல் சம்பவம் முதலியவற்றையும் கூறினாள்.

இவையாவும் கேட்ட கமலகாந்தா முதலில் சற்று மனங்கலங்கினாளென்றாலும், பின்யாவும் நன்மையாக முடிந்தமைபற்றி மகிழ்வெய்தி, அருகில்நின்ற மற்றொரு பிச்சைக்காரன் யாரெனக்கேட்க,


‘அவர் போலீஸ் அதிகாரி. இந்த விவகாரவேலைக்கு எனக்கு உதவியாகவும், கதிரேசன்தான் கள்வனென்பதை மெய்ப்பிக்கவும் உடனழைத்து வந்தேன்’ என்றாள் சரோஜினி.

மணி சுமார் 9 இருக்கலாம். சரோஜினியும் போலீஸ் அதிகாரியும் கதிரேசனையும் கமலகாந்தாவையும் உடனழைத்துக்கொண்டு வாயற்புறத்திற்கு வந்தனர். ஒரு மோட்டார்வண்டி ஆயத்தமாக நின்றிருந்தது. அதில்யாவரும் அமர்ந்துகொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டனர்.

(தொடரும்)

# உள்ளங்கவர்ந்த கள்ளன்

[திருவையாறு கே. வைத்தியநாதன்]



மோகனபுரியிலிருந்து நவீனபுரிக்குப் போகும் சாலை. அதன் இருபுறங்களிலும் நிழல்தரும் மரங்கள் பல. ஊர் எல்லையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரம்வரை எல்லாம் மாமரங்கள். பருவ காலம் வந்ததால் அவையாவும் காய்கனிகளுடன் குலுங்கிக் கொண்டிருந்தன.

சாலையோரத்தில் வடபுறமாக ஒரு சிறுவாய்க்கால். அது அந்தக் கடுங்கோடையிலும் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் ஓரமாக சாலையின் சரிவில் ஒரு குடிசை அமைந்திருக்கிறது. அதற்கு முன்னால் ரஸ்தாவில் பரப்பியிருந்த தென்னங் கீத்துக்களின்மீது மாங்கனிகள் பல குவியலாகக் கிடந்தன.

ஒருதினம் காலைநேரம். மரங்களைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டிருந்த கிழவன் குப்பன் மேற்குதிசையிலிருந்து வந்துகொண்டிருந்தான். அவன் கரங்களில் சில சிதைந்த கனிகளிருந்தன. வழிநெடுக அவன் யாரையோ திட்டிக்கொண்டே வந்தான். ஆனால் அந்த வசவுகளுக்குரியவர் யாரும் அங்கிருந்ததாகத் தெரியவில்லை.

குப்பனது பேத்தி பொன்னி அப்போதுதான் கீத்தின்மீது குவியலாகக்கிடந்த பழங்களை ரகவாரியாகப் பிரித்து வைக்கலானாள். அதைக் கண்ட கிழவன் 'ஏ! களுதே! என் இந்நேரம்! காலங்காத்தாலே பிரிச்சுவச்சா போறவுங்க வர்ரவுங்க வாங்கிகிட்டு போவாங்களா! என் களுதே! வயசாகியும் ஒனக்கு இப்படிப் புத்தியில்லாமே போச்சு! விடிஞ்சு காலுநாளிமட்டும் தூங்குனா வீடு எப்படி உருப்புடும்! —களிச்சல்லெ போறகுட்டிகள் மரத்திலே காய்களை பொளுதுக்கும் உதித்துகிட்டேதான் இருக்கு! அவன் நாசமாப்போயிட எந்தப் பயமவனோ ராவுக்கு ராவே வந்து பளங்களெ கொண்டுகிட்டுப் போயிட்டான்!.....' என்று ஆத்திரத்தோடு சபித்துக்கொண்டே தன் கையிலிருந்த கனிகளைக் கீத்தின்மீது போட்டுவிட்டுக் குடிசையினுள் நுழைந்தான்.

பொன்னி வாய்பேசாது பழங்களைப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தாள். அவளது பாட்டனான அந்தக் கிழவன் தினமும் இப்படித்தான். பழங்கள் திருட்டுப் போகும்போதெல்லாம் அவள்மீது எரிந்து விழுவது அவன் வழக்கம். அவனது வசவுமொழிகளைக் கேட்டுக்கேட்டு அவள் உள்ளம் வெம்பிப்போய் விட்டது. வேறு புகலிடம் இல்லாததால் அவனே கதியென்றிருந்தாள்.

என்னவோ யோசித்தவண்ணம் அவள் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள். தன் நிலைமையையும், உலக நிலைமையையும் ஒருவாறு அறிந்து கொள்ளத்தக்க சக்தி இப்போது அவளுக்கு உண்டாய் விட்டது. படிப்பு அதிகமில்லையென்றாலும், அவள் அறிவிற் பெரியவளாக விளங்கினாள்.

அவள் நல்ல அழகிதான். ஆனாலும் அந்த அழகு சேற்றில் அழுந்திய தாமரை மலர்போல் மங்கிச் சோபையின்றிக் கிடந்தது. தன்னைச் சிங்காரித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை அவளுக்கு மெத்தவுண்டு. ஆனால் அவளது தினசரிப் பொழுதில் அதற்கென ஒரு துளிநேரங்கூட ஒதுக்கப்படுவதில்லை. பெண்களுக்குத் தாயில்லையானால் சீருஞ் செல்வாக்குமேது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக அவள் அமைந்திருந்தாள்.

கடந்த இரவு நடந்த களவைப்போன்ற சம்பவங்கள் பல அடிக்கடி நடந்ததுண்டு. அப்போதெல்லாம் அவள் நெஞ்சம் பதறாமலிருந்ததில்லை. குத்தகையில் நல்ல லாபம்கிடைக்க வேண்டுமென்று அவள் தினமும் கடவுளைத் துதித்துவந்தாள். அதுபோலவே கிழவன் சந்தைக்குப் போய்வரும் போதெல்லாம் இடுப்பைச் சுற்றியுள்ள பணப்பையை நிரப்பிக்கொண்டு திரும்புவான். ஆனால் அவ்வளவு பணத்தையும் அவன் என்ன செய்கிறான் என்று அவளுக்குத் தெரியாது. வீட்டிற்குச் செலவழிப்பதில் கிழவன் செட்டாயிருப்பதில்லை. அவசியமான பொருள்களைச் சந்தைக்குப்போய் வரும்போது வாங்கி வந்து விடுவான். என்றாலும் ஒவ்வொரு தடவையும் அவன் இடுப்புப் பையை அவிழ்த்துப் பணம் எண்ணாமலிருப்பதில்லை.

நேற்று நடந்த களவைக்குறித்து அவள் சிறிதும் கலங்கவில்லை. ஏனெனில் அவளுக்கு அந்தக் களவுசெய்த பேர்வழி யாரெனத் தெரியும். வாசகர்களே! அவன் வேறு யாருமல்ல. ராகவன் என்ற அவளது உள்ளங்கவர்ந்த கள்ளனே யாவன்!

ஒருசமயம் அவள் பாட்டன் சந்தைக்குப் போயிருந்தான். அப்போது குடிசையில் அவள் மட்டும் தனியே யிருந்தாள். பொழுது சாய்ந்து இருட்டியும் அவன் திரும்பிவரவில்லை. அதனால் அச்சத்தோடும் ஏக்கத்தோடும் அவள் குடிசை வாயிலில் குந்தியிருந்தாள். அப்போது யாரோ ஒரு வாலிபன் சற்று தூரத்தே நின்று தன்னைக்

கவனிப்பதைக் கண்டாள். முதலில் பயந்தாளாயினும் பிறகு திடங் கொண்டு உரத்த குரலில் 'யாது?' என்றாள்.

அந்த வாலிபன் சற்று அருகில் வந்து நின்று 'பொன்னீ! எனக்கு உன்னைத் தெரியும். உனக்கு என்னைத் தெரியாது' என்றான்.

குடிசையிலிருந்த மங்கலான வெளிச்சத்தில் அவன் முகம் கொஞ்சம் தெரிந்தது. பொன்னி ஆச்சரியத்தோடு அவனை நோக்கினாள்.

'எனக்கு உங்களைத் தெரியாமலிருக்க, உங்களுக்கு மட்டும் என்னை எப்படித் தெரியும்?'

'எனக்குப் பொய்சொல்லத் தெரியாது. நான் பிராமணனானாலும் உன் குத்தகை மரங்களிலுள்ள மாம்பழங்களைத் திருடுபவர்களில் நானும் ஒருவன். இப்படிச் சொன்னால்தான் நான் யாரென்று உனக்குப் புரியக்கூடும்'

'என்ன தைரியம். பிராமணப்பிள்ளையாகப் பிறந்து... அம்மாடி! திருட்டில் கைதேர்ந்தவர்போலிருக்கே!' என்றாள் பொன்னி மெதுவாக.

'எப்படி வேண்டுமானாலும் வச்சுக்கோ! என்ன செய்வது! இல்லாக் கொடுமையால் இந்த வேலையில் இறங்கிவிட்டேன்.'

பொன்னி பயந்தாள். தான் தனியே யிருப்பதால் என்ன செய்வானோ என்று ஏங்கினாள். எப்படியாவது அவனை அவ்விடத்தி லிருந்து அனுப்பிவிட்டால் நல்லது என்று நினைத்தாள்.

'நல்லது. இப்போது ஏன் இங்கே வந்தீங்க?' என்றாள்.

'நீ அழைத்ததால்தான் வந்தேன்' என்றான்.

'ஐயோ! நல்லாருக்கே நீங்க சொல்றது! நான் எப்போ உங்களைக் கூப்பிட்டேன்?

'ஏன், சற்றுமுன் 'யாது' என்று என்னைக்கேட்டது யார்?'

'அதனால்தான் வந்தீர்களாக்கும்!'

'இல்லாவிட்டால் நான் ஏன் உன்னருகில் வருகிறேன்? நீ சுகமாயிருக்கிறாயா என்று தூரத்தில் நின்றபடியே பார்த்துவிட்டுப் போய்விடமாட்டேனா?'

ஓகோ! கள்ளரான உமக்குக்கூட என்மேல் அவ்வளவு கரிசனமோ!'

'உன் சொத்தைத் திருடி ஜீவிக்கும் நான் இதுகூட செய்யாவிட்டால் தெய்வம் என்னைச் சும்மாவிடுமா?'

'கள்ளர்களுக்குத் தெய்வபக்திகூட உண்டா?' என்று நகைத்தாள். பிறகு 'கிழவனார் வந்துவிடுவார். உங்களைக் கண்டுகொண்டால் அப்புறம் உங்களைச் சும்மாவிடமாட்டார். சீக்கிரம் போய்விடுங்கள்' என்றாள்.

'பொன்னீ! இப்படிப் பார். என்னை வெறுங்கையுடன் அனுப்ப உனக்கு மனம் வருகிறதா?' என்றான்.

'மாம்பழம் தருகிறேன். கொண்டுபோகிறீர்களா?'

'பழமா! மரத்திலுள்ளவைகளெல்லாம் என்னுடையதுதானே! வேண்டும்போது நானே அவற்றைப் பறித்துக்கொள்வேனே!'

'அதைத்தவிர வேறென்ன என்னிடத்திலிருக்கிறது?'

'என்னவா?......' அவளை ஆசையோடு அவன் உற்றுப் பார்த்தான்.

பொன்னிக்கு அவன் கருத்து ஒருவாறு விளங்காமலில்லை. அவனுடைய முகத்தோற்றத்திலிருந்து அவன் எண்ணத்தை ஊகித்துக் கொண்டாள் எப்படி அவனைப் போகச்சொல்வது என்று சிந்திக்கலானாள்.

அச்சமயம் தூரத்தில் யாரோவரும் அரவங்கேட்டது. வாலிபன் அந்தப் பக்கமாகத் திரும்பிப்பார்த்தான். உடனே 'இன்னொரு நாளைக்கு வருகிறேன்' என்று கூறிவிட்டு ஓடிமறைந்தான்.

இதுதான் ராகவனுக்கும் பொன்னிக்கும் முதன் முதலாக நட்பு உண்டான வரலாறு. அதுமுதல் அவன் கிழவன் இல்லாத சமயங்களில் குடிசைக்குவரத் தவறுவதில்லை. பருவமடைந்தையான பொன்னிக்கு ஆரம்பத்தில் அவன் வருகை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவனால் தன் உடல் மாசுபடுத்தப்படுமோ எனக் கவலைகொண்டாள். தன்னிடத்தில் அவன் எதையோ எதிர்பார்க்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டாள். ஒவ்வொருநாளும் அவர்களுடைய சினேகம் முதிர்ந்து வந்தது. அவனை அடிக்கடிப் பார்க்கவேண்டுமென்ற ஒரு பிரேமை அவள் உள்ளத்திலே வளர்ந்துகொண்டே வந்தது.

* * *

ஒரு சந்தைதினம் வந்தது. கிழவன் வழக்கம்போல் பழங்களுடன் போய்விட்டான். அவன் தலை மறைந்ததோ என்னவோ ராகவன் மடமடவென்று குடிசைக்குள் ஓடிவந்தான். உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்த பொன்னி திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினாள்.

'ஆ! நீங்களா! அதற்குள் எப்படித்தான் கிழவனார் இல்லை என்று உங்களுக்குத் தெரிந்ததோ!'

'எனக்கா! அதைவிட வேறுவேலை எனக்கு ஏது? நல்லது. இன்று நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும்'

பொன்னி வியப்போடு அவனை நோக்கினாள்.

'உனக்குப் புரியவில்லையா ? பாவம்!—இவ்வளவு நாட்களாகப் பழகியும் நீ இன்னும் என் கருத்தை உணர்ந்துகொள்ள வில்லையா? அப்பா! உன் மனம் கல்போலிருக்கிறது !'

'என் மனம் கல்லா...இருக்கட்டும். அதனால் இப்போது என்ன?'

'என்னவா?—அப்படியானால் நான் கொண்டிருந்த எண்ணமெல்லாம் வீண்தானா?

'நீங்கள் சொல்வது எனக்கொன்றுமே புரியவில்லை'

ராகவன் அவளைக்கூர்ந்து நோக்கினான். பொன்னி மௌனமாக எழுந்து கைகழுவினாள். பிறகு பாத்திரங்களையெடுத்து முற்றத்தில் போட்டு நீர் தெளித்துவிட்டு வாயிற்படியோரமாக வந்து நின்றாள். மீண்டும் ராகவன் பேசத்தொடங்கினான். 'பொன்னீ! இனி நாம் அதிக காலம் இங்கே தாமதிக்கமுடியாது. நாம் இதைவிட்டு விரைவில் வெளியேறி விடவேண்டும். அதற்கு உன் அபிப்பிராயத்தைத் தெரிந்து போகவே இப்போது வந்தேன்.

'திடீரென உங்களுக்கு ஏன் இந்த யோசனை வந்தது?'

'பொன்னீ! அதோ தெரிகிறது பார், அக்கிரகாரத்தின் மத்தியில் இடிந்தும் தகர்ந்துமான ஒருவீடு! அது நேற்றுவரை எனக்குச் சொந்தமாயிருந்தது. பெற்றோரை இளம்பருவத்திலேயே இழந்த நான் இப்போது அந்த வீட்டையும் இழந்துவிட்டேன். என்னைப் படிக்க வைத்ததற்காக அந்த வீட்டைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார் என் சிறிய தந்தை. இனி எனக்கு இந்த ஊரில் வசிக்கவே பிரியமில்லை. மேலும் நான் இவ்வாறு அடிக்கடி இங்குவந்து போவதை யாரேனும் கண்டு கொண்டால் நம்மிருவருக்கும் அபாயந்தான். எனவே விரைவில் எங்கேனும் போய்விடுவது எனத் தீர்மானித்து விட்டேன். அதிகம் ஏன்? நாமிருவரும் ஒருவருக்குந் தெரியாமல் நாளையே வெளிக்கிளம்ப வேண்டும். கண்ணமங்கலம் என்ற நகரம் மிகப்பெரியது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கு எனக்கு ஏதேனும் வேலைகிடைக்காமல் போகாது. உன்னை நான் முறைப்படி அங்கே மணஞ்செய்து கொள்ளுகிறேன்......'

பொன்னி நிமிர்ந்து பார்த்தாள். அவள் 'நீங்கள் பிராமண குலத்திற் பிறந்தவுங்க. உங்களை நான் கலியாணஞ் செய்துகொள்வது என்றால் பொருந்துமா? அது மகா பாதகமான காரியமல்லவா?'

'பொன்னீ! நீ தெரியாமல் சொல்லுகிறாய். என் மனதை நீ நன்றாய் இன்னும் அறிந்துகொள்ளவில்லை போலும்! பாபம், பாதகம் என்ற ஜாப்தாவில் சேர்க்கப்படும் செய்கைகள் வேறு. இப்போது நாம் எண்ணியிருக்கும் செயல்வேறு. பொன்னீ! உனக்காகவே சுற்

றத்தார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் அந்தத் துரோகிகளைத் துறந்து தலைமுழுகி விட்டேன். அவர்களது தன்னலப் பேச்சுக்களையும், வீண்ஜாதிக் கட்டுப்பாடுகளையும் உதறித் தள்ளிவிட்டு உன்னையே எனது வாழ்க்கையின் லட்சியமாகக்கொண்டு ஒரு நூதனவாழ்வில் பிரவேசிக்க எண்ணியிருக்கிறேன். இப்போது வேண்டியதெல்லாம் நீதான்!........'

ராகவன்மீது அவளுக்கு மட்டற்ற ஆசையுண்டு. அவனை மணஞ் செய்துகொள்ள அவளுக்குச் சம்மதந்தான். ஆனால் அது பாவம் என்று அவள் எண்ணினாள். என்றாலும் அவனது ஆசையை மறுக்க அவளுக்கு மனந்துணியவில்லை. நெடுநேரம் தனக்குள் சிந்தித்துப் பார்த்தாள். முடிவில் அவன் விருப்பின்படியே நடப்பது எனத் தீர்மானித்தாள். அப்போது அவள் விழிகளிலே புதியதொரு ஜீவ ஒளி வீசியதைக் கண்டான். அவளது இதழ்கள் முறுவலித்துக் கொண்டிருந்தன.

அதைக்கண்ட ராகவன் உள்ளத்தில் உவகைபொங்க 'கண்ணே! போய்வரட்டுமா? பொழுது விடிவதற்குள் நாம் இதைவிட்டுப் போய் விடவேண்டும். தெரிகிறதா?' என்றுகூறி அவளது சிவந்த அதரங்களில் முதன்முதலாக ஒரு முத்தந்தந்து சென்றான்.

* * *

இது நடந்து ஒருமாத காலமாய்விட்டது. பொன்னியும் அவள் காதலனும் கண்ணமங்கலத்தில் ஒரு சிறுவீட்டில் வசித்து வருகின்றனர். சீர்திருத்த முறையிலே இருவரும் சதிபதிகளாய் விட்டனர். அவனுக்கு ரயில்வே தொழிற்சாலையில் ரூ. 30 சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது.

இவ்வாறு அவர்கள் குடித்தனம் தொடங்கிய சில தினங்களில் மோகனபுரியில் கிழவன் இறந்து போனான் என்ற செய்தி அவர்களுக்கு எட்டியது. இருவரும் அங்குச்சென்று கிழவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச்செய்து நேரமாய் விட்டபடியால் அந்தக் குடிசையில் இராப்பொழுதைப் போக்கத்தங்கினர்.

அப்போது பொன்னி குடிசையினுள் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டி 'இங்குதான் இருட்டுக்காலங்களில் கிழவனார் படுத்துக்கொள்வது வழக்கம்' என்று சொல்லித் தன் கால் விரலால் மண்ணைக்கிளறினாள். ஏதோ கெட்டியாகக் காலில்படவே இருவரும் அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தனர். என்ன வேடிக்கை! ஒரு பெரிய மண் பானை அகப்பட்டது! ஆ! அது நிறைய வெறும் வெள்ளி ரூபாய்கள். அதுகண்ட காதலர்களிருவரும் அடைந்த மகிழ்ச்சிக்களவில்லை!

---

# பேய் வாத்தியார்

[P. T. V. கிரி]



மின்சார சக்தி உலகில் பரவ ஆரம்பித்து விட்டது. எங்கே பார்த்தாலும் மின்சாரவிளக்குகள், ஒவ்வொரு வீட்டிலும் காந்தவிளக்குகள், கலியாண காலங்களிலும் ஊர்கோலம் முதலிய சுபகாரியங்களிலும் மின்சார விளக்குகள்தான் அதிகம். அதிகம் சொல்லுவானேன்! உலகமே மின்சாரமயந் தான்.

இதற்காக ஒவ்வொரு பட்டினங்களிலும் மின்சார சக்தியை உண்டாக்கவும் அதில் இருந்து அதை வெளியே பரப்பவும் (Power House) பவர் ஸ்டேஷன்கள் கட்டப்படுகின்றன. சாதாரணமாக இக்காலத்தில் அதில் யாராவது வேலை தெரிந்தவர்கள் வேலை செய்யலாம். ஆனால் அக்காலத்திலோ மின்சாரசக்தி உலகில்—முதல்முதல் அது பரவின காலத்தில்—ஐரோப்பிய துரைகள்தான் வரவேண்டும்.

பம்பாய் மாகாணத்தில் மின்சாரசக்தி வந்துவிட்டது. தெருக்களில் எல்லாம் காந்தவிளக்குகள் போடப்பட்டன. வீடுகளில் வைத்துக்கொள்ளலாம் என்று பம்பாய் கார்பரேஷன் உத்தரவு போட்டிருக்கின்றது. ஜனங்கள் விளக்குகளை ஆச்சரியமாய் பார்கின்றார்கள். அங்கங்கே சப்டேஷன்கள் கட்டப்படுகின்றன. ஊருக்கு வெளியே பெரிய பவர் ஸ்டேஷன் கட்டி இருக்கிறார்கள். அதில் வேலைசெய்ய மிஸ்டர் ஸ்டீபன் என்றொரு ஆங்கில கனவானை அழைத்து வந்திருக்கிறார்கள்.

மிஸ்டர் ஸ்டீபன் இந்தியாவுக்கு வரும்போது தன்னுடன்கூட தன் வேலையாளான, காங்கோ என்பவனை அழைத்து வந்திருந்தார். காங்கோ என்பவன் கறுப்பு இந்தியரை சேர்ந்தவன் (நீக்ரோ), ஆபிரிக்காவாசி; ஒரு சமயம் ஸ்டீபன் ஆபிரிக்கா போயிருந்தபோது காங்கோவை அழைத்து வந்தார். காங்கோ முதல்முதல் லண்டன் பட்டினத்தைப் பார்த்து எவ்வளவு ஆச்சரியப் பட்டான் தெரியுமா?

பெரிய மின்சார வண்டிகளையும் ரயில்களையும் பார்த்து அதில் 'ஏறமாட்டேன்' என்று பிடிவாதம் செய்தான். அப்பால் ஸ்டீபன் துரை துப்பாக்கியை எடுத்து காண்பித்த பிறகுதான் பயந்து நடுக்கத்துடன் ஏறினான். லண்டனில் உள்ள பெரிய மாடி வீடுகளையும் கட்டடங்களையும் அதில் உள்ள மனிதர்களையும் பார்த்து எவ்வளவு ஆச்சரியப்பட்டான் தெரியுமா?

திரு. ஸ்டீபன் வீட்டில் இருக்கிற மோட்டார் வண்டியின் ஹாரன் சப்தத்தை கேட்டு அப்படியே துள்ளி விழுந்தான். வந்த புதுசில் குஷன் நாற்காலிகளில் உட்காரவே மாட்டான். ஒருசமயம் அதில் உட்கார அது இவனை

அப்படியேஅலக்காக தூக்கியெறிய, அப்படியே எகிறிவிழுந்தவன். இவனுக்கு அந்த இடமே பெரிய நரகவேதனையாய் இருந்தது. இதெல்லாம் பிசாசின் செய்கைகள் என்று வாயினூடே முணுமுணுப்பான். இவன் இதெல்லாவற்றையும் பார்த்து ஸ்டீபனை ஒருபெரிய வெள்ளைப் பிசாசு என்று எண்ணினான்.

திரு. ஸ்டீபன் தூரவருகிறார் என்றால் அவனுக்கு சர்வ அங்கங்களும் ஒடுங்கிப் போகும். அதற்கு தகுந்தாப்போல் திரு. ஸ்டீபனும் பெரிய கோபக்காரர். வீட்டில் உள்ள சர்வ வேலையாட்களுக்கும், மனைவி உள்பட, ஸ்டீபன் என்றால் கொஞ்சம் பயம்தான். நிமிஷத்துக்கு நிமிஷம் கோபம் வந்துவிடும். எதிரில் அகப்பட்ட எல்லாரையும் திட்டிக்கொண்டே போவார். பாவம் ஏழை காங்கோ என்ன செய்வான். இவருடைய கோப சமயத்தில் அவன் எதிரே வந்தால் இவருடைய பூட்ஸ்காலால் உதைகொடுப்பார். காங்கோ இவருடைய வீட்டுக்கு வந்ததுமுதல் பெரிய பெரிய இயந்திரங்கள் தண்ணீர் தொட்டிகள் இன்னும் அநேக பெரிய கடினமான வேலைகளை வெகு அநாவசியமாக செய்வான். கடினமான வேலைகளை செய்வதற்கும் தூக்குவதற்கும் எத்தனை ஆட்கள் இருந்தாலும் நமது காங்கோவைத்தான் முதலில் கூப்பிடுவார்கள். நமது காங்கோவும் அவ்வளவு பெரிய திடகாத்திர திரேகி.

எனவே மிஸ்டர் ஸ்டீபன் இந்தியாவிற்கு வரும்போது தனது முக்கிய ஆளாக காங்கோவை அழைத்து வந்ததில் ஆச்சரிய மொன்றுமில்லை.

இந்தியாவிற்கு வந்து ஒருமாதம் ஆனது. அவருக்கு இந்தியா புதிது ஆகையால் தன்னுடைய பவர் ஸ்டேஷனைவிட்டு வெளிவருகிறதே கிடையாது. சதாகாலமும் ஆபீஸ் அறையிலேயேதான் இருப்பார். சாயந்திரம்மட்டும் தன் பங்களாவிலேயே உலாத்துவார். அவருடைய பங்களாவும் பவர் ஸ்டேஷனுக்குள்ளே கட்டப்பட்டிருந்தது. அப்படி உலாவிவரும்போதுகூட காங்கோதான் பேசிக்கொண்டு வருவான். மற்றயாரும் அவர்கூட பேசவேமாட்டார்கள். அவரைக் கண்டால் எல்லோருக்கும் வெறுப்புத்தானே! மேலும் அவர் வந்த புதிதில் யார் வெள்ளை நண்பர்கள் அகப்படபோகிறார்கள். பாவம் நமது காங்கோ இந்தியாவிற்கு வந்தது அவனுக்கு பெரிய வேதனையாய் விட்டது. அவருடைய பூட்ஸ் முதலியவைகளை துடைக்கிறதும் படுக்கை போடுகிறதும், பட்லர் சமையல்செய்தால் அதை பரிமாறுகிறதும்தான் இவன் வேலை. பட்லர்கூட அவர் எதிரில்நின்று சரியாக பேசமாட்டான்.

ஸ்டீபனின் அந்தரங்க வேலைகளை எல்லாம் நமது காங்கோ ஒருத்தனே கவனித்து கொண்டிருந்தபடியால், இவனுக்கு பூட்ஸ் உதைகள் இங்கிலாந்தைவிட இந்தியாவில் அதிகம் கிடைத்தன. அங்கேயாவது இவருடைய கோபத்தை பங்கிட்டுகொள்ள அநேக ஆட்கள் இருந்தார்கள். இங்கே இவன் ஒருத்தனே அவர் கோபத்திற்கு எல்லாம் ஆளாகவேண்டும். ஒவ்வொரு நாளைக்கு ஸ்டீபன் தன்னுடைய அறையில் இருந்து வெளிவருவதே கிடையாது. அப்பொழுது இவன் அவர் என்ன பண்ணுகிறார் என்று மெள்ள எட்டி பார்ப்பான். அவர் இயந்திரத்தினிடம் போராடி கொண்டிருப்பதை பார்த்து 'எஜமான்' என்பான். உடனே வந்துவிடும் கோபம். வந்து கழுத்தைப் பிடித்து கெட்டித்தள்ளி காலால் உதைகொடுப்பார். பாவம் காங்கோ பேசாமல் வந்து படுத்துக்கொள்வான். இராத்திரி காலங்களில் இயந்திரங்களின் சப்தங்களும் அதில் இருந்து மின்சார பவர்கள் உண்டாவதும் இவனுடைய மனதை

பேதலிக்க செய்துவிட்டன. மேலும் அந்த பவர் ஸ்டேஷனில் பெரிய பெரிய இயந்திரங்கள் இருப்பதும் அவை எப்பொழுதும் பெருத்த சப்தத்துடனும் அலறலுடனும் ஓடிக்கொண்டிருப்பதும் இவனை பிரமிக்கச் செய்து விட்டன. அவைகளினிடம் இவனுக்கு ஒருவிதமான பக்தி உண்டாகிவிட்டது. எப்பொழுதும் ஓடிக்கொண்டிருப்பதால் இயந்திரங்களில் பெரிய உருவத்தைப் பார்த்து அதை ஓர் பெரிய தெய்வம் என்று நம்பினான்.

தினம் ராத்திரி படுக்கைக்கு போகும்போதும் காலையில் எழுந்திருந்ததும் ஸ்டீபனுக்கு தெரியாமல்போய் பலகணிவழியாய் இயந்திரத்தை பார்த்து வணங்குவான். ஒவ்வொரு சமயம் ஸ்டீபன் இவனை பார்த்ததும் உதை கொடுத்தனுப்புவார். அப்பொழுது எல்லாம் இயந்திரங்களை சுற்றிப் பார்த்து தன்னை திரு. ஸ்டீபனிடம் இருந்து காப்பாற்றவேண்டும் என்று கண்ணீர் விடுவான். அதற்கு தகுந்தாப்போல் இயந்திரங்களும் அந்த சமயத்தில் குமுறும். அப்பொழுதெல்லாம் தெய்வம் தன் குறைகளை நிவர்திப்பதாக சந்தோஷப்படுவான்.

ஒருநாள் காங்கோவுக்கு ஓர் சிறிய குற்றத்திற்காக அளவுக்குமீறின பூஜைகள் கிடைத்தன. காங்கோ அவைகளை ஏற்றுக்கொண்டு தனது தெய்வசந்நிதியில் முறையிடப் போனான். அப்பொழுது ஸ்டீபன் வெளியே உலாவப்போயிருந்தார். இவன் நேராக இயந்திரகளிடம்போய் மண்டியிட்டு, உட்கார்ந்து தன்னை கடைசி முறையாக காப்பாற்றவேண்டும் என்று கண்ணீர்விட்டுக் கதறினான். ஆனால் அந்த பாழாய்போன இயந்திரங்கள்மட்டும் ஒரே அலறலுடன் தங்கள் வேலைகளைசெய்து கொண்டிருந்தன. கடைசியில் காங்கோ பெரிய இயந்திரத்தினிடம்போய் வணங்கி எழுந்து நிற்கும்போது, ஜன்னல் வழியாய் அடித்த மாலை சூரிய வெளிச்சமானது இயந்திரத்தின் மேலுள்ள பித்தளைப் பிடிகளின்மீது பிரதிபலித்து இவன் எழுந்து நிற்கும் சமயம் பளிச் பளிச்சென்று மின்னின. இதைப் பார்த்ததும் காங்கோ தெய்வம் தன்னுடைய குறைகளை நிவர்திக்க வாக்களித்து விட்டதாக பூரிப்படைந்தான். அப்போதே தன்னுடைய திரேகத்தில் ஏதோ ஒருசக்தி கிளம்பிவிட்டதாக எண்ணினான். மதங்கொண்ட யானைபோல் ஓடினான். அவனுடைய சக்தி அளவுமீறி இருந்தது. சதா எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கும் தெய்வத்தினிடம் தன்னுடைய சக்தியையும் கொஞ்சம் காட்டவேண்டுமல்லவா? அன்றைய இரவு மணி ஒன்பது அடித்தது. ஸ்டீபன் சாப்பிட்டுவிட்டு பவர் ஸ்டேஷனுக்கு போய்விட்டார்.

நமது காங்கோவும் சாப்பிட்டபிறகு மெள்ள அடிமேல் அடிவைத்து நடந்துபோய் பலகணிவழியாய் உள்ளே எட்டிப் பார்த்தான். மிஸ்டர் ஸ்டீபன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தலையை கவிழ்த்தவண்ணம் யோசனை செய்து கொண்டிருந்தார். விளக்குகள் பிரகாசமாக யெரிந்துகொண்டிருந்தன.... நமது காங்கோ அந்த காட்சியை கண்டதும் காலையில் தெய்வம்வாககு கொடுத்தது ஞாபகம் வந்துவிட்டது. ஒரே உக்கிரம் கிளம்பிவிட்டது அவனுக்கு. தெய்வத்தினிடம் தன் சக்தியை காண்பிக்க வேண்டுமல்லவா? மெள்ள பூனைபோல் உள்ளே போனான், பொத்தானை அழுத்தினான். பொத்தானை அழுத்தினதும் குபீர் என்று விளக்குகள் எல்லாம் நின்றுவிட்டன. திடீரென்று விளக்குகள் நின்றதும் ஸ்டீபன் திகைத்து எழுந்தார். கட்டிடமே இருண்டுவிட்டது. அதற்குள் நமது காங்கோ அவரை அப்படியே அலக்காக

கட்டித் தூக்கினான். அவர் எவ்வளவு முயன்று பார்த்தும் அவன் குரங்குப் பிடியில் இருந்து விடுபட முடியவில்லை. 'காங்கோ! காங்கோ!' என்று கத்தினார். பதில் இல்லை.

காங்கோ அவரை பரபரவென்று இயந்திரத்தினிடம் இழுத்துச் சென்றான். இன்னும் ஒரு நிமிஷம். ஸ்டீபன் இயந்திரத்திற்குப் பலி. அதற்குள் ஸ்டீபன் கையையும் காலையும் பலமாக உதறினார். சற்றுப் பிடிநழுவியது. ஸ்டீபன் எகிரிபாய்ந்து வெளியே ஓடினார். காங்கோவும் ஒரே திகிலுடன் பின்னால் ஓடினான்.

அன்றைய இரவு மழை பெய்துகொண்டிருந்ததால் வெளியில் எங்கும் ஒரே இருட்டு. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரி கட்டிடத்திற்குள் நுழைந்தார். அதற்குள் உருவமும் கூடவே தாத்திகொண்டு வந்துவிட்டதால் சுற்றும்முற்றும் பார்த்து தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சுகளுக்கடியில் பதுங்கினார்.

காங்கோவும் கைகளை இருட்டில் தடவிக்கொண்டே போனான். அப்பொழுது திடீரென்று மின்னவே அந்த வெளிச்சத்தில் அங்கொரு மூலையில் ஒரு உருவம் நின்றுகொண்டிருப்பதை பார்த்தான். பார்த்ததும் ஒரேதாவில் பாய்ந்து பிடித்தான். இப்பொழுது அந்த உருவம் அந்த பிடியில் இருந்து திமிறவில்லை. பேசாமல் அடங்கிவிட்டது.

நமது காங்கோவும் அப்படியே ஸ்டீபனை அலக்காக தூக்கிக்கொண்டுவந்து அந்த பெரிய இயந்திரத்தினிடை தூக்கியெறிந்தான்.

கசகச, பள பளவென்ற சப்தம். சுடுநாற்றம். பிறகு எப்பொழுதும் ஓடும் பெரிய சப்தத்துடன் அந்த பெரிய இயந்திரம் ஓடிக்கொண்டிருந்தது. காங்கோ தன்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி விட்டதற்காக சந்தோமடைந்து படுக்கையில்போய் படுத்துக்கொண்டான். தன்னுடைய உண்மை பக்தனை காப்பாற்றவேண்டுவது இயந்திர தெய்வத்தினுடையது அல்லவா?

அன்றைய இரவு பம்பாய் பட்டினத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது.

பெரியதுரை என்ன காரணம் என்று விசாரிக்க பவர் ஸ்டேஷனுக்கு வந்தார். உள்ளே வந்ததும் எங்கேயோ மயிர் பொசுங்கின சுடுநாற்றம் வீசியது. மிஸ்டர் ஸ்டீபன் என்று பெயர் சொல்லி கூப்பிட்டார். பதில் இல்லை.

காங்கோவை கூப்பிட்டார். காங்கோ தூங்கி எழுந்தவன்போல் கண்ணை கசக்கிக்கொண்டு வெளியே வந்தான். 'எங்கே உன் எஜமான்' என்று கேட்டான். 'ராத்திரி சாப்பிட்டுவிட்டு உள்ளே போனார். திரும்பி காலையில்தான் வெளியே வருவார்' என்றான். பெரியதுரையும் காங்கோவும் உள்ளேபோய் பார்த்தார்கள். அங்கே ஒரு மூலையில் இருந்து தூர்நாற்றம் அடித்துக் கொண்டிருந்தது.

பெரியதுரை அங்கே போய் பார்த்தார். மிஸ்டர் ஸ்டீபன் பெரிய இயந்திரத்தினடியில் நசுக்குண்டு பொசுங்கிக் கிடந்தார். அவருடைய முகம் கழுத்து எல்லாம் அடையாளமே தெரியாமல் அவ்வளவு நசுங்கிப்போயிருந்தன. அவருடைய குல்லாமட்டும் இயந்திரத்தின்மேல் விழுந்து கிடந்தது.

மறுநாள் பம்பாயில் வெளிவரும் பிரபல பத்திரிகையில் பிரபல மின்சார நிபுணரான மிஸ்டர் ஸ்டீபன் நேற்று இரவு விளக்குள் திடீரென்று நின்று

போன காரணத்திற்காக இயந்திரங்களிடம் போனபோது தற்செயலாக அதில் சிக்கி மாண்டு விட்டார் என்று வெளிவந்தது.

நமது காங்கோவை காப்பாற்றினது இயந்திர தெய்வத்தின் சக்தி அல்லவா?

ஸ்டீபன் இறந்து இரண்டு நாள்கள் ஆய்விட்டன. ஸ்டீபனுடைய வேலைக்கு வேறே ஒரு ஆங்கில கனவான் வந்தார்.

அவர் நமது காங்கோவை கவனிக்கவில்லை. காங்கோ வாட்ச்மேன் வேலைக்கு தள்ளப்பட்டான். இப்பொழுது இவன் இயந்திரத்தினிடம் போவ தற்குகூட முடியாது. பாவம் வெளியே இருந்துகொண்டு ஏங்குவான். எப்படி யாவது 'உன் பக்தனை காப்பாற்றவேண்டும்' என்று மன்றாடுவான். 'உன்னு டைய பக்தன் உனக்கு மற்றொரு பலி கொடுக்கவும் தயார்' என்பான்.

ஒருநாள் காலை தூங்கியெழுந்ததும் காங்கோ பலகணி வழியாக உள் நோக்கினன். காலை சூரியவெளிச்சம் பழையபடி இயந்திரத்தின்மீது படவே பளீர் என்று மின்னின. காங்கோவுக்கு வந்துவிட்டது பழைய ஞாபகம். தெய் வம் மற்றொரு பலிகேட்கிறது என்று நம்பினன்.

அன்றைய இரவு நமது புதியதுரை இயந்திரத்தினிடம் எழுந்த சிறிய சப்தத்தை கவனித்துவிட்டு நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். திடீரென்று விளக்குகள் அணைந்தன. நமது காங்கோ அவரை கட்டிப்பிடித்தான். அவர் எவ்வளவு திமிறியும் ஒன்றும் முடியவில்லை.

ஸ்டீபனையே அலக்காக தூக்கின கங்கோவுக்கு இவர் எம்மாத்திரம்!

பாவம் துரை தத்தளிக்கிறார்; திமிறுகிறார்; அலறுகிறார்; அவரால் ஒன்றும் முடியவில்லை. நமது காங்கோ அவரை பரபரவென்று இயந்திரத்தி னிடம் இழுத்துக்கொண்டே போகிறான்.

ஆச்சு. இன்னும் ஒரு வினடி, திடீர் என்று காங்கோவின் முகத்தில் பலமான குத்து, இரும்பினல் அடித்ததுபோல் விழுந்தது. 'அப்பாடா' என்று கீழே உட்கார்ந்தான்.

துரை பாய்ந்து ஓடிவிட்டார். பளீர் என்று மின்னல் வெளிச்சம். ஸ்டீபனின் பேய் உருவம் காங்கோவின் எதிரில் தோன்றிற்று. காங்கோ 'ஆ! ஆ!! ஆ!! ஸ்டீபனின் பேய், பேய்' என்று கத்தினன். அதற்குள் வெளிச்சம் மறைந்தது. உருவமும் மறைந்தது. துரை சில ஆட்களுடன் உள்ளே வந்தார். நமது காங்கே முகமெல்லாம் இரத்தத்துடன் கதறிக்கொண்டிருந் தான்.

எல்லோரும் கங்கோவை பார்த்து 'என் முகமெல்லாம் இரத்தம் இருக்கிறது, இங்கே என்ன நடந்தது'? என்று கேட்டார்கள்.

காங்கோ தான் சுற்றிக்கொண்டு வந்ததாகவும், விளக்குகள் நின்றுவிட்ட தாகவும், உள்ளே வந்து பார்த்ததாகவும். அப்பொழுது இறந்துபோன ஸ்டீபன் பேய் தன் முகத்தில் அறைந்ததாகவும், தான் துரையை கட்டிப் பிடித்ததை மறைத்து, பேய் அறைந்ததைமட்டும், கூறினன்.

வாஸ்தவத்தில் தான் யார் முகத்திலும் குத்தவில்லை என்றும், இறந்துபோன பேய் உருவந்தான் தன்னை அறைய வந்திருக்கும் என்றும்,

தான் திமிறிக்கொண்டு ஓடிவிட்டதால் எதிரில் வந்த காங்கோவின் முகத்தில் அறைந்திருக்கும் என்றும் புதிய துரையும் கூறினர்.

மேல் நாட்டார் இப்பொழுதுங்கூட இறந்து போனவர்களின் ஆவி உலகில் இருப்பதாக நம்புகிறார்கள்.

ஆனல் இந்த முறையும் நமது காங்கோவை தப்பித்துவிட்டது அவனுடைய இயந்திரத் தெய்வத்தின் சக்தி அல்லவா?

காட்கள் கடந்துகொண்டே போயின. யாரும் அந்த பவர்ஸ்டேஷன் பக்கம் போகிறதில்லே. அதில் வேலே செய்யும் துரைகூட இரவு ஒன்பது மணிக்குமேல் தன் பங்களாவுக்கு போய்விடுவார்.

நமது காங்கோ ஒருவன்தான் காவல்காரன். ஒருநாள் இரவு பத்து மணிக்கு காங்கோ கட்டிடத்தின் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தான். பளிர் என்று டார்ச்லைட்டின் வெளிச்சம் காங்கோவின் முகத்தில் தாக்கிற்று.

காங்கோ பிரமித்து எழுந்து நின்றான். அந்த வெளிச்சத்தில் செம்பட்டை மயிர்களுடன் கைகால்களில் நகங்கள் நீண்டு வளர்ந்தும் முகம்மட்டும் இறந்து போன ஸ்டீபனின் முகசாயலோடும் ஓர் உருவம் தோன்றிற்று.

காங்கோ உருவத்தை கண்டதும் 'பேய்! பேய்!' என்று கத்த ஆரம்பித் தான்.

அதற்குள் வந்த உருவம் பேசாமல் வாயை மூடும்படி அதிகாரத்துடன் சத்தமிட்டது. 'வாயை திறந்து கூச்சல் போட்டால் கழுத்தைப் பிடித்து அமுக்கி விடுவேன்' என்று கையை ஓங்கினது. காங்கோ என்னதான் பல வானய் இருந்தாலும் பேய் உருவத்தை கண்டதும் கலங்கிப்போனன். பேய் பேசாமல் கூட வரும்படி சமிக்கை செய்தது. காங்கோவும் திகிலுடன் கூடவே போனன். பேய் சிறிய இயந்திரத்தினிடம் அழைத்து சென்று அதில் உள்ள சிறு மறைகளே கழற்றும்படி சொன்னது.

காங்கோவும் அப்படியே சிறிய மறைகளே கழற்றினன். அந்த சிறிய இயந்திரம் அப்படியே நின்றுவிட்டது.

மறுபடியும் அந்த மறைகளே கழற்றின இடத்தில் மாட்டும்படி சொன்னது. மாட்டியதும் இயந்திரம் வெகு வேகமாக சுழன்றது.

ஸ்டீபனின் பேய் காங்கோவை பார்த்து 'இவையெல்லாம் மனிதனுடைய சக்திகள், மனிதனல் உண்டாக்கப்பட்டவை, இதைவிட மேலான இயந்திரங் களே மனிதனல் உண்டாக்க முடியும்' என்றும் அதோ ஓடும் பெரிய இயந்தி ரத்தையும் இப்படியே நிறுத்திவிட முடியுமென்றும் அதெல்லாம் நமக்கு உபயோகப்படவே நமது மூளைகளினல் கண்டுபிடித்து நமது கைகளினல் செய்யப்பட்டவை என்றும் சிறு உபன்னியாசம் புரிந்தது. மேலும் காங்கோவை பார்த்து தான் தினம் தவருமல் வருவதாகவும், யாரிடத்திலும் சொல்லக் கூடாது என்றும், தான் பேய் ஆனதால் ஞானதிருஷ்டியால் 'நீ எங்கே ஓடி போய்விட்டாலும் கண்டுபிடித்து எனக்கு இரையாக்கி கொள்வேன்' என்றும் சொல்லி மறைந்தது. விளக்குகளும் அணைந்து எரிந்தன. காலச்சக்கரம் சுழன்று கொண்டே போகிறது. பேய் வாத்தியார் தவருமல் தினம் வந்து காங்கோவை இயந்திரங்களிடம் அழைத்துக்கொண்டு போய் ஒவ்வொரு பாகத்தையும் அப்படியே விளக்கி காட்டும்.

காங்கோவும் பேயினிடம் உள்ள பயத்தினல் பேய் சொல்கிற விஷயத்தை அப்படியே மனதில் பதிய வைத்தான்.

மாதம் மூன்று கடந்தது. காங்கோவும் இயந்திரத்தின் சக்தியை உணர்ந்தான். தான் இயந்திர சக்தியை செய்ய முடியும் என்றும், இதைவிட மேலான காரியங்களை மனிதன் தன் சக்தியால் செய்ய முடியுமென்றும் உணர்ந்ததால் ஒவ்வொரு நாளும் பேய் வந்தாலும், வராவிட்டாலும் அவனே உள்ளே போய் இயந்திரங்களை பார்த்து சிந்திப்பான்.

பேயும் தவறாமல் வந்துவிடும். இவனுக்கு சந்தேகமான இடங்களில் அதை விவரித்து செய்து காட்டும்.

பேயும் காங்கோவும் அத்தியந்த நண்பர்களாகிவிட்டார்கள். இப்படியே ஆறுமாதங்கள் கடந்தன. காங்கோவுக்கு இயந்திர ஆசை அதிகரித்துவிட்டது. என் அதிகம் சொல்வானேன். காங்கோ இயந்திர சாஸ்திரத்தில் நிபுணன் ஆனன்.

திடீரென்று ஒருநாள் சிறிய இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்தது. அதை பழுது பார்க்க பெரிய துரை தன்னல் ஆனமட்டும் அன்றைய பகலெல்லாம் பிரயாசைப்பட்டும் முடியாமல் போய்விட்டது. அன்றைய இரவு நமது பேய் காங்கோவை அந்த சிறிய இயந்திரத்தினிடம் அழைத்து சென்று அதில் உள்ள தவறுகளை சொல்லி அதை பிரித்துப் பூட்டும்படி சொன்னது. காங்கோவும் அதன்படி அதில் உள்ள தவறுகளை கவனித்து அந்த சிறிய இயந்திரத்தை இயங்கும்படி செய்தான்.

மறுநாள் பொழுதுவிடிந்தது. பெரிய துரை பவர் ஸ்டேஷனுக்கு வரவே சிறிய இயந்திரம் பழையபடியே வேலை செய்வதை பார்த்து ஆச்சரியமடைந்தார்.

'யார் செய்தது. அல்லது தானாகவே ஓடிவிட்டதா? இரவு காங்கோவை தவிர வேறு யாரும் கிடையாதே' என்று யோசனை பண்ணினர். 'சரி ஆகட்டும். எதற்கும் அவனை கேட்டுப் பார்ப்போம்' என்று 'காங்கோ, காங்கோ' என்று கூப்பிட்டார்.

காங்கோ 'எஜமான்' என்று ஓடி வந்ததும் 'டேய் காங்கோ ராத்திரி இங்கு யார் வந்தது. உண்மையைச் சொல்லுகிறாயா? அல்லது போலீசில் ஒப்பிவிக்கட்டுமா? சொல், இயந்திரத்தை யார் தொட்டது' என்று அதட்டினர், பார்த்தான் நமது காங்கோ 'இல்லை எஜமான், சொல்லிவிட்டால் அந்த பேய் வந்து என்னை கொன்றுவிடும்' என்றான்.

பார்த்தார் பெரிய துரை. இவனுக்கு ஏதோ மூளை கலங்கிவிட்டது போலும் என்று கருதினர். எதற்கும் தீரவிசாரிக்கலாம் என்று எண்ணி 'என்னடா காங்கோ, உனக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன, உண்மையைச் சொன்னல் ஆச்சு, இல்லாவிட்டால் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுவேன்' என்று எழுந்து டெலிபோன் அண்டை போனர்.

பார்த்தான் காங்கோ. நாம் உண்மையை சொல்லிவிட்டால் பேய் கொன்றுவிடும். சொல்லாவிட்டால் துரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடும். நாம் இங்கே இல்லாவிட்டால் பேய் அங்கேயும் வந்து கொன்றுவிடும் அல்லவா? சரி சொல்லிவிடலாம் 'வந்தது வரட்டு'மென்று 'எஜமான் நான்தான் அந்த சிறிய இயந்திரத்தை வேலைசெய்யும்படிச் செய்தது' என்றான். துரைக்கு இன்னும்

தூக்கிவாரிப்போட்டது. 'என்னடா உனக்கு எப்படி செய்யத்தெரியும்' என்று கேட்டார். அதற்கு காங்கோ 'இச்சிறிய இயந்திரமட்டும் அல்ல, இதில் உள்ள எல்லா இயந்திரங்களையும் பிரித்து பூட்டத் தெரியும். அவ்வளவையும் ஸ்டீபனின் பேய் உருவம் சொல்லி கொடுத்தது. இன்னும் எவ்வளவோ இயந்திரங்களை பழுதுபார்க்க பேய் வந்து தினம் சொல்லி கொடுக்கிறது' என்றான்.

பார்த்தார் துரை. இவனுக்கு கடைசியில் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்று நம்பினார். டேய் காங்கோ பேய், பேய் என்கிறாயே இன்றைய இரவுகூட வருமா? என்று கேட்டார். கங்கோவும் கண்டிப்பாய் வரும் என்றான். 'சரிதான் நீ போடா, நான் பார்த்து கொள்கிறேன்' என்று சொல்லி விட்டு துரை வெளியே போய்விட்டார்.

காங்கோவுக்கு துரை உதைக்காமல் தன்னை அவ்வளவோடு விட்டது பெரிய ஆச்சரியமாய்விட்டது.

அன்றைய இரவு பெரிய துரை நாலைந்து ஆட்களுடன் துப்பாக்கி சகிதம் ஆபீஸ் அறையில் பதுங்கிக் கொண்டார். இரவு மணி பத்து அடித்தது. நமது காங்கோ மெள்ள எழுந்து இயந்திரங்களிடம் போனான். ஸ்டீபனின் பேய் உருவமும் பழையபடி அங்கே வந்தது. பேயும் காங்கோவும் பற்பல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது பளிர் என்று வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் பெரிய துரை கையில் துப்பாக்கியுடன் தோன்றினார். 'உம், கையை மேலே தூக்குங்கள், இல்லாவிட்டால் இருவரும் பிணமாய் விழுந்து விடுவீர்கள். உம், எடுங்கள் கையை' என்றார். காங்கோவும் பேயும் கைகளை உயரத் தூக்கினார்கள். அதற்குள் துரைகூடவந்த ஆட்கள் பேயையும் கங்கோவையும் கட்டிப்பிடித்தார்கள்.

அதற்குள் பேய் தான் பேய் அல்லவென்றும், இந்த மூடனை திருத்துவதற்கு பேய் உருவுடன் தோன்றியதாகவும் கூறி தன் மேல் போர்வை நீக்கிற்று.

பெரிய துரையும் 'ஆ! மிஸ்டர் ஸ்டீபன்' என்று அலறினார். காங்கோ 'என் எஜமான்' என்று காலடியில் விழுந்தான். எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். பெரிய துரை 'மிஸ்டர் ஸ்டீபன், தாங்கள் இயந்திரத்தின் அடியில் விழுந்து மாண்டு விட்டீர்களே? எப்படி பிழைத்து வந்தீர்கள். தயவு எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லுங்கள்' என்றார்.

ஸ்டீபனும் சொல்ல ஆரம்பித்தார். 'நான் இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு வந்ததும் எனக்கு யாரும் சிநேகிதர் கிடையாது. என்னுடைய முக்கிய வேலைகளை எல்லாம் காங்கோ ஒருத்தன்தான் கவனித்து வந்தான். மேலும் நான் பெரிய முன் கோபி அல்லவா? காங்கோவுக்கு என்னுடைய விஷயத்தில் வெறுப்பு தட்டிவிட்டது. என்னுடைய கோபத்திற்கெல்லாம் அவன் ஆளாக வேண்டியதுதான். நமது காங்கோவும் நீக்ரோ ஜாதியை சேர்ந்தவன் அல்லவா? அவனுடைய வழக்கப்படி விக்கிரகத்தை வணங்குகிறவன். இயந்திரத்தை தெய்வமென்று நம்பினான். அதற்கு என்னை பலி கொடுக்கவும் தயார் ஆனான். திடீரென்று ஒருநாள் ஒன்பது மணிக்கு நான் பவர் ஸ்டேஷனுக்குள் இருக்கும்போது எனக்கு தெரியாமல் பின்புறமாக வந்து என்னை அலக்காக தூக்கினான்.

நான் எவ்வளவு திமிறியும் என்னை அவன் விட்ட்பாடில்லை. எனக்கு அப்பொழுது காங்கோவென்று தெரியாது.

எவ்வளவோ முயன்றும் முடியாமல் போய்விட்டது. கடைசியில் என்னை இயந்திரத்தினிடம் பரபரவென்று இழுத்துக்கொண்டே போனான். ஆச்சு, இன்னும் ஒரு வினாடி, நான் இயந்திரத்தில் சிக்கி மாண்டுபோவது நிச்சயம். ஆனால் என்னுடைய மனோதைரியம் என்னையும் பிரமிக்கச் செய்து விட்டது. என்னுடைய பலமெல்லாம் கொண்டு ஒரு திமிறு திமிறி ஓடினேன், அவனும் விடாமல் பின் துரத்தினான். வெளியே மழை பெய்துகொண்டிருந்த தால் எங்கே போவது என்றும் தெரியவில்லை. பக்கத்திலிருந்த கட்டிடத் திற்குள் நுழைந்தேன். அங்கேயும் இருட்டு. காங்கோவும் பின்னால் துரத்திக் கொண்டே ஓடிவந்தான். என் மனம் திக்திக் என்று அடித்துக்கொண் டிருந்தது. அந்த கட்டிடத்திற்குள் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சுக்கடியில் பதுங்கினேன்.

காங்கோவும் பின்னால் நுழைந்து என்னை தேடுகிற மாதிரி தெரிந்தது. அந்த ஒரு நிமிஷத்தில் என் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். காங்கோவும் சுற்றுமுற்றும் பார்த்து அங்கே ஒரு மூலையில் துணிபோர்த்து மூடி வைத்திருந்த ஏதோ ஒரு பெரிய வஸ்துவை பார்த்து பாய்ந்து தூக்கிச் கொண்டு வெளியே ஓடினான். அவன் வெளியே போனபின்புதான் எனக்கு சரியாக மூச்சு வந்தது. நான் எழுந்து மின்னல் வெளிச்சத்தில் அந்த இடத்தை நோக்கினேன். நான் உள்ளே நுழைந்த இடம் ஒரு பெரிய ஆஸ்பத்திரி என்றும், நான் பதுங்கின இடம் திக்கில்லாத பிணங்களை அறுத்து பரிசோதனை செய்யும் இடம் என்றும் பின்னால் அறிந்தேன்.

என்னை தூக்கிப் போவதற்கு வந்த காங்கோ நான் மூலையில் துணி போர்த்து உட்கார்ந்திருக்கிறேன் என்று நினைத்து பிணத்தை தூக்கிகொண்டு போனான் என்று அறிந்தேன். அப்பொழுதுதான் எனக்கு கடவுளை நினைக்க நேரமிருந்தது. நான், கடவுளின் உலகில் கடவுளின் கருணை இருந்ததைப்பற்றி உணர்ந்தேன். கடைசியில் காங்கோ தூக்கி கொண்டுபோன பிணத்தை என்ன செய்கிறான் என்று அவன் பின்னால் கொஞ்சநேரம் கழித்துப் போய் பார்த்தேன்.

காங்கோ உள்ளே இயந்திரத்தினிடம் முழங்கால் மண்டி யிட்டு வணங்கு வதை கண்டேன். உள்ளே பொசுங்கின நாற்றம் அடித்துக்கொண்டிருந்தது. அப்பொழுதுதான் இவ்வளவு வேலை செய்ததும் காங்கோ என்று உணர்ந் தேன். சரி, காலையில் பார்த்து கொள்ளலாம் என்று வெளியேபோய் ஒரு ஓட்டலில் தங்கினேன். நமக்கு இவ்வளவு தீங்கு செய்த அந்த காங்கோவை என்ன செய்யலாம் என்று யோசனை செய்தேன்.

நாளையதினம் அவனை போலீசில் ஒப்படைத்து விடலாமா அல்லது வெளியே ஓட்டி விடலாமா என்று எண்ணினேன். திரும்பவும் அவன் பேரில் எனக்கு வாஞ்சை பிறந்தது. பாவம்! அவன் என்ன செய்வான், என்னிடம் அவனுக்கு இம்சை பொறுக்க முடியவில்லை. மேலும் அவன் அறிவில்லாதவனே இயந்திரத்தை தெய்வம் என்று நம்பினான். நானும் அவனும் இந்தியாவிற்கு ஒன்றாய் வந்தவர்கள் அல்லவா ?

சே! அவனை ஒருக்காலும் காண்பித்து கொடுக்கக்கூடாது. நான் அவனை ஆபிரிக்காவில் இருந்து அழைத்துக்கொண்டு வந்தது முதல் என்க்கு எவ்வளவு உண்மை உள்ளவனுக இருந்திருக்கிருன். எவ்வளவோ வேலைகள் செய்திருக்கிருன். அவனுக்கு என்ன உபகாரம் செய்திருக்கிறேன். அடியும் உதையும்தான் கொடுத்திருக்கிறேன். சரி, எப்படியாவது அவனுடைய அறியாமையை போக்கி, எல்லாம் மனிதனுல் உண்டாக்க முடியும் என்று நிருபித்து அவனை ஓர் இயந்திர சாஸ்திர நிபுணனுக்குகிறேன், என்று நினைத்தேன். மறுநாள் பொழுது விடிந்ததும் பிரபல மின்சார நிபுணர் இங்கிலாந்தில் இருந்து வந்தவர் இயந்திரத்தில் சிக்கி மாண்டுவிட்டார் என்ற பேச்சாய் இருந்தது.

அன்றைய பேப்பரிலும் நான் தற்செயலாய் விழுந்து மாண்டேன் என்றும், என் முகம் உருப்புகள் எல்லாம் அடையாளம் தெரியாமல் நசுங்கிப் போய் இருந்தனவென்றும், என்னுடைய குல்லாமட்டும் இயந்திரத்தின் மேல் இருந்தது என்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சரி சரி, இதுவும் நமது நன்மைக்கே. எல்லோரும் நாம் இறந்துவிட்டதாகவே நினைத்து விட்டார்கள். நாம் நினைத்ததற்கு இதுவும் ஒரு அநுகூலம் தான் என்று நினைத்தேன். ஆனல் இவனுக்கு எந்த விதமாக போதிக்கலாம் என்று யோசனை பண்ணினேன். இனி உலகில் நாம் இறந்தவனுக ஆய்விட்டோம், நாமும் அதைபோல் பேய் உருவமாகத்தான் இருந்துஇவனுக்கு வழி காட்ட வேண்டும். இவனும் பேய் என்றுல்தான் பயப்படுவான் என்று நினைத்தேன். அதைப்போல் இரவு பத்துமணிக்கு பேய் உருவுடன் தினம் வந்து போக ஆரம்பித்தேன்.

ஒருநாள் எனக்குப் பதில் புதிதாக வந்தவரையும் காங்கோ, என்னைச் செய்ததைப்போலவே அலக்காக தூக்குவதை கண்டேன். காரியம் மிஞ்சி விடும் போலிருந்தது. இவன் அவரை கட்டி அலக்காக தூக்கும்போது என் பலங் கொண்டமட்டும் அவன் முகத்தில் ஓங்கிக் குத்தினேன்.

பிறகு என்னுடைய டார்ச்லைட்டை அவன் முகத்துக்கு நேராக நீட்டி என் பயங்கர முகத்தை காண்பித்து மறைந்தேன். எல்லோரும் இவ்வளவு வேலையும் பேய்தான் செய்தது என்று நம்பினுர்கள்.

இந்த சம்பவம் நடந்தது எனக்கு மிக்க அநுகூலமே ஆயிற்று. யாரும் அந்த பவர்ஸ்டேஷனுக்கு வருவதில்லை. நானும் தவருமல் தினம் காங்கோவுக்கு பேய் உருவுடன் பயமுறுத்தி இயந்திர சாஸ்திரங்களை எல்லாம் கூட இருந்து விளக்கி அவனை நிபுணனுக்கினேன்' என்று கூறி முடித்தார். எல்லோரும் இதை கேட்டதும் பரம ஆச்சரியம் அடைந்தார்கள். பேப்பரில் எல்லாம் ஸ்டீபன் இறக்கவில்லை என்றும், அவருடைய வேலைகாரனுக்காக பேய் உருவுடன் இருந்தார் என்றும், அவனை ஓர் மின்சார நிபுணனுக்க எவ்வளவோ பாடுபட்டார் என்றும், அவர் சொன்னதை சுருக்கமாக வெளியிடப் பட்டது.

பம்பாய் நகரத்தார் நமது காங்கோவை அந்த பவர் ஸ்டேஷனுக்கே மானேஜராகவைத்து விட்டார்கள். நமது ஸ்டீபன் துரை எவ்வளவோ பிரயாசைப்பட்டு அவனை அமர்த்தினர். அவன் வேலைக்கு அமர்ந்ததும் நமது ஸ்டீபன் துரையும் இங்கிலாந்துக்கு கப்பல் ஏறினர்.

நமது ஸ்டீபன் துரை கப்பல் ஏறும்போது காங்கோவும் கடைசிவரையில் கூடவே இருந்து கப்பல்போனதும் கரையில் நின்றுகொண்டு கப்பல் மேல் தளத்தில் நின்றுகொண்டிருந்த தன் எஜமானனைப் பார்த்து தன் எஜமானின் நன்றி விசுவாசத்திற்காக முழங்கால்படி யிட்டுவணங்கி கண்ணீர் சிந்தினான். அவனுக்கு எஜமானன் ஒரு தெய்வமல்லவா ?


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணுஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரீ ஸ்டோர்,
செட்டித் தெரு, கொளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# 'நவநாகரிகக் கொள்ளை'

-:o:-

[மேட்டுப்பாளையம் P. மீனாக்ஷிசுந்தரம்]

மலையனூர் விஸ்வநாத ஐயரை தெரியாதவர்கள் அவ்வூரில் ஒருவரும் இரார். அவர் ஒரு பெரிய நகை வியாபாரி. அத்துடன் அவரிடத்தில் ஏராளமான செல்வமுண்டு. தயாள குணமும், நல்லொழுக்கமும் கொண்ட அந்தணர். எல்லாவிதமான சம்பத்தும் குறைவற அவருக்கிருந்தும் அவர் மனம் நிம்மதியடையவில்லை. காரணம் தங்களுக்கோர் புத்திரன் இல்லையே என்ற குறைதான். அவர் மனைவி கமலாவுக்கோ சதா அதே துக்கம்தான். இருப்பினும் தங்களது ஏகபுத்திரி பத்மாவின் மழலை சொற்களும், அவளது புன்னகைகளுமே, அவர்கள் கருத்தை மறக்கச் செய்தன. பெற்றோர்கள் அவளையே தங்கள் ஜீவநிதியாகக் கருதி வளர்த்து வந்தனர். கமலாவைமட்டும் சில வேளைகளில் தங்களது பெரும் நிதியை வைத்தாளுவதற்குரிய புத்திரன் ஒருவன் இல்லையே என்ற எண்ணம் வருத்திக்கொண்டிருந்தது.

ஒருநாள் விஸ்வநாத ஐயர் மலர்ந்த முகத்துடன் தன் மனைவியின் பாலணுகி 'கமலா! நம் பத்மாவுக்கு திருமணம் முடித்து மகிழலாமென்று எண்ணுகிறேன். வரனும் தூரமில்லை. நமது நெருங்கிய பந்துவான சீதாராம ஐயர் மகன் ராமநாதனைத்தான் நிச்சயம் செய்திருக்கிறேன். பையனும் ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறான். நல்ல பையன்தான். மணம் முடித்து நமது இல்லத்திலேயே வைத்துக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். உன்னுடைய அபிப்பிராயம் என்ன' என்றார்.

'ஆகா! அதைவிட வேறே சந்தோஷம் இவ்வையக வாழ்வில் நமக்கென்ன இருக்கிறது. உடனே கல்யாணம் முடித்து கண் குளிர அக்காட்சியைப் பார்ப்பதுதான் நமக்கு பரமானந்தம்' என்றாள்.

'இல்லை, நமது பக்கத்தாத்து பரமேஸ்வர ஐயரிடம் இதைப்பற்றி விசாரித்தேன். அவர் 'பையனுக்கு 22 வயதாகிறது. உங்கள் பத்மாவுக்கு 6 வயதுதானே. அது அவ்வளவு சிலாக்கியமில்லையே' என்று சொன்னார். அதுதான் என் மனதுக்கு ஒரு மாதிரி இருக்கிறது' என்று சொன்னார் விஸ்வநாத ஐயர்.

'ஆமாம்! ஆமாம்!! அவருக்கு ரொம்பத் தெரியும். மெத்தப் படித்தவர் அல்லவா? அவரிடத்தில் ஏன் நீங்கள் போய் இதெல்லாம் கேட்கிறீர்கள்?' என்று கடிந்தாள் கமலா.

அதிகம் கூறுவானேன் இச்சம்பாஷணை நடந்த ஒரு மாதத்திற் கெல்லாம், கொழுத்த பணக்காரராகிய விஸ்வநாத ஐயர் குமாரத்தி பத்மாவதிக்கும், சீதாராம ஐயரின் குமாரனுன் ராமநாதனுக்கும் குறிப்பிட்ட சுபதினத்தில் மிகவும் சிறப்புடன் மங்களமாக திருமணம் நடந்தேறியது. அன்றைய பெருத்த கூட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் கண்ட பத்மாவதியை சமாதானப்படுத்துவது தான் விஸ்வநாத ஐயருக்கும் கமலாவுக்கும் பெருத்த பாடாயிற்று.

நாட்கள் சில சென்றன. கூடத்தில் ராமநாதன் தன் மாமனுர் விஸ்வநாத ஐயரிடம் ஏதோ வார்த்தையாடிக்கொண்டிருந்தான். அச்சமயம் அங்கு ஓடிவந்த குழந்தை பத்மாவதி ராமநாதனைக் கண்டதும் ஓடிப்போய் ராமநாதனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு 'நீதான் என் ஆத்துக்காராமே! நீ இங்கேயே இருக்கப்போரயோனு? சொல்லு' என்றுள். பார்க்கவேண்டுமே ராமநாதனின் முகத்தை; வெட்கத்தால் முகம் வாடியது. மேனி சிலிர்த்தது. அத வருகில் நின்றுகொண்டிருந்த கமலா 'பாரேன் கழுதை! சந்தர்ப்பா சந்தர்ப்பம் தெரிகிறதில்லை. மூதேவி இங்கே வாட்டும்' என்று முணு முணுத்தாள். அதையும் ராமநாதன் கேட்காமலில்லை. அவள் பிடியி னின்று ராமநாதன் தன்னை விடுவித்துக்கொள்ள பகீரதப் பிரயத் தனம் செய்து பார்த்தான். முடியவேண்டுமே, முடிவில் தன் தந்தை யின் அதட்டலால் குழந்தை ராமநாதனை விட்டுவிட்டு தன் தாயா ரிடம் ஓடிற்று. அங்கு தாயிடம் இரண்டு பூஜைகளும், சில ஆராதனை களும் கிடைத்தன.

பத்மா அழுதுகொண்ட 'ஏனம்மா என்னை அடித்தாய்?' என்றுள்.

'ஆம்! அப்படித்தான் மாப்பிள்ளை கழுத்தைக் கட்டிக்கொண்டு தகாதவிதமாய் எல்லாம் கேட்கிறதா?' என்றுள் கமலா.

'நீதானே அம்மா அவன் என் ஆம்படையான்னு சொன்னுய்' என்று சொல்லிக்கொண்டே குழந்தை பத்மா தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள். இதுவெல்லாம் பழங்கதை.

ராமநாதன் தன் மாமனுர் இல்லம் வந்து இரண்டாண்டுகள் ஆயிற்று. தன் மாமனுருடன் பழகி தானும் நகை வியாபாரத் துறையில் நல்ல பயிற்சி பெற்றுவிட்டான். ஆதலால் தன் மாமனு ருக்கு பதிலாக அவனே நகைகளை வெளியூர்களுக்குக் கொண்டுபோய் வியாபாரம் செய்துவருவான். நல்ல லாபமாகவே விற்றுவந்ததால் விஸ்வநாத ஐயர் ராமநாதனையே அனுப்புவது வழக்கம். சில சமயங்

களில் ராமநாதன் வியாபார நிமித்தமாக வெளியூர்களுக்குப் போனால் ஒருவாரம் கழித்துக்கூட வீடுவந்து சேர்வான்.

ராமநாதன் ஒருநாள் பவானிபுரத்திற்குச் சென்றான். பவானிபுரம் பெரிய பட்டணம். வீதிகளின் அலங்காரமும், வீடுகளின் அழகிய அமைப்பும் எவர் மனதையும் கவர்ந்து விடுமென்பதற்கு ஐயமில்லை. இதற்கு முன் ராமநாதன் அவ்வூருக்குச் சென்றதில்லை. ஆகவே, அந்நகர் முழுமையும் சுற்றிப் பார்த்து அகமகிழ்ந்தான். வியாபாரமும் மிகுதியாக ஆயிற்று. லாபம் அதிகரிக்க அதிகரிக்க அவன் மகிழ்ச்சி கரைபுரண்டோடிற்று. இரவு நெருங்கியதும் ஓர் சாப்பாட்டு விடுதியில் ஆகாரம் அருந்திவிட்டு படுக்கைக்கு தகுந்த இடத்தைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். பகல் முழுதும் சுற்றிய களைப்பால் அவன் மிகவும் ஆயாசம் அடைந்திருந்தான். அவன் கையில் ரொக்கமாகவும் நகைகளாகவும் சேர்ந்து ரூபாய் இருபதினாயிரம் இருக்கும். அவ்வளவு பெரிய தொகையை வைத்திருப்பவன் படுக்கும் இடத்தைப்பற்றி எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? என்ன யோசித்தும் அவனுக்குத் தகுதியான இடம் காணோம். அச்சமயம் பின் பக்கமிருந்து யாரோ ஒருவர் 'சார்! சார்' என்று கூப்பிடவே ராமநாதன் திரும்பிப் பார்த்தான். அங்கு தலைமயிர் கிராப்பு, தளுக்கு பொட்டு, முறுக்கு மீசை, காலர் டை, ஷர்ட், ஓபன் கோட், நிஜார், மேஜோடு, பூட்ஸ், மூக்குக்கண்ணாடி, வாசனை வீசும் கைக்குட்டை முதலியவைகளுடன் தோற்றமளித்த ஒருவர் 'தங்களைத்தான் சார்! தங்களை எங்கோ பார்த்ததாக ஞாபகம் இருக்கிறதே' என்றான்.

'இருக்கலாம் சார்! என்னை மலையனூரில் பார்த்திருக்கலாம்' என்றான் ராமநாதன்.

'ஆம் அங்கேதான் சார்! அங்கேதான் சார்!' என்று பன்முறை கூறி தன் மகிழ்ச்சிக் குறியைத் தெரிவித்தான் ஆசாமி.

அத்துடன் நிற்கவில்லை. சிறிதுநேரம் இருவரும் ஏதேதோ வார்த்தையாடினர். பின்னர் அவன் பேச்சின் வாயிலாக, ராமநாதன் படுக்க இடமின்றி கவலைப்படுகிறான் என்று உணர்ந்து கொண்டான். அந்த ஆசாமி பிறகு, 'வாருங்கள் சார்! நமது வீட்டில் படுத்துக்கொள்ளலாம். நல்ல சௌகரியமான வீடு. என் குடும்பத்தாரெல்லோரும் பனையூருக்குப்போய் இரண்டு வாரமாகிறது. பாருங்கள் சார்! சென்ற மாதம் ஒரு காரியார்த்தமாக விமலாபுரம் போயிருந்தேன். அங்கு எனக்கு ஒருவரையும் தெரியாது. ஆகையால் நான் படுக்க இடமின்றி மிகவும் கஷ்டப்பட்டேன் சார்! அதிலிருந்துதான் சார்! எனக்கு இந்த புது எண்ணம். என்னமோ போங்கள் சார்! மனிதருக்கு மனிதர் உதவிசெய்யாவிடில் அவன் மனிதனல்ல சார்!


அவன் மிருகத்தோடே சேர்ந்தவன்' என்று ஒரே மூச்சில் அடிக்கிக் கொண்டே போனான் அந்த விநோத ஆசாமி.

ராமநாதனுக்கு அவனைப் பார்த்ததும் ஒருவிதமான சந்தேகம் உதித்தது. ஆனால் அவன் பேசிய வார்த்தைகளிலிருந்து அந்த சந்தேகம் வரவரக் குறைந்தது. அன்றியும் ஓட்டல்காரன் அவனிடத்தில் பெரும் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டதிலிருந்து அவன் ஒரு பணக்காரனென்றும், நல்ல மதிப்புடையவனென்றும் தெரிந்து கொண்டான். ஆகவே சிறிது தயக்கத்துடன் வேறு வழியில்லாததால் அவன் கேட்டுக் கொண்டதற்கு ஒப்புக் கொண்டு, அவன் பின்னே தனது பெட்டியுடன் சென்றான். அந்த ஆசாமியும் சிறிதுதூரம் நடந்துசென்று ஒரு அழகிய மாடிவீட்டை யடைந்து அவ்வீட்டை தன்னிடமுள்ள திறவுகோலால் திறக்க இருவரும் உட்புகுந்தனர். ராமநாதனும் ஒருவாறு தன் மனதை திடப்படுத்திக்கொண்டு ஹாலிற்குள் சென்றான். அங்கே அநேக அறைகளும், அதில் மெத்தை விரித்த பல கட்டில்களும், சோபாக்களும், நாற்காலிகளும் இருந்தன. சுவரில் ஆங்காங்கே பலவிசித்திரமான படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன அவை மனதை வசிகரித்தன. இக்காட்சிகளை யெல்லாம் கண்ணுற்ற ராமநாதன் அவன்பால் தான் கொண்டிருந்த சந்தேகம் யாவும் தவறென்றெண்ணி அவைகளை விரட்டியடித்தான். அந்த ஆசாமியாகிய கோபாலன் ஒரு நாற்காலியில் அமர்ந்து, ராமநாதனையும் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் அமரும்படி வேண்ட அவனும் உட்கார்ந்தான். பின் ராமநாதனின் விபரம் பூராவும் கேட்டறிந்த பின்னர் சில புத்தகங்களை எடுத்து அவன் முன்பாகப் போட்டான். அதில் பல நாவல்களும், சில அரிய நூல்களும் இருந்தன. அவற்றுள் பிரியமான தோர் 'தமிழரசு' பிரதி ஒன்றை எடுத்து மிகவும் ஆவலுடன் வாசித்துக்கொண்டு அதிலேயே அவன் மனம் லயித்தவனாய் இருந்தான். சற்றுநேரம் சென்றபின் கோபாலன் 'படுத்துக்கொள்ளலாமா சார்!' என்று கேட்டபோதுதான் புறவுலகைப்பற்றிய நினைவு அவனுக்கு உண்டாயிற்று. இருவரும் துயில்கொண்டனர்.

ராமநாதன் இனியும் கோபாலன்மீது சந்தேகம்கொண்டிருக்கிறானோ எனக்கருதிய கதிரவன், சந்தேகத்தை நிவர்த்திக்க ஆவலுள்ளவனைப் போன்று விரைவினில் குணதிசை வந்துதித்தனன். ராமநாதனுக்கு கோபாலனிடம் பேரன்பு பிறந்துவிட்டது. முன் பின் அறியாத ஒருவனுக்கு இத்தகைய ராஜோபசாரங்கள் செய்தால் யார் தான் அன்பு கொண்டாட மாட்டார்கள்! ஆகவே அன்பு என்னும் கயிறு இருவரையும் ஒருங்கே பிணித்துவிட்டது. ஆகாராதிகள் கூட கோபாலன் செலவிலேயே அவனது இல்லத்தில் ஆயிற்று.

லாபமான வியாபாரமும் புதிய சிநேகத்தின் வரை கடந்த பேரன்பும் ராமநாதனை வெகுநாள் அங்கேயே தங்கவைத்து விட்டன. ஒவ்வொருவர் மனதிலும் ஆழ்ந்த பகுதியிலுறைந்து கிடக்கும் அந்தரங்கமான இரகசியங்களையும் கூட கூச்சமின்றி எடுத்தியம்பும் நிலைமை அன்பின் முதிர்ச்சியால் ஏற்பட்டுவிட்டது. இருவருக்கும் பளிங்குபோன்ற களங்கமற்ற இதயம். அன்பினால் ஆகாத காரியமுமுண்டோ?

ஒருநாள் காலை மணி ஒன்பது இருக்கலாம் ராமநாதனும், கோபாலனும் காலை ஆகாரம் முடித்துக்கொண்டு வெளித் திண்ணையிலிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் 'சார்! அவ்வீட்டின் மெத்தையைப் பாருங்கள்' என்று எதிர் வீட்டு மெத்தையைக் காண்பித்தான் கோபாலன்.



கோபாலன் காண்பித்த திக்கையே நோக்கினான் ராமநாதன். அவன் கண்ட காட்சி அவன் கவனத்தையே கவர்ந்துவிட்டது. குளிருமாமதிதானிவள் முகமோ! குலவிடும் அன்னந்தானிவளினமோ! கானுறை வண்டின் கருநிறந்தானிவள் கருங்கூந்தலோ! பத்தரைமாற்றுப் பசும்பொன்தானிப்பாவைதன் மேனியோ! மனிதனின் மனதை வசீகரிக்கும் வசீகர சக்திதான் இவள் உருவமோ!' என்று கூறிக்கொண்டே புறவுலக பொருள்களை மறந்து அவ்வினிய உருவையே உற்று நோக்கினான். மீண்டும் ஓர் அற்புதம். அம்மங்கையின் பார்வை தன்னையே நோக்குவதுபோலிருந்தது. அந்தப் பார்வை பின்னும் ராமநாதனின் இருதயத்தைக் கவர்ந்தது. இதற்குள் கோபாலன் 'ஏன் சார்! எப்படி பார்த்தீர்களா' என்றான். 'ஆகா! திவ்வியமான காட்சிதான். என் சென்ற கால வாழ்நாட்களில் இத்தகைய எழில்மிக்க மங்கையரை நான் கண்டதே இல்லை சார்' என்றான் ராமநாதன்.

'என்னமோ போங்கள் சார்! களங்கமற்ற இத்தகைய பெண்களின் காதல் அன்பை பெறுவதைக் காட்டிலும் வேறே பெறற்கரிய பேறுமுளதோ?' என்று முடித்தான் கோபாலன்.

'ஆகா! என்ன அழகு சார்!' என்றான் ராமநாதன்.

'இவளுடைய கணவனைப் பார்த்தால் ரொம்ப விகாரம் சார்!' என்றான் கோபாலன்.

ராமநாதன்:—விவாகமான பெண்ணா இவள்?

காபாலன்:—விவாகமாகி இருந்தால் என்ன?

ராம:—தாங்கள் சொல்வதைப் பார்த்தால் ஏதோ நம்பிக்கை வைக்கலாம் போலத் தோன்றுகிறதே?' என்று தன் கருத்தை மறை பொருளாக வைத்துக் கேட்டான்.

கோ:—முயற்சித்தால் முடியாதது ஒன்றுளதோ?

ராம:—எவ்வளவுதான் அழகிய பெண்ணாயிருந்தாலும் பிறன் மனைவியை இச்சிப்பது பெரும் பாதகமல்லவோ? ஆதலால் அத்தகைய அநீதியான நேர்மையற்ற காரியத்தில் பிரவேசிக்கக் கூடாது சார்!

கோ:—என்ன சார்! நீங்கள் பழங்கால பயித்தியக்காரரா யிருக்கிறீர்கள். எவன் இதையெல்லாம் இப்பொழுது கடைப்பிடிக்கிறான். ஏதோ முற்காலத்தவர்கள் எழுதி வைத்தார்கள். இந்த வேதாந்தம் வாயளவிலேயே நிற்கிறதே யொழிய செயலளவிற்கு வரவில்லை. வெள்ளைக்காரரைப் பாருங்கள் சார்! காலத்தின் போக்குக்குகந்தபடி வாழ்க்கைக்கு முரணாகாதவாறு சட்டங்களைமாற்றி அமைத்துக் கொள்ளுகிறார்கள்' என்று ஓர் சிறிய பிரசங்கமே செய்து முடித்து விட்டான்.

இச்செயல்களை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த எதிர் வீட்டு எத்திராஜுலு நாயுடு பக்கத்து வீட்டு சௌந்தராஜுலு நாயுடு விடம் 'ஏது சார்! பையன் வசமாய் சிக்கிக்கொண்டான் போலிருக்கே! நல்ல பணக்காரப் பையன்தான் போலிருக்கு! எந்த ஊரோ பாவம்!' என்றார்.

சௌ:—உங்களுக்குத் தெரியாதா பையனை! நமது மலையனூர் விஸ்வநாத ஐயர் மாப்பிள்ளைதான்' என்றார். அந்த விஷயம் தெரிந்த பேர்வழி.

எத்தி:—என்ன விவாகமான பையன்தானா இவனுடன் எல்லாம் சகவாஸம் வைத்துக்கொண்டு இத்தகைய செய்கைகளுக்கெல்லாம் உடன்படுகிறான். எல்லாம் மிருக ஜென்மம் சார்! மடப் பயல்கள்; அயோக்கியர்கள்; இந்தப் பயல்களால்தான் உலகம் இப்படியிருக்கு' என்று ஒரே யடியாக வசவு ஆராதனைகளை அடிக்கிக் கொண்டே போனார்.

சௌ:—இல்லை சார்! பையனுக்கு இப்போது விவாகம் நடந்ததும் ஒன்றுதான், நடக்காததும் ஒன்றுதான்.

எத்தி:—ஏன், என்ன விஷயம்?

சௌ:—இப்பையன் பெண்ஜாதி 8 வயது குழந்தை சார்! விவாகமாகி இப்போது இரண்டு வருஷமாகிறது.

எத்தி:—என்ன சார்! நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது எட்டு வயது என்றால் 6 வயது குழந்தையைபா இத்தடியனுக்கு விவாகம் செய்து வைத்தார்கள்? பேஷ்! என்ன மிருகத்தனம் சார்! படைக்கும்போது கடவுள் இவர்களுக்கெல்லாம் மூளை வைப்பதற்கு மறந்துவிட்டார் போலிருக்கு?" என்று காடியாய் கத்தினர்.

சௌ:—எப்படியோ போகட்டும்; நமக்கென்ன சார்! அதைப் பற்றி' என்று சொல்ல இருவரும் பிரிந்தனர்.

ஒருநாள் மாலை 4 மணி இருக்கலாம். கோபாலன் முகமலர்ச்சியுடன் விரைவாய் தன் வீட்டிற்குள் புகுந்தான். உள்ளிருந்த ராமநாதன் இதனைப் பார்த்ததும் புன்னகை புரிந்துகொண்டே 'என்ன சார்! காயா—பழமா?' என்றான்.

கோ:—நான் சென்றுமா காயாகும்? பழம்தான். மேலும் அவள் கணவன் அயலூர் சென்று விட்டான். நாளைத்தான் வருவானும். எல்லாம் அதிர்ஷ்டம்தான் சார்!

ராமநாதனுக்கு அளவற்ற ஆனந்தம் பொங்கிற்று. முன் பின் அறியாத கோபாலன் தன்பால் காண்பிக்கும் அன்பிற்கும் அவன் செய்த நன்றிக்கும் எவ்விதம் பிரதி யுபகாரம் செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

ராம:—சார், தாங்கள் என்மீது கொண்டுள்ள அன்பு எல்லையற்றது. இதற்கெல்லாம் நான் என்ன பிரதி யுபகாரம் செய்யப் போகிறேன்?

கோ:—அதெல்லாம் இருக்கட்டும் சார்! பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் சடுதியில் அவள் வீட்டிற்குள் சென்று விடுங்கள். வாருங்கள் போவோம்.

ஆனந்தக் கண்ணீர் பொழிய தன் பெட்டியுடன் அவன் பின் சென்றான் ராமநாதன். இருவரும் நாம் முன்பு கூறிய யுவதியின் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

ஆகா! என்ன ஆச்சரியம். முன்னிலும் பன்மடங்கு அழகுடன் பொலிந்தாள் அம்மங்கையர் திலகம். புன்முறுவலுடன் அவள் நின்றிருந்த காட்சி 'உலகிலுறை அழகெலாம் உருவெடுத்து வந்த

தாம்' என்றபடி இருந்தது. பின் கோபாலன், பத்து நிமிஷத்திற்குள் தான் வருவதாயும், ராமநாதனை அங்கேயே இருக்கும்படியும் கூறி விட்டு ஏதோ அவசர காரியத்தை கவனிப்பவன்போல விரைந்து சென்றான் வெளியில்.


ராமநாதன் அங்கு போட்டிருந்த கட்டிலொன்றில் அமர்ந்து கொண்டான். அவன் மனதில் அமாவாசை தினம் சமுத்திரத்தில் அலைகள் ஆர்ப்பரித் தடங்குவதுபோல எண்ணங்கள் பற்பலவாகத் தோன்றின. சந்தோஷம் ஒரு சமயம், துக்கம் அடுத்த வினடி; பயம் பின்னால். இப்படி அவன் மனதில் ஒன்றன்மேல் ஒன்றாய் எழுந்து விழுந்ததால் அவன் பீதியடைந்தான். உடனே அவன் மனதில் தைரியம் தலை தூக்கி ஆடியது. 'சே! என்ன பயம். மனதிற்குகந்த மங்கையரோடு கூடி சுகிக்க வேண்டியதுதான் சுகம்' என்று எண்ணி யவளைப் 'கண்ணே! இப்படி வந்து அமரேன்' என்றான்.

அம்மங்கையும் அடிமேலடி வைத்து நடந்துவந்து மிகுந்த நாணத்துடன் அவன் பக்கலிலேயே அமர்ந்தாள். ராமநாதன் உடனே தன் பெட்டியைத் திறந்து 500 ரூபாய் பெறுமான 'காசு மாலை' ஒன்றை எடுத்து தனது கரத்தாலேயே அவளது திருக் கழுத்தில் அணிந்தான். இருவர் உள்ளத்திலும் இன்ப வெள்ளம் கரை புரண்டோடிற்று. ஆழ்ந்த காதல். ஒப்பற்ற அன்பு. மறுநிமிடம் ஆவலுடன் அவளை அணைத்து அவளது முகார விந்தத்தில் எண் ணிறந்த முத்தங்களைப் பொழிந்தான்.

வெளியில் யாரோ 'லொட லொட' என்று கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டனர். 'ஏண்டி கதவைத் திறவேன்' என்று அதிகாரத் தோரணையில் சப்தம் கேட்கவே அவள் முகம் வெளுத்துவிட்டது. ராமநாதனின் முகம் சவம் போலானது. மறுநிமிடம் கையை நெறித்துக்கொண்டு 'ஐயையோ! என்ன செய்வேன். நாளை வருவதாகச் சொல்லிப் போனவர் இதற்குள் வந்து விட்டாரே' என்று துடிதுடித்தாள். அப்பொழுதுதான் கதவைத் தட்டியது அவள் கணவனென்று ராமநாதனுக்கு தெரியவந்தது. தெரிந்ததும் அவன் உடலும், உயிரும் ஒருங்கே நடுங்கியது. என்ன செய்வான்! அபாயமான நிலைமை! தன் உயிரை இழந்து விட்ட தாகவே அவன் மதித்தான். அதற்குள் அம்மங்கை ராமநாதனை ஒரு பாயில் மறைத்து வைத்துவிட்டு கதவைத் திறக்க ஓடினாள்.

திறந்ததும் ஆறு அடி, உயரமும், பருத்ததேகமும், திடகாத்திர சாலியாகவுமுள்ள ஒருவன் உள் நுழைந்தான். அப்போது ராமநாத னின் மனநிலை எவ்வாறிருந்திருக்கு மென்பதை விவரிக்கவேண்டிய தில்லை. மாணதண்டனை யடைந்த ஒருவன் அத்தண்டனை நெருங்க ஒரு நிமிடமே இருக்கும்போது அவன் மனது என்ன நிலையிலிருக்

குமோ அவ்விதமிருந்தது. வந்தவன் அங்குமிங்கும் சற்று சுற்றிய பின்னர் பாயை எடுத்து உட்காருவதற்காக அதை யெடுக்கப் போனான். அச்சமயம் ராமநாதனுக்கு பாதி உயிர் போய்விட்டது. மிகுதி இருந்த பாதிஉயிரில் போதுமான தைரியமுமில்லை.



அவன் பாயை எடுத்ததுதான் தாமதம். ‘அடே! அயோக்கிய ராஸ்கல், திருட்டுநாயே, சோதாப்பயலே, எழுந்து நில்லடா படுவா!’ என்று பலவாறு அதட்டவே இடியோசை கேட்ட நாகம்போலானான் ராமநாதன்.

ராமநாதன் நடுங்கிக்கொண்டே எழுந்தான். அதற்குள் அந்த ஆசாமியும் கொஞ்சம் இரக்கமுள்ளவன்போல் நடித்து ‘அடே மடையா! போனால் போகிறது. மரியாதையாக ரூபாய் பதினையாயிரம் இவ்விடம் எண்ணி வைத்துவிடு. இல்லையேல் உன் தகப்பன் முகத்தில் விழிக்கமாட்டாய். இது நிச்சயம்’ என்று கோபாவேசத்துடன் மொழிந்தான். ‘உன் அயோக்கியத்தனத்திற்கு உன்னை கொன்றிருப்பேன். இருப்பினும் விட்டுவிட்டேன் மரியாதையாக, தொகையை எடு’ என்றான்.

ராமநாதனுக்கு அறிவு கலங்கி விட்டது. அவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. இது வெளிக்குத் தெரிந்தால் தனக்கு மிகுந்த அவமானமும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படும் என்பதை உணர்ந்தான்.

வாய்பேசாது ரூபாய் பதினையாயிரத்தையும் எண்ணிவைத்துவிட்டு சகிக்கவொண்ணாத துக்கத்துடன் தன் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

தன்னை இதுகாறும் ஆதரித்த அத்தியந்த நண்பன் இல்லத்துக்குச் செல்லும் எண்ணத்துடன் விரைந்து வரும்பொழுது அந்நங்கையின் வீட்டில் தனக்கு பழக்கமான நகையொலி யொன்று கேட்டதையும் கவனியாது பீதியுடன் நடந்தான்.

நண்பனின் வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. இனியும் அங்கிருந்தால் ஏதேனும் அபாயம் நேரக்கூடுமென்பதை எண்ணியவனாய் விரைந்து நடந்தனன்.

அப்போது வெளித்திண்ணையில் நின்றுகொண்டிருந்த சௌந்தாராஜுலு நாயுடு ராமநாதனின் பரிதாபமான நிலையைக் கண்ணுற்று மனமிரங்கி அவனிடம் வந்து 'ஏனப்பா அங்கு போனாய்? அவள் பெரிய வேசிமுண்டையாயிற்றே! பலதந்திர சாமர்த்திய வழிகளால் கிட்டியவர்களின் மூளைகளை உறிஞ்சி விடுவார்களே! ஐயோ பாவம்! உன்னுடன் சிநேகமாயிருந்தவன் மகா அயோக்கியனாயிற்றே! அவன்தான் அவளுக்கு முதல் காரியதரிசி' என்று கூறினார்.

ராமநாதன் இவைகளை யெல்லாம் கேட்டவுடன் திடுக்கிட்டுப் போனான். அப்பொழுதுதான் அவனுக்கு விஷயம் ஒவ்வொன்றாக புரியவந்தது. இதுகாறும் தன்னுடன் அத்தியந்த நண்பனாக நடித்த கோபாலன்மீது அளவிலாத கோபம் கொண்டான். வீட்டினுள் இருக்கும்போது தன்னை அதட்டி பணம் பறித்தவனும், எல்லாவற்றிற்கும் உடந்தையாக இருந்த கோபாலனும் ஒரு பெருத்த கொள்ளைக்கூட்டக்காரர்களே என்று நினைத்தான். அப்போதுதான் நகையொலியின் ஞாபகம்வர அது கோபாலனின் தொனியே என்று நிச்சயித்தான். எல்லாவற்றையும் நினைக்க நினைக்க அவன் மனம் துக்கசாகரத்திலாழ்ந்தது. தன் மாமனாரிடம் 'பதினையாயிரம் ரூபாய் செய்தியை என்னவென்று சொல்வேன். இதுவரை நான் இத்தகைய அயோக்கிய விஷயங்களுக்கு உட்பட்டதில்லையே. துஷ்டசகவாசத்தால் நான் இக்கதியடைய நேர்ந்ததே' என்று பிரலாபித்துக் கொண்டே தன் சொந்த ஊராகிய மலையனூருக்கு புறப்படலாயினன்.

வரும்போது உலகவாழ்க்கையே சுத்தமோசமென்று அவன் புத்தியில் பட்டது. வாழ்க்கையையே வெறுத்தான்.

நிற்க ராமநாதன் வியாபார நிமித்தமாய் வெளியூர்களுக்குப் போய் இத்தனை நாள்வரை தங்கி இருந்ததில்லை யாதலால், ஏதாவது ஆபத்து நேரிட்டதோவென்று எண்ணியவராய் விஸ்வநாத ஐயர் பல ஊர்களுக்கு ஆட்களையனுப்பி தேடும்படி சொல்லியிருந்தார். அளவற்ற துக்கத்துடன் ராமநாதன் இல்லம் வந்தடைந்தான். வாயிலில் நின்றுகொண்டிருந்த பத்மா 'அத்தான் வந்து விட்டாண்டி' என்று சொல்லிக்கொண்டே உள்ளே ஓடினாள். விஸ்வநாத ஐயரும், கமலாவும் ஆவலுடன் ராமநாதனை வரவேற்றார்கள்.

சிறிது நேரத்திற்குப்பின் ராமநாதனின் அறைக்கு ஏதோ காரியார்த்தமாகபோன விஸ்வநாத ஐயர் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தார். அழுகைக்குரல் தாங்கமுடியவில்லை. காரணம் ராமநாதன்

தனதறையில் பிணமாய்க் கிடந்தான். அவனருகில் ஒரு கடிதம் கிடந்தது. அவனுடன் அக்கடிதத்தை படித்தார். அது பின்வருமாறு:—

அன்புமிக்க மாமா அவர்களுக்கு,

எனது வாழ்நாள் இன்றுடன் முடிவடைகிறது. நான் ஒரு பெருத்த அநீதியான காரியம்செய்து விட்டேன். விவரிக்க முடியவில்லை அத்தகைய மகத்தான குற்றத்தின் பலனை நான் அநுபவிக்க நேர்ந்தது. ரூபாய் பதினையாயிரம் இழந்து விட்டேன். நான் பெரும் பாதகன்; சண்டாளன். ஆதலின் பாஷாணம் அருந்திவிட்டேன். வருந்தாதீர்கள். குற்றமற்ற சிற்றிளம் பெண் பத்மாவின் வாழ்க்கையை கெடுத்துவிடாதீர்கள். தகுந்தவனைப் பார்த்து மறுவிவாகம் செய்துவையுங்கள். அதுவே எனது ஜீவியத்தின் இறுதியான கோரிக்கை. இப்படிக்கு ராமநாதன்.

ஐயர்வாள் இக்கோரிக்கையை நிறைவேற்றுவாரென நாம் எதிர்பார்க்கலாமா?


வெளி வந்து விட்டது! வெளி வந்து வட்டது!!

## தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# 'ஏமாயினே'

கா. தி. ஸ்ரீ.



மாரிகாலம், இரவு பகல் என்ற வித்தியாசமின்றி எங்கும் இருண்ட மேகங்கள் கவிந்து நிற்கின்றன. அடிக்கடி அவைகளினால் எழும் இடிமுழக்கம் ஜனங்களின் நெஞ்சுகளை பதறஅடிக்கின்றது. ஆற்றின் இருகரையும் புரண்டோடும் பிரவாகம் 'ஹோ'வென்று இரைகின்றது. விர்விர் என்று அடிக்கும் காற்றும் தூவானமும் மனிதர்களை வெளிவரவொட்டாமல் தடுக்கின்றன. குளிரினால் போர்வையைப் போர்த்தியபடியே வீடுகளில் சிலர்முழங்கால்களைக் கட்டிக்கொண்டு குந்தியவண்ணமாயுமிருக்கின்றனர். மணி எட்டாகியும் தெருக்களில் ஜனங்கள் நடமாட்டமின்றி இருந்தது.

இவ்வேளையில் ஆற்றில் நீராடி கிடுகிடென்ற ஆட்டத்துடன் கையில் தீர்த்த பாத்திரத்தை ஏந்தியபடியே 'ராம, ராம' என்ற தாரசமந்திரத்தை உச்சரித்தவண்ணம் குடிசைக்குள் நுழைகிறார் ஓர் வைதிக கிரகஸ்தர். 'அடியே, ஏது இன்னும் படுக்கையைச் சுத்தலையா? நாழிகை எவ்வளவு ஆச்சுது' என்று ஓர் அதட்டல் போட்டார் ராமாசாஸ்திரிலு.

சகதர்மினியான சாரதாம்பா 'த்சூ' என்றாள். 'இந்தா, அப்படிச் சொல்லாதேன்னு எத்தனைதடவை சொல்றது, கக்கா-பிக்கான்னு, அந்தப் பாஷையை விட்டுடேன்னா கேக்கறதில்லே, என்று கோபித்தார் சாஸ்திரிகள்.

'இந்தாரும், உம்மைத்தானே, காலையிலே குளிச்சுப்பூட்டு வந்துட்டா ஆத்துலே ஒன்னுமில்லையே; உஞ்சவிர்த்தியில்கூட இருவருக்கும் போதுமான அக்ஷதை கிடைக்கமாட்டேன்கிறதே. போதாக்குறைக்கு அடை மழையும் பிடித்துக்கொண்டது. என்ன செய்வது' என்றாள் சாரதா.

மழை 'ஜோ'வென்று கொட்டுகிறது. காற்றால் பிய்க்கப்பட்ட கூரை ஓலைகளின் இடுக்குவழியாய் ஜலம் ஒழுகிக்கொண்டேயிருக்கிறது. சாஸ்திரிகள் உலர்ந்ததும் உலராததுமான கந்தலை உடுத்திக்கொண்டு அவசர அவசரமாக திருமண்காப்புகள் தரித்து திருப்பவித்

திரம் துளசிமணி முதலிய தாவடங்கள் அணிந்து மழைநின்றதும் தம் உத்தியோகத்துக்குப்போக ஆயத்தமானார்.

அப்பொழுது தமது வாழ்க்கையைக் குறித்து சிந்தித்தவாய் அங்கு மிங்கும் உலாவிக்கொண்டே சம்சார சாகரத்தைத் தாண்டுவதற்கான உபாயத்தைத் தேடினார். 'அதுவே சரி' என தாம் நினைத்ததை தீர்மானத்துக்கு கொண்டுவந்தார். பின்னும் 'ஐயோ அவ்விதம் செய்வதற்கு எவ்விதம் துணிவது' என்று மனதினிடம் மறுபடியும் வாதாடுகிறார்.

கடைசியில் வைராக்கியமே ஜெயம்கொண்டது. ஐந்துமாத கற்பிணியான தனது அருமைக் காதலி சாரதாவைக் கைவிடத் துணிந்தார். அக்ஷயபாத்திரத்தை தூக்கி தோளில் மாட்டினார். அப்பொழுது வெளியேறினவர்தான். நாட்கள்பல, மாதங்கள்பல சென்றும் திரும்பவேயில்லை. யாத்திரா மார்க்கத்தில்கூடி வடநாட்டிலுள்ள லுள்ள பற்பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து கடைசியில் கோதாவரி தீரத்து திருக்கண்ணபுரத்தை அடைந்தார். அங்குள்ள மடத்து ஜீயர் ஸ்வாமிகளிடத்தில் சரணமடைந்து கைங்கரியபாரளில் ஒருவராயிருந்து தொண்டுசெய்து வந்தார். உண்மையில் அவர் நடையுடை பாவனைகளில் பக்திசிரத்தையுடையவராகவே காணப்பட்டதால் ராமா சாஸ்திரிலு ஸ்ரீகார்யம் ராமசுவாமி ஐயங்காராய் விளங்கினார்.

உஞ்சவிர்த்திக்குச்சென்று அமுதுபடி கொண்டுவருவார் என்று எதிர்பார்த்திருந்த களங்கமற்ற சாரதா நாயகன் வாராததுகண்டு பெரிதும் மனங்கலங்கி பக்கத்து ஊர்களில்சென்று விசாரித்தும் ஒன்றும் அறியாதவளாய் உயிரைமாய்த்துக் கொள்ளலாமாவென்று எண்ணினாள். ஒருக்கால் நாயகன் திரும்பிவரலாமென்றும், தான் அவ்வாறு செய்வதால் சிசுஹத்திக்கும் ஆளாகக் கூடுமென்றும் அறிவோர்கள் சொல்லக்கேட்டு யாசித்து ஜீவனம் செய்துவந்தாள். பக்கத்து வீட்டார்கள் உதவியினால் குறிப்பிட்ட காலத்தில் ஓர் அழகிய ஆண் மகவைப்பெற்று, அதை அன்புடன் வளர்த்து ஆறுதல் அடைந்து வந்தாள். எனினும் யௌவன பிராயத்திலேயே அனாதாவாய் அகாரணமாய் உயிருடன் இழந்த கணவனின் பிரிவாற்றாமைக்கு வருந்தி வருந்தி மனம்வாடுவாளாயினள்.

சுமார் ஐந்துவருடங்கள் சென்றன. ஜீயர்சுவாமி பரமபதத்துக்கு எழிவிடவே ஸ்ரீகார்யம் ராமசுவாமி ஐயங்கார் என்ற ராமானந்தரை பட்டத்துக்கு நியமனம் செய்தனர். திருதண்டத்தையும் கையில் கொடுத்து முந்தியசுவாமியை சமாதிசெய்தனர். ஸ்ரீமத் வேதாந்த யோகீந்திர ராமானந்த ஜீயர் திருவாராதனம் ததியாராதனம் முதலியன தினமும் முறைப்படி முடித்தபின்பு வேதோபநிஷத், பிரபந்த

வியாக்கியானம் முதலிய சத்காலக்ஷேபத்தில் ஈடுபட்டு உபதேசம் செய்து கொண்டிருப்பார்.


ஒருபெரிய ஆதீனம், மடாதிபதியென்ற பெருமை, கைங்கரிய பரர்ள், கைகட்டி வாய்பொத்தி சேவைசெய்யும் பாக்கியம், வேளை தவருது கிடைக்கும் உயர்தரபோஜனம் முதலியன தாமே எதிர் பாராதவிதமாய் கிடைத்தபோதிலும் சுவாமிக்கு சிற்சில சமயங்களில் தமது பூர்வாஸ்ரமத்தின் ஞாபகங்கள் மனக்கண்முன் தோன்றவே, ஏகாந்த அறையின் படுக்கையிலிருந்தபடியே 'ஏமாயினே—சாரதா—ஏமாயினே' என்று உச்சரித்து கண்ணீர் வடித்தவண்ணமாய் இரவு பூராவும் தூக்கமின்றியே யிருந்துவருவார்.

சதாகாலமும் சுவாமியின் அருகே யிருந்துவந்த சிஷ்யனுன அனந் தாழ்வான் அடிக்கடி இதைக்கண்டும் இது கேட்டுமிருந்தும் சுவாமி யின் நிஷ்டையென்று நினைத்திருந்தான். நாளடைவில் அது சுவாமி யின் வியாகூலம் என்றறிந்து அதை நிவர்த்திசெய்தால் தான் மகத் தான பெருமையை அடையலாமென்ற நோக்கங்கொண்டு ஒருநாள் மடாதிபதியினிடத்தில் விடைபெற்று தேசயாத்திரை புறப்பட்டான்.

தென்னுட்டில் அநேக இடங்களில் சுற்றுப் பிரயாணஞ்செய்து ஆங்காங்கே, 'ஐந்தாறு வருஷங்களுக்குமுன் யாத்திரைசென்று திரும்பாமலும், சதா சாரதாவை தியானம்செய்து கொண்டும், சொற்ப வயதுள்ளவராயும் வேத விற்பன்னராயுமுள்ள ராமானந் தரைப்பற்றி யாரேனும் அறிவீர்களோ' என்று புலன்விசாரித்து ஒருவருஷமாய் அலைந்தும் ஒன்றும் பலன் இல்லாததுகண்டு பெரிதும் மனம்கலங்கினன். கடைசியாக பாண்டியநாட்டின் தென் பகுதிவரை யிலும்வந்து பார்த்துவிடுவதாகத் தீர்மானித்தான்.

முயற்சி வீண்போகாதன்றே! ஒருநாள் கலியுகக் கற்பகதருக் களால் (பனை) சூழப்பட்ட திருக்கள்ளூர் என்ற ஊரை அடைந்தான். அங்கே தனது விசாரணையினுல் சாரதாவின் இருப்பிடம் தெரிந்து, மிகவும் களிப்படைந்து, அங்குச் சென்று, தாம் வந்தகாரியத்தை வெளியிட்டான். அந்த அம்தாளும் ஆதியோடந்தமாய் தன் கதை யைச்சொல்லி கண்ணீர்விடவே, அனந்தவாழ்வான் சுவாமியின் திரு நிழல் படத்தைக் காண்பித்து, அவர் ஓர் மடாதிபதியா யிருப்பதை யும் அறிவித்துத் தேற்றினுன். பின்பு அத்தேவியையும், குமாரனையும் தம்முடன் அழைத்துவந்து, ஓரிடத்திலிருத்தி, தமது பராமரிப்பில் கொஞ்சநாள் வைத்திருந்தான். பின்பு ஒருநாள் சுவாமி, 'ஏமாயினே' என்று பிரலாபிக்கும்பொழுது 'இஷ்ட ஆயினு' என்று பையனை அவர் முன்நிறுத்தி கைகட்டி வாய்பொத்தி பக்தி சிரத்தையுடன் நின்றுன் அனந்தவாழ்வான்.

திடீரென்றுகேட்ட குரலினால் திடுக்கிட்ட ராமானந்தஜீயர் கண் விழிக்கவே தன்னைப்போன்ற சாயலுடைய ஆறு வயதுப் பையன்



முன் நிற்பதையும், அனந்தவாழ்வான் புன்சிரிப்புடன் வினயமாய் நிற்பதையும் கண்டு, ஆச்சரியமும் திக்பிரமையும் கொண்டு, 'அனந்தா, இந்தப் பையன் யார்? என்ன விசேஷம்!' என கேட்க, 'சுவாமி, எல்லாம் அவ்விடத்து பாக்கியம்தான். எனது யாத்திரையில் கண்ட பலனாகும். இவர் தமது திருக்குமாரன்! அம்மங்காரும் இவ்விடம் எழுந்திருக்கின்றனர்! இனி தங்கள் கவலையை விட்டொழிக' என்றான் அனந்தவாழ்வான்.

இவ்வளவு அந்தரங்கமாய் பாடுபட்ட அனந்தனுக்கு என்ன கைம்மாறு செய்தாலும் தகும்! ஆகவே மடத்தின் சர்வாதிகாரத்தை அனந்தனுக்குக் கொடுத்து, சாரதாதேவியையும், பையனையும் மடத்தில் சேர்த்துக் கொண்டார். இனிமேலேனும் ராமானந்தஜீயர் சுவாமிகளுக்கு தமது பூர்வாஸ்ரமத்தைப்பற்றிய 'ஏமாயினே' என்ற வேதனை ஏற்படுவதற்குக் காரணமில்லையன்றோ! அடுத்த பட்டத்துக்கு அனந்தாழ்வானும் சுவாமியின் திருக்குமாரரும் காத்திருக்கிறார்கள் என்பதில் நீங்கள் ஆச்சரியப்பட மாட்டீர்களே!

---

பி. ஏ. படித்தவர் ஒருவர் வேலைக்காக அநேகம் கம்பெனிகளில் கேட்டும் வேலை கிடைக்காமல் முடிவில் ஒரு கம்பெனியில் போய் 'எனக்கு ஏதாவது வேலை காலி இருந்தால் தயவு செய்து கொடுக்கவும்' என்றார்.

கம்பெனிமானேஜர்:—என்ன ஐயா, வெளியில் போட்டிருக்கும் விளம்பரத்தைப் பார்த்தாவது வேலை காலி இல்லை என்று தெரிந்துக் கொள்ளக் கூடாதா? காலையில் எழுந்திருந்தால் மாலை வரையிலும் வேலைக்காக வருபவர்களிடம் வேலை காலி இல்லை என்று சொல்வதற்கே சரியாய் இருக்கிறது. இதற்கே ஒரு ஆள் வேண்டும்போல் இருக்கிறதே.

பி. ஏ. படித்தவர்:—ஐயா! தயவு செய்து என்னை அந்த ஆளாகவாவது வைத்துக்கொள்ளுங்கள்.

—பி. கோபால்சாமி

# கமலாட்சி அல்லது
# காரிகையின் களங்கமற்ற காதல்

[மயிலை எஸ். ஐ. நாதன்]

(நமது தொடர்கதை)

## 6-வது அத்தியாயம்

### கமலாட்சி மறைதல்

முன்னதிகாரத்தின் இறுதில் நிகழ்ந்த சம்பவத்திற்கு மறுநாள் காலை சுமார் 8 மணியிருக்கும். கமலாட்சியின் அறையில், அவளது தாயார் கற்பகவல்லி அவளுடன் கோபத்தோடு பின்வருமாறு சம்பாஷிக்கலானாள்.

கற்பகவல்லி :—நேற்று மாலை பூந்தோட்டத்தில் யாரிடம் பேசிக்கொண்டிருந்தாய். ஏதோ அளவுக்குமேல் காரியம் செய்கிறாய்? நமது குலத்துக்கடுக்காது.

கமலாட்சி:—அம்மா! அப்படியொன்றும் நான் தப்பிதமாய் நடந்து கொள்ளவில்லை. எல்லா விஷயத்தையும் தங்களிடம் தெரிவிக்கத்தானிருந்தேன். அதற்குள் நீங்களாகவே இதை கேட்டு விட்டீர்கள்.

கற்பகவல்லி:—அவன் யார்? அவனது வரலாறு ஒன்றும் தெரியாமல் அவனிடம் இப்படி நெருங்கி வார்த்தையாடினால் நம் குலத்துக்குத்தானே இழிவு.

கமலாட்சி:—அம்மா! அவர் நம் ஜாதியைச் சேர்ந்தவரே. அவர் நமது ஊருக்கு பக்கத்திலிருக்கும் பூங்காவனமென்ற கிராமத்துக்கு அதிபதி. அவரை நான் காதலிக்கின்றேன். அவரும் என்னை மெய் அன்போடு காதலிக்கின்றார். ஆகவே நான் அவரையன்றி வேறு ஒருவரையும் மணக்கப் போவதில்லை.

கற்பகவல்லி:—கமலம்! என்ன சொன்னாய். பெரியோர்கள் நாங்களிருக்க நீ எப்படி அவரை சந்தித்தாய்? எல்லாம் உன் இஷ்டம் போல் நடக்கலாம் என்று நினைக்கிறாயோ!

கமலாட்சி:—அம்மா, சில நாட்களுக்கு முன் நான் தோழிகளுடன் பூந்தோட்டத்தைச் சுற்றி வந்துக்கொண்டிருக்கும் சமயம்

அவர் வழிதப்பி நமது பூந்தோட்டத்திற்குள் வந்துவிட்டார். நான் அவரை பார்த்த அந்நாள் முதற்கொண்டு அவரையே என் மணவாளனுக கருதினேன். தோழியைவிட்டு அவரது வரலாற்றை யறிந்து நேற்றையதினம் இவ்விடம் வரும்படி நான் அழைத்து அவரது கருத்தை யறிந்தேன். அவரும் என்னையே மணப்பதாக வாக்குறுதி கொடுத்து சென்று இருக்கிருர்.

கற்பகவல்லி:—ஐயோ! காரியம் மிஞ்சிவிட்டதுபோ லிருக்கிறதே. கூடாது, அவரை நீ மணஞ்செய்யக்கூடாது. அப்படி செய்வதை நான் பார்க்கிறேன். முன்பின் அறியாமல் காரியத்தில் தலையிடக் கூடாது?


கமலாட்சி:—ஒருவரை யொருவர் கலியாணம் செய்வதற்கு முன் அவர்கள் இருவரும் உண்மையான காதலில் ஈடுபட்டிருப்பார்களேயானல் கடைசி பரியந்தம் அத்தம்பதிகள் ஒற்றுமையோடும், சந்தோஷத்தோடும் குடும்பத்தை நடத்துவார்கள். ஆகவே அவர்க்கும் எனக்கும் உண்மையான காதல் முன்னமேயே உண்டாயிருக்கிறபடியால், என்ன பெரிய அதிகாரத்தை அடைந்த போதிலும் என் மனம் மாருது. அவர் என்ன தாழ்ந்த ஸ்திதியை யடைந்தாலும் அவரிடத்துள்ள என் காதல் மாருது. ஆகவே, அம்மா! என்னை கூடிய சீக்கிரத்தில் அவருக்கு கலியாணம் செய்து கொடுத்து விடுங்கள்.

கற்பகவல்லி:—ஏ! பரம சாம்பவா! விஷயம் இவ்விதமாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே! கமலாட்சி, வேண்டாம்; நீ கொண்ட விஷயத்தை விட்டுவிடு. இனிமேல் அவரை நீ எக்காரணத்தை முன்னிட்டும் பார்க்கக் கூடாது. இனி நீ என் பார்வையிலே இருக்கவேண்டும். (அவளது தோழி கனகசுந்தரத்தை கூப்பிட்டு) எனது அறைக்கு பக்கத்தறையில் கமலாட்சி இனி இருப்பாள். ஆகவே எல்லா சாமான்களும் அவ்வறைக்கு இன்று இரவுக்குள் வந்து சேரவேண்டும்;

என்று கூறிக்கொண்டே வெகு கோபத்தோடு சென்ருள். அப்படியே கமலாட்சி புது அறையில் வசித்துக்கொண்டு வருகிருள். அவளது விஷயத்தில் மாளிகையிலுள்ள யாவரும் கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனல் கமலாட்சி கனகசுந்தரத்தின் உதவியால் எல்லா விஷயங்களையும் அவ்வப்போது சுந்தரநாதனுக்கு தெரிவித்துக் கொண்டு வந்தாள். இவ்வாருக இவர்களது காதலும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது.

இவ்வாறு ஒரு மாதம் ஓடி மறைந்தது. ஒருநாள் மாலை கற்பகவல்லியின் வீட்டிலுள்ள பெண்டிர்கள் யாவரும் பூந்தோட்டத்துக்குச் சென்றிருந்தார்கள்: அப்போது கமலாட்சி அழகிய தன்

வலது கரத்தால் மோவாயை ஊன்றியவாறு சுந்தரநாதனைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவளது அழகிய வதனம் அனலால் வதங்கிய ரோஜாமலரை போலிருந்ததென்றால் அவளது துயரைப் பற்றி அதிகமாயொன்றும் சொல்லுவதற்கில்லை. அவள் அன்றுபகல், தன் காதலனுக்கு ஓர் கடிதமொன்று எழுதி தோழியிடம் கொடுத்து கொடுக்க சொன்னது, அப்போது அவளது கவனத்துக்கு வந்தது. 'இன்று இரவுக்குள் அவள் கொடுத்து விடுவாள்' என்று யோசித்துக் கொண்டு அவ்விடத்தில் கும்பலாக அடர்ந்திருந்த ரோஜா செடியை



நாடிச் சென்றாள். அப்போது மணி 6½-க்கு மேலிருந்தது. இருள் எங்கும் சூழ ஆரம்பித்தது. அச்சமயம் 'ஐயோ! திருடர்கள், திருடர்கள்' என்று லோகநாயகி கூவிக்கொண்டே மாளிகையை நாடி ஓடினாள். 'ஐயோ! நான் போனேன்' என்று கமலாட்சி அலற, அவளை யாரோ இரண்டு முரட்டு மனிதர்கள் தூக்கிச் சென்றார்கள். அப்போது கற்பகவல்லியும், கனகவல்லியும் எவ்வளவோ கூவியும் ஒன்றும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. பின்னர் வேலையாட்கள் கழியும் தடியுமாக அப்பூந்தோட்ட முழுவதும் தேடி அலைந்தும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. கமலாட்சியும் அவர்களோடு மறைந்தாள்.

அப்போது வெளியில் சென்றிருந்த சோமநாதன் அவ்விடம் வர, யாவரும் ஒன்றுகூடி கமலாட்சியை யார் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள் என்று கவலையோடு யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

லோகநாயகி:—அம்மா! அவர்கள் வெகு முரடர்களாயிருந்தார்கள். நேரில் என்னை நோக்கி வந்தார்கள். நான் அலறிக்கொண்டு ஓடி வந்துவிட்டேன். இல்லாவிட்டால் என்னையும் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள்.

கற்பகவல்லி:—ஒருவேளை அவர்கள் திருடர்களா யிருப்பார்களோ! என்னமோ?

சோமநாதன்:—திருடர்களாயிருந்தால் மாளிகையினுள் புகுந்து திருடாமல், ஓர் யௌவனப் பெண்ணையா தூக்கிக்கொண்டு போவார்கள். அவர்கள் திருடர்களா யிருக்கமாட்டார்கள். ஒருவேளை

கமலாட்சி சிநேகித்து வந்த அந்த ஆடவனே ஆட்களைக்கொண்டு தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டும்.

கனகவல்லி:—ஒரு வேளை அப்படியும் இருக்கலாம்.

லோகநாயகி:—அம்மா! ஏன் அக்காள் அணிந்திருக்கும் ஆபரணங்களை திருட வேண்டி, திருடர்கள் தூக்கிக்கொண்டு போயிருக்கக் கூடாது?

சோமநாதன்:—நீங்கள் எல்லோரும் இவ்விடத்திலிருப்பதை அறிந்து அத்திருடர்கள் சுலபமாய் மாளிகையினுள் நுழைந்து திருடாமல் கும்பலில் புகுந்து அவளைமட்டும் ஏன் தூக்கிக்கொண்டு போக வேண்டும்? இதில் ஏதோ சூது நடந்திருக்க வேண்டும். நாம் எதற்கும் கனகசுந்தரத்தைக் கூப்பிட்டு கேட்டுப் பார்க்கலாம்.

கனகவல்லி வேலையாளை கனகசுந்தரத்தை கூப்பிடும்படி கூறினாள். அவன் போய் சில நாழிகைக்குள் அவ்விடம் வந்து 'அம்மா! அவளை எங்கு தேடியும் அகப்படவில்லை' என்று கூறிவிட்டு போய்விட்டான்.

சோமநாதன்:—பாருங்கள் அவளையும் காணோம். ஒருவேளை அவள் அவ்வாடவன் வீட்டுக்கு போயிருக்கலாம். நான் வேலையாட்களைக்கொண்டு அவள் அவ்விடமிருக்கிறாளா என்று பார்த்துவரச் சொல்லுகிறேன்'

என்று கூறி தன் வேலையாட்களை அவ்வாடவன் வீட்டுக்குச் சென்று கனகசுந்தரம் அவ்விடம் சென்றிருக்கிறாளா இல்லையா என்பதைப்பற்றி அந்தரங்கமாக விசாரித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டு அனுப்பினான். கற்பகவல்லி தன் மகள் கமலாட்சி மறைந்ததைப்பற்றி ரொம்பவும் விசனமடைந்தாள். லோகநாயகி 'திருடர்கள்தான் நமது அக்காளைத் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டும். அவர்கள் அவளுக்கு என்ன கஷ்டத்தைக் கொடுப்பார்களோ' என்று ஏங்கி கவலையுற்றிருந்தாள்.

சோமநாதன் வேலையாட்கள் அப்பூங்காவன கிராமத்தை நாடிச் சென்றுகொண்டிருக்கும்போது, கனகசுந்தரம் சுந்தரநாதன் மாளிகையை விட்டு வெளி வந்ததை கவனித்து விட்டார்கள். கனகசுந்தரமும் அவர்களை பார்த்துவிட்டாள். பின்னர் யாவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். அப்போது கமலாட்சியை யாரோ தூக்கிக் கொண்டு போய்விட்ட சேதியையறிந்த கனகசுந்தரம் ஆறுதலையா முற்றாள். அன்றுபகல் கனகசுந்தரத்தைக் கூப்பிட்டு பின்வருமாறு சம்பாஷிக்கலானார்கள்.

கனகவல்லி:—கனகம்! நீ ஏன் சுந்தரநாதன் வீட்டுக்குச் சென்றிருந்தாய்? கமலாட்சி உன்னிடம் ஏதாவது கொடுத்து அனுப்பி

ளார்? எல்லாம் விபரமாக ஒன்றும் ஒளிக்காமல் எங்களுக்குச் சொல்ல வேண்டும்.

கனகசுந்தரம்:—(முதலில் பயந்தாலும் பின்னர் தைரியமாக) அம்மா! நேற்று பிற்பகல் கமலாட்சி அம்மை என்னிடம் கடிதமொன்று கொடுத்து அதை சுந்தரநாதனிடம் அன்று இரவுக்குள் கொடுத்து விடும்படியாக சொல்லி கொடுத்தார்கள். அவ்வாறே நான் அவரை இன்று பிற்பகல் சந்தித்து அக்கடிதத்தை கொடுத்தேன். அவர் படித்துவிட்டு அதற்கு பதில் கடிதம் கொடுத்தார். அது இதோ இருக்கின்றது (என்று அக்கடிதத்தை அவர்களிடம் கொடுத்தாள்.)

கற்பகவல்லி:—(அக்கடிதத்தை பின்வருமாறு படிக்கிறாள்.)

எனது அன்புள்ள கமலத்துக்கு,

உன் மனமுவந்த கடிதம் கிடைத்தது. படித்து ரொம்பவும் விசனமடைந்தேன். உன் தாய் சொற்படி நடக்க முயல்வாய். அவர்களிடம் சிறுக சிறுக இவ்விஷயத்தைச் சொல்லி காரியத்தை முடிக்க முடியுமாவென்று பார். அப்படி அவர்கள் ஒரே பிடிவாதமாயிருந்து விட்டால், கண்மணி! அவர்கள் மனம் நோக நாம் நடந்துகொள்ளக்கூடாது. அவர்கள் மனம் எப்போது நமது விஷயத்தில் நாட்டம் கொள்ளுகிறதோ அப்போது அவர்களைக்கொண்டு காரியத்தை முடித்துக்கொள்ளலாம். அதுவரைக்கும், என் அன்பே! நீ பொறுமையாக காத்திரு. நானும் அந்நாள் வரும்வரைக்கும் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். அப்படி நாம் விரும்பிய காரியம் இச்சென்மத்தில் முடியாவிட்டால் மறுஜென்மத்திலாவது நாமிருவரும் அன்புள்ள சதிபதிகளாக இருக்க அந்த ஜெகதீசன் கிருபை பாலிப்பான். ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்யவேண்டாம். நான் உன்னை மறந்து விடுவேன் என்றுமட்டும் நினைக்கவேண்டாம். இது சத்தியம். கடவுள் நம் காரியத்தில் அநுகூலம் செய்வார் என்பதை முழுதும் நம்பி இரு.

இப்படிக்கு,

உன்மீது அன்பும் பிரியமுள்ள

சுந்தரநாதன்.

இக்கடிதத்தைக் கேட்ட யாவரும் சுந்தரநாதனுடைய குணத்தை மெச்சினார்கள். ஆனால் சோமநாதன்மட்டும் இடங் கொடுக்காமல் மேலும் மேலும் பேசிக்கொண்டு போனான்.

லோகநாயகி:—அம்மா! ஒருகாலுமில்லை, அக்காளை திருடர்கள் தான் தூக்கிச்சென்று, இருக்கவேண்டும் என்பது இவர் அக்காளுக்கு எழுதின கடிதத்திலிருந்து நன்கு விளங்கவில்லையா? ஆகவே அக்காள் நமது வீடு வந்து சேரும் வழியைத் தேடுங்கள்.

கற்பகவல்லி:—ஆம்! முன் அக்கொள்ளைக் கூட்டத்தாரும் நமது குடும்பத்தில் கண்ணோக்கமாயிருப்போம் என்று சோமநாதனுக்கு தெரிவித்திருந்தார்கள். அவர்கள் வேலையாகத்தானிருக்க வேண்டும். நாளைக்கடத்தினால் நமக்கே தீங்கு உண்டாகும்.

என்று கூறிவிட்டு கனகவல்லியும், கற்பகவல்லியும் வேலையாட்கள் பலரை பல திக்குகளில் அனுப்பி அவளை கண்டு பிடிக்குமாறு அனுப்பினார்கள். கனகசுந்தரம் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கமலாட்சியை கண்டு பிடிக்காமல் இவ்வீடு திரும்புவதில்லை என்று உறுதிகொண்டு அவளை தேடுவதின் பொருட்டு வெளிக் கிளம்பினாள்.

மறுநாள் காலை பூங்காவனத்தின் 'செல்வ விலாஸ்' என்ற மாளிகையில் நமது சுந்தரநாதர் காலையாகாரமுண்டு சாய்வு நாற்காலில் சாய்ந்து அன்று காலையில் வந்த 'ஜஸ்டிஸ்' தினசரியை படித்துக்கொண்டிருந்தார். அதில் வெளியிட்டிருந்த ஓர் செய்தியை படித்து அப்படியே மூர்ச்சித்து விட்டார். அவ்விஷயம் பின் வருமாறு:

ஓர் யௌவன மாது மறைந்தாள்.

'மெல்போனியா நகரில், கற்பகவல்லி அம்மையின் மூத்த குமாரத்தியாகிய, சுமார் 18 வயது மதிப்பிடக்கூடிய அழகிய இளமங்கையாகிய கமலாட்சி, நேற்று மங்களவாரத்தன்று சாயந்திரம் மறைந்தாள். அவளைத் திருடர்கள்தான் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர். அப்பெண்மணியைக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு அவளது பெற்றோர்கள் ஒரு லக்ஷரூபாய் கொடுப்பதாகவும் வெளியிட்டுயிருக்கின்றனர்கள். இது விஷயமாக, போலீஸ் அதிகாரிகள் தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றனர்'. பின்னர் சுந்தரநாதன் தன் வேலையாளின் உதவியால் மூச்சைதெளிந்து பார்க்கையில் அவன் எதிரில் கனகசுந்தரம் நிற்பதைக்கண்டு 'ஆ! கனகம்! என்ன உன் எஜமானியம்மாள் காணாமல் போய்விட்டாளாமே! காரணம் யாது, உனக்கு தெரியுமா?' என்று ஆத்திரத்துடன் கேட்டார். 'ஆம்! ஐயா, காணாமல் போன அன்று யாவரும் பூந்தோட்டத்திலிருக்கையில், யாரோ இரண்டு முரட்டு மனிதர்கள் புகுந்து நமது கமலாட்சியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்களாம். அப்போது நான் அவ்விடமில்லை. நான் அவர்களை எவ்விதத்திலாவது கண்டு பிடிப்பதென்று உறுதிகொண்டு வெளிக் கிளம்பி விட்டேன். அப்படியே தங்களுக்குத் தெரிவிக்க வேண்டி இவ்விடம் வந்தேன்' என்று சொன்னாள். 'நீ பெண் பிள்ளையாயிருந்தாலும் உனக்கு அதிக சாமர்த்தியமிருக்கிறதென்று எனக்குத் தெரியும். ஆகவே உன்னால் கூடியமட்டும் அப்பொற்கொடியாளைத் தேடிச் சென்று கிடைத்தவுடன் எனக்கு தெரிவிப்பாய், போய்வா' என்று சொல்லி அவளை வழியனுப்பி விட்டார்.

கமலாட்சியை தூக்கிச்சென்ற அவ்விரண்டு முரட்டு மனிதர்கள் கொள்ளைக் கூட்டத்தாரைச் சேர்ந்தவர்களாகிய தலைவனும் மற்றொரு பக்காத் திருடனுமாம். அவர்கள் அவளின் முகத்தில் ஏதோ ஒரு வஸ்துவைக் காட்ட அவள் கூச்சல் போடாமல் தன் சுவாதீனமிழந்தாள். அப்போது அவர்கள் அவளை வெகு எளிதில் தூக்கி அவ்விடத்தில் தயாராக இருந்த வண்டியில் போட்டுக் கொண்டு தங்கள் வாசஸ்தலத்தை யடைந்து அவளை தனிமையான ஓர் அழகிய அறையில் வைத்தனர். அவளுக்கு தாதியாக அக்கூட்டத்தைச் சார்ந்த ஓர் இளம்பெண்ணை உதவிக்கு வைத்து நல்ல ஆகாரம் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். கமலாட்சி மறுநாள் தன் சுய அறிவு அடைந்து தான் தற்போது தங்கி இருக்குமிடம் முதலிய வைகளை அத்தாதியால் அறிந்து மிகவும் வருத்தமடைந்தாள். அவளுக்காக விடப்பட்ட தாதி அவளுக்கு உண்மையாக சகல வேலைகளையும் செய்துகொண்டு வந்தாள். ஓரோர் சமயம் அவள் தன்தாய் சகோதரியைப்பற்றி நினைத்துக்கொண்டு வெகுவாய் கவலைப்படுவாள். இரவும் பகலும் சுந்தரநாதனுடைய நினைப்பாக இருந்து சொல்லில் லடங்கா துயரமடைவாள். சில சமயங்களில் அழுது தன் குறையை ஆற்றிக் கொள்ளுவாள். இவ்வாறாக சிலநாட்கள் கழிந்தன.

ஒருநாள் பிற்பகல், மெல்போனியா நகரில் சோமநாதனும் லோகநாயகியும் ஓர் அறையில் வெகு குதூகலமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். அச்சமயம் தபால்காரன் வெளிக்கதவைத் தட்டி சோமநாதனைக் கூப்பிட்டான். இவன் கூப்பிட்டது சோமநாதனுக்கு கேட்கவே இல்லை. அதன்பேரில் கற்பகவல்லி சென்று விசாரித்ததில் சோமநாதனுக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாகச் சொல்லி கடிதத்தை கொடுத்துவிட்டு போய்விட்டான். கற்பகவல்லி வேலையாள் ஒருவனை விட்டு சோமநாதனைக் கூப்பிட்டு, அக்கடிதத்தை அவனிடம் கொடுக்க, அவன் அதை பின் வருமாறு படித்தான்.

கோட்டை கொத்தளம்

வீரம்பட்டி.

ஐயா, கனம் சோமசுந்தரநாதர் அவர்களுக்கு யானாகிய கொள்ளைக்கூட்டத்தாரின் தலைவன் எழுதிக் கொள்ளுவது.

கமலாட்சி காணாமல் போன விஷயமாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து இருக்கிறீர்கள். அப்பெண்மணியை நாங்கள் தான் உம்மீதுள்ள துவேஷத்தால் தூக்கிச்சென்று இருக்கிறோம். அவளுக்கு கூடியமட்டும் யாதொரு கெடுதலுமில்லாமல் காப்பாற்றுவோம். உமக்கு சாமார்த்தியமிருந்தால் அவளை எங்களிடமிருந்து மீட்டிக்கொள்ளவும். சில நாட்களுக்கு முன் எங்களை போலீசாரிடம்

பிடித்து கொடுப்பதற்காக நீர் வெகு கஷ்டப்பட்டீர். காரியம் முடிந்ததா? வீணாக எங்கள் விஷயத்தில் தலையிட்டு இவ்வித கஷ்டப்பட வேண்டியதில்லையே! இப்போதாவது பத்திரிகைகளில் எங்களுக்கு மன்னிப்பு கடிதமொன்று எழுதி வெளியிட்டால் அன்றைய தினமே கமலாட்சியை தங்கள் மாளிகையில் சேர்ப்போம். இல்லாவிட்டால் எங்கள் காரியதரிசி அப்பெண்மணியை மணமுடித்துக் கொள்ளுவார்.

இங்ஙனம்,

வீரப்பன்.

கொள்ளைக்கூட்டத்து தலைவன்.

சோமநாதன் இக்கடிதத்தைப் படித்துவிட்டு ஆத்திரமும் வீராவேசமும் அடைந்தான் கற்பகவல்லி இவ்விஷயத்தைக் கேட்டு அனலில்விழுந்த புழுப்போல் துடிதுடித்தாள். சோமநாதன் தபால் முத்திரையைக் கூர்ந்து கவனித்தான். அதில் 'வீரம்பட்டி' என்றிருந்தது. பின்னர் அவன் எவ்வித கஷ்டமடைந்தாலும் சரி, எவ்வளவு துன்பம் வரினுஞ்சரி, அக்கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்தாலொழிய வீடு வந்து சேருவதில்லையென்று தீர்மானித்துக் கொண்டான். பின் தாயிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு மறுநாள் அதிகாலை மாளிகையை விட்டு, அன்று முற்பகல் வீரம்பட்டி என்னும் நகரையடைந்தான்.

வீரம்பட்டி என்பது ஓர் அழகிய சிறு நகரம். அதன் தெற்கே ஓர் ஆறும், அதன் பக்கத்தில் ஓர் பெரிய மைதானமும் உண்டு. அந்நகரின் மேற்கே ஒரு விஷ்ணு ஆலயமும் அதைச்சுற்றி நான்கு மாட வீதிகளுமிருந்தன. கிழக்கே சற்றே பெரிதான குளமும் அதன் கரைகளில் ஆகாயமளாவிய அத்தி, மா, பலா முதலிய விருக்ஷங்களுமுண்டு. வடக்கே கடைத்தெருக்களும், நாடகக் கொட்டகைகளும், கண்காட்சி சாலைகளுமுண்டு. இவ்வழகிய இச்சிறு நகரின் கடைத்தெரு மார்க்கமாய் சோமநாதன் சென்றுகொண்டிருந்தான். இவன் தன் மாளிகையைவிட்டு வெளி வந்ததிலிருந்து யாரோ ஒருவன் இவனைப் பின்பற்றியே வந்து அந்நகரின் கடைத்தெருவின் ஓர் கடையின் அருகில் நின்றான். சோமநாதன் தன்னைப் பின் தொடர்ந்து வந்த அம்மனிதனை கவனியாமல் அவனிடமே சென்று, 'ஐயா! நான் இவ்வூருக்குப் புதியவன். இவ்வூரில் சிலநாள் தங்கியிருந்து இதன் அற்புதங்களையும், கோட்டை வாசல்களையும் பார்த்து செல்லலாமென்று வந்தேன். ஆகவே இவ்விடத்தில் சுத்தமான ஓர் நல்ல ஓட்டலை தெரிவித்தால் தங்கலாமென்று நினைக்கிறேன்' என்றான். அதற்கு அப்புதிய மனிதன், 'நான் தங்கியிருக்கும் ஓட்டலுக்கு செல்லலாம் வாருங்கள். நானே தங்களுக்கு இவ்வூரை சுற்றிக் காட்டுகிறேன்'

என்று சொல்லிக்கொண்டே தான் தங்கியிருக்கும் ஓட்டலுக்குச் சென்று அவனுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்து அவனை அறிமுகமாக்கிக் கொண்டான். அன்றுபகல் இவ்விருவரும் போஜனம் செய்துவிட்டு அவ்வூரின் ஆற்றங்கரையை யடைந்து அவ்விடத்தில் இருவருமாக உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்.

புதிய மனிதன்:—ஐயா! தாங்கள் எந்த ஊர்? தங்கள் பெயர் என்ன?

சோமநாதன்:—என்னை சோமநாதன் என்று அழைப்பார்கள். நான் ஓர் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவன். மெல்போனியா நகரில் வசிப்பவன்.

புதிய மனிதன்:—நண்பா! இன்று சாயந்தரம் கண்காட்சி சாலைக்குச் சென்று வேடிக்கைப் படம் பார்க்கலாம். வேறு ஏதாவது இவ்வூரின் முக்கியமான விடத்தைப் பார்க்க வேண்டுமாயின் நாளைக் காலை பார்த்துக் கொள்ளலாம்.


சோமநாதன்:—ஐயா! இவ்வூரின் கோட்டை கொத்தளம் பார்க்க தகுந்ததாம். அவற்றை நாளைப் பார்ப்போமா?

புதிய மனிதன்:—இவ்வூருக்கு கோட்டை கிடையாது. இவ்வூரைக் கடந்து சுமார் 10 மைல் போனால் அங்கோர் பாழும் கோட்டையொன்று இருப்பதாக சொல்லிக் கொள்ளுகிறார்கள். வேண்டுமானால் நாம் அதை நாளை பார்க்கலாம். சரி, நாம் ஓட்டலுக்குச் சென்று காப்பி சாப்பிட்டுவிட்டு கண்காட்சிச் சாலைக்கு போகலாம், வாருங்கள்.

என்று கூறி இருவருமாக காப்பி சாப்பிட்டுவிட்டு கண்காட்சிச் சாலைக்கு வேடிக்கை பார்க்கப் புறப்பட்டார்கள். அன்று படக் காட்சி மிகவும் அருமையாக பார்க்க தகுந்ததாயிருந்தது. அன்று கும்பலும் அதிகம். இவர்கள் கொஞ்சம் தாமதமாக போனதினால் டிக்கட் பெற முடியாமல் போய்விட்டது. அதற்கு அப்புதிய மனிதன், சோமநாதனை அன்போடு தழுவிக்கொண்டு, 'ஐயா! நாளை முன்னதாகவந்து படம் பார்க்கலாம். இப்போது ஓட்டலுக்குச் சென்று என்ன செய்யப் போகிறோம். ஆகவே நாம் நேராக அக் கோட்டையை பார்த்துவிட்டு இரவுக்குள் திரும்பி விடலாம்,' என்று சொன்னான். சோமநாதன் இதைக்கேட்டு சந்தோஷப்பட்டு, தனக்குள், 'இவரோடு சென்று விடங்களை கவனித்துவிட்டு பொழுது போய்விட்டது என்று சொல்லி சீக்கிரமாக திரும்பி விட்டால், பிறகு நாம் தனிமையாக அவ்விடம்சென்று அத்திருடர்களைப் பிடிப்பதற்கு வழி இருக்கின்றதாவென்று பார்க்கலாம்' என்று யோசித்து அப்

புதிய மனிதனை நோக்கி, 'சரி, தாங்கள் சொல்லுவதுபோல் போய் அக்கோட்டையைப் பார்த்துவிட்டு உடனே திரும்பி விடலாம்' என்றுகூறி இருவருமாக இரண்டு குதிரைகளில் ஏறிக்கொண்டு போனார்கள்.

இவர்கள் புறப்பட்டு ஒருமணி நேரத்துக்குள் மரங்களடர்ந்த ஒரு கானகத்தை யடைந்தனர். அவ்விடத்தில் இவர்களை எதிர் நோக்கி 10, 15 திருடர்கள் குதிரைகளின் மீது ஏறிக் கொண்டு வந்து இவர்களை எதிர்த்தனர்கள் சோமநாதனுடன் வந்த அப் புதியமனிதனும் அத் திருடர்களோடு கூடி



இவனை எதிர்த்தான். பின்னர் அவர்கள் இவனை அவ்விடத்தில் கட்டி போட்டு அவன் அணிந்திருந்த ஆபரணங்களை கழற்றிக்கொண்டு, அவனை கையப்புடைத்தார்கள். அவனோடு வந்த அந்த புதிய மனிதனை அத்திருடர்களின் தலைவனான வீரப்பன், புகழ்ந்து 'நீ மிகவும் சாமார்த்தியம் வாய்த்தவன் தான். உன்னை ஓர் சிறு கூட்டத்திற்கு தலைவனாக மாற்றுகிறேன்' என்றுகூற, யாவரும் தங்கள் இருப்பிடம் போய் சேர்ந்தனர்கள்.

மறுநாள் காலை சோமநாதன் சிறிது தன் அறிவு பெற்று, 'ஐயோ! தெய்வமே! போதும் நான் பட்டபாடு! அந்த அயோக்கிய பேர்வழியும் அவர்களில் ஒருவன்போலும். இம்முறையும் அத் திருடர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டிருக்கையில் அவ்விடத்தில் ஓர் சாமியார் தோன்றி அவனுக்கு வேண்டிய பழவர்க்கங்கள் கொடுத்து அவனது பசியை தீர்த்துவைத்தார். அவனது வரலாற்றை யறிந்து பின்னர் அச்சாமியார் தன் சிஷ்யனை அனுப்பி பக்கத்து கிராமத்தில் ஒரு வண்டி யொன்று பேசிவரும்படி சொன்னார். வண்டி வந்ததும் அதில் சோமநாதனை ஏற்றி தன்னூர்போய் சேரும்படி சொல்லி வழியனுப்பி விட்டு அச்சாமியாரும் அக்கானகத்தின் வழியாக போய்விட்டார்.

(தொடரும்)

# ஆசை அறுபது நாள்!
# மோகம் முப்பது நாள்!

[காரமடை S. குழந்தைசாமி]



காமாக்ஷியம்மாளுக்கு வயது 50 நிறைந்தும் இன்னும் 'வீட்டுவேலைக்கு!' ஒரு மருமகள் வராதது பெரிய குறையாகத் தோன்றியது. புருஷனைப் பறிகொடுத்த துயரம் அவளைச் சென்ற ஐந்தாண்டுகளாக வாட்டி வந்தபோதி லும் அதை அவ்வளவாகக் காமாக்ஷி பொருட் படுத்தவில்லை. தன் ஒரே குமாரன் வயது 25 நிரம்பியும் 'கலியாணமே வேண்டாம்' எனப் பிடிவாதம் செய்வதுடன் முற்றும் துறந்த முனிவன்போல் தாடி மீசை வளர்த்துக்கொண்டு சன்னியாசிக் கோலத்துடன் இருந்து வருவது அவளுக்கு எல்லையில்லாத் தொல்லையையும் மனோவேதனை யையு முண்டாக்கி வந்தது.

ஓர்நாள் பிற்பகல் இரண்டுமணி சுமாருக்கு காமாக்ஷி வீட்டிலுட் கார்ந்து வேண்டா வெறுப்புடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அப்போது எதிர்த்தவீட்டு எச்சுப்பாட்டி வெற்றிலையில் சுண்ணாம் பைத் தடவிக்கொண்டே வந்து திண்ணையிலுட்கார்ந்துகொண்டு காமாக்ஷியைப் பார்த்து, 'என்ன காமாக்ஷி! மணி இரண்டுக்கு மேலா கிறது. இப்போதுதான் சாப்பிடுகிறாயா?' என்று கேட்டாள்.

'ஆம், அம்மா! என்ன செய்வது! இப்போதுதான் வேலையெல் லாம் ஒழுஞ்சுது சாப்பிடுகிறேன்' என்று சலுப்புடன் புகன்றாள் காமாக்ஷி.

'ஐயோ பாவம்! வயது 50 ஆயும் இன்னும் உன்கஷ்டம் தீர்ந்த பாடில்லை!' என்று அனுதாபப்பட்டாள் எச்சுப்பாட்டி.

'என்னம்மா செய்வது? அவரவர்கள் செய்த நல்வினை தீவினைப் படிதானே இன்பமும் துன்பமும் வந்துசேரும்'

'ஆமாம், ஆமாம்! எல்லாம் விதிப்படிதான் நடக்கும். நம்மால் ஆவது ஒன்றுமில்லை...பையன் என்னதான் சொல்கிறான்?'

'அவன் என்ன சொல்கிறுன்! கலியாணமே வேண்டாமென் கிறுன். ஏதோ ஒரே பிள்ளையாயிற்றே. ஒரு காரியம்செய்து அதை யும் கண்குளிரப் பார்த்து விடுவோம் என்று நினைத்து என்னுல் ஆகு மட்டும் சொல்லிப்பார்த்தேன். எதற்கும் பிடிகொடுக்கமாட்டே னென்கிறுன். என்செய்வது?' என்று அலுப்பும் சலுப்பும் கலந்த தொனியில் கூறிக்கொண்டே காமாக்ஷி எழுந்து எச்சி இலையைக் கொண்டுபோய் வெளியே எறிந்துவிட்டு வந்து எச்சுபாட்டியினருகி லமர்ந்தாள்.

அப்போது ஒரு சப்தம்—குயிலோ குழலோ யாழோ என்ற மயங்கத்தக்க குரலுடன் இசை என்ற தேன் அமைதி என்னும் அமு தத்தோடு கலந்து வீசுறும் பாட்டமுதத் தென்றலென்ன அருட்பிர காச வள்ளலார் ஸ்ரீமத் ராமலிங்க ஸ்வாமிகளின்,

'ஊராசை உடலாசை உயிர் பொருளிலாசை
உற்றவர் பெற்றவராசை ஒன்றுமிலேனுமது
பேராசை பேய்பிடித்தேன் கள்ளுண்டு பிதற்றும்
பிச்சையெனப் பிதற்றுகின்றேன் பிறர்பெயர் கேட்டிடிலோ.

நாராசம் செவிபுகுந்தாலென்ன நலிகின்றேன்
நாடறிந்த திவ்வுண்மை நங்கை எந்தனளவில்
நீராசைப் பட்டதுண்டேல் வாய்மலர வேண்டும்
நித்தியமா மணிப்பொதுவில் நிகழ்பெரிய துரையே!'

என்ற அருட்பாவை அருட்தோனெழுக அற்புதமாகப் பாடிக் கொண்டு ஒரு பிச்சைக்காரி வந்து காமாக்ஷியைப் பார்த்து, 'தாயே! நான் சாப்பிட்டு மூன்று நாளாகின்றது. பசி காதை அடைக்கிறது. ஏதாவது ஆகாரம் மீதமிருந்தால் ஏழைமேல் மனம்வைத்துக் கொஞ் சம் கொடுத்தால் உங்களுக்குக் கோடிப்புண்ணிய முண்டு' என்று இறைஞ்சிக் கேட்டாள். அப்போது காமாக்ஷி அப்பிச்சைக்காரியைப் பார்த்து, 'ஏனம்மா! உன்னைப் பார்த்தால் சிறுவயசுப் பெண்ணுகவும் அழகாகவும் படித்தவள்போலுங் காண்கிறுயே. நீ யேன் இக்கேவல நிலைமைக்கு வந்துவிட்டாய்? உனக்குத் தாய் தகப்பன் யாரு மில்லையா?' என்று கேட்டாள்.

'தாயே! நான் ஒரு அனுதை. இப்பரந்த நிலவுலகில் என்னை ஆதரிப்பார் யாரும் கிடையாது. நான் மகாபாவி' என்று சொன்னுள் அப்பிச்சைக்காரி.

'நீ எந்த ஊர்?' என்று கேட்டாள் எச்சுப்பாட்டி.

'அம்மா! எதை நான் என்சொந்த ஊர் என்று சொல்வேன். நானே அனுதை! ஆதரவற்றவள்! பரதேசி! சென்ற விடமெல்லாம்

என்சொந்த இடம்தான். எனக்குச் சிறிது ஆகாரம் கொடுங்கள். வேறொன்றும் என்னைக் கேட்காதீர்கள். நான் மகாபாவி! என் வரலாற்றைக் கேட்டால் நீங்கள் எனக்குச் சோறுகூடத் தரமாட்டீர்கள்' என்று தடுமாட்டத்துடன் பேசினாள் அவள். துக்கம் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவளையும் அறியாமல் கண்ணீர் மளமளவென வடிந்தோடிற்று.

அவளுடைய பரிதாப நிலையைக்கண்ட காமாக்ஷி அவளிடம் அன்பும் அனுதாபமும் கொண்டாள். அவளுடைய வாழ்க்கையில் ஏதோ விசேஷமிருக்கிறதென்றும், அவளுடைய களைப்பை அகற்றிய பின் அதை எப்படியாவது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்து, 'சரி, உட்காரு. சாதம் கொண்டுவருகிறேன்' என்று சொல்லி வீட்டுக்குள்சென்று சோறு கொண்டுவந்து போட்டுவிட்டு அவளையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவள் ஆகாரம் முழுவதையும் 'அபேஸ்' செய்துவிட்டு, 'அப்பாடா! இப்போதுதான் உயிர்வந்தது. நிஜமாகச் சொல்கிறேனம்மா! நான் சாப்பிட்டு சரியாக மூன்று நாட்களாகின்றன. எங்குச் சென்றபோதிலும் உங்களைப் போலத்தான் ஊரென்ன, பேரென்ன, ஏன் பிச்சை எடுக்கிறாய்? என்று கேட்கிறார்கள். நான் எதார்த்தமாக உள்ளதை ஒழிக்காமல் சொன்னால், அவர்கள் முடிவில் என்மேல் வெறுப்புக் கொள்கிறார்கள. 'அயோக்கிய முண்டே! போ, சோறுகிறு ஒன்றும் கிடையாது!' என்று சொல்லித் துரத்திவிடுகிறார்கள். ஆனால் நீங்கள் அவ்விதம் செய்யாமல் என் பசியை அகற்றியதற்காக உங்களுக்குக் கோடி நமஸ்காரம். நீங்கள் சௌக்கியமாயிருங்கள். நான் போய்வருகிறேன்' என்று சொன்னாள்.

இவ்வார்த்தைகள் காமாக்ஷிக்கும் எச்சப்பாட்டிக்கும் அளவு கடந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவளுடைய வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் 'அவளை' அனுப்பக் காமாக்ஷியின் மனம் இடந்தரவில்லை. 'ஏனம்மா! நீ பேசுவதைப் பார்த்தால் உன் வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருப்பதாகத் தெரிகிறது. மேலும் பாரிடமாவது உன் விருத்தாந்தத்தை தெரிவித்தால் அவர்கள் உன் மீது வெறுப்புக்கொண்டு உன்னை வைது முடுக்கி விடுவதாகவும் தெரிவிக்கிறாய். இவையெல்லாம் எங்களுக்கு ஆச்சரியத்தைத் தருகின்றன. அப்படி உன்வாழ்க்கையில் ஏற்பட்ட விசேஷம்தானென்ன சொல்லு பார்ப்போம். நாங்களும் தெரிந்து கொள்கிறோம்' என்றாள்.

இதைக்கேட்ட அப்பிச்சைக்காரி, அம்மா! நான் மகாபாவி! என் வரலாற்றையறிய நீங்கள் அதிக ஆவல்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் முடிவில் நீங்கள் என்னைச் சபிப்பீர்களே என்று அஞ்சுகிறேன்' என்றாள்

இல்லை அஞ்சாமல் சொல். உன்னை நாங்கள் சபிப்பதில்லை' என்றாள் எச்சுப்பாட்டி.

'தாய்மார்களே! நான் பிறந்தது திருச்சினப்பள்ளிக் கருகிலுள்ள கருவூர் என்பது. என் பெற்றோர்கள் இன்னும் உயிருடன்தானிருக்கிறார்கள். அவர்கள் திரண்ட செல்வந்தர்களே. ஆனால் பழுத்த வருணாச்சிரம தர்மிகள்! இருந்தும், வெகுகாலம் குழந்தையில்லாமலிருந்து நான் முதல்முதல் அவர்கள் வயிற்றில் ஜெனித்ததால், அவர்கள் என்மேல் அளவுகடந்த அன்புவைத்து என்னை ஓர் ஆண் பிள்ளையை வளர்ப்பதுபோல் வளர்த்து வந்தார்கள். ஆதலால் என் தந்தை என்னை புஷ்பவதியான பிறகுங்கூடப் பள்ளிக்கனுப்ப விரும்பினார். நான் திருச்சியிலுள்ள என் சிறியதகப்பனார் வீட்டில் இருந்துகொண்டு அங்குள்ள 'ஹோலிக்ராஸ் காலேஜில்' S. S. L. C. வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தேன்.

இங்ஙனமிருக்கையில் செய்ன்ட் ஜோஸப் கல்லூரியில் ஒருவர் B. A. வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தார். அவர் பெயர் சாமிநாதன் என்பது. அவர் நல்ல திடகாத்திர சரீரமுடையவராயும், மாநிறம் வாய்ந்தவராயும், சுமார் $5\frac{1}{2}$-அடி உயரமுள்ளவராயும் 20 அல்லது 22 வயது மதிப்பிடத்தக்க இளஞ்சிங்கம் போலும் விளங்கினார். அவரும் நானும் அடிக்கடி சந்தித்துப் பேசுவது வழக்கம். அச்சமயங்களிலெல்லாம் நான் அவருடைய தீங்கனியான மதுரம் மிக்க, மாங்கனியைத் தின்றாற்போல் உருசிகொடுக்கக்கூடிய இன்பப் பேச்சைக் கேட்டுப் பரமானந்தமடைவேன். இவ்வாறாக நாட்கள் பல செல்லவே எங்களுடைய நட்பானது காதலாக மாறிற்று. விலை மதிக்க முடியாததும் பரிசுத்தம் பொருந்தியதும், கள்வர்களால் களவாட முடியாததுமான 'காதல்' என்னும் மாணிக்கத்தை எனக்குத் தந்தார். நானும் அதைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டேன். கல்லூரி வாழ்வு முடிந்ததும் இருவரும் கலியாணம் செய்து கொள்ளலாமென முடிவு செய்திருந்தோம். இங்ஙனமிருக்கையில் ஓர்நாள் நானும் என் காதலரும் உச்சிவினயகர் கோவிலில் நடந்த ஓர் உற்சவத்திற்குச் சென்றோம். அங்கு என் காதலரின் ஆப்த நண்பர் ஒருவர் வந்தார். அவரை என் காதலர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். எனவே நானும் அவரும் (என் காதலரின் நண்பரும்) அடிக்கடி சந்தித்து சகஜமாக பழகியும் பேசியும் வந்தோம். அவர் பெயர் கந்தசாமி என்பது. அவருடைய வசீகரமான பாந்த முகமும், அழகிய சிறிய மீசையும், பொன்னிறமேனியும், கம்பீரமான தோற்றமும், கமனியா தைலம் தடவி வாரிவிடப்பட்டிருந்த அமெரிக்கன் கிராப்பும், ஸெலுலாயட் ஷெல் போட்ட சட்டத்தைக் கொண்ட கண்ணாடியும், மேனாட்டாரின் இமிடேஷனாகிய ஹேட்டும், பூட்டும், சூட்டும், என் மனதைக் கவர்ந்தது. என்னை அறியாமல்

என் மனம் அவர் மீது பாய்ந்தது. என் செய்வேன். நான் அறியாப் பெண் அபலை. உலகம் உருண்டை என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதில் வஞ்சகமும் சூட்சியும் மலிந்துகிடப்பது எனக்குத் தெரியாது. எனவே, அவனுடைய குணாதிசயங்களையும் அவன் எவ்வளவுதூரம் எனக்கு உண்மையாய் நடந்து கொள்வான் என்பதையும் அறியாமல், கேவலம் வெளித்தோற்றத்தைமட்டும் கண்டு மயங்கி அவனுடைய மாயவலையில் சிக்கிவிட்டேன். எனவே என தாருயிர்க் காதலர் சாமிநாதனை மெதுவாகக் கைநழுவவிட்டு இச் சண்டாளனைக் காதலிக்கத் தொடங்கினேன்.

இதையறிந்த என் காதலர் சாமிநாதன் ஓர்நாள் என்னைச் சந்தித்து, 'ஸரசா! உன்னை நான் என் உயிரினும் மேலாக மதித்து நேசித்து வந்ததுமன்றி என்னுடைய ஒப்பற்ற பொக்கிஷமாகிய 'காதல்' என்னும் மணியையும் உனக்குத் தந்தேன். அதைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்ட நீ இப்போது என்னை வஞ்சிக்க உத்தேசித்திருப்பது தர்மமா? இதனால் என் வாணாளே வீணாய் விடும். ஆதலால் நீ உன் மனதை மாற்றி முன்போல் என்னைக் காத லிப்பாயா இல்லையா?' என்று கேட்டார்.

எனக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. இவர் எந்த விதத்திலும் கந்தசாமிக்கு இளைத்தவரன்றே. அவரைப் போலவே இவரும் B. A. வகுப்பில்தான் வாசிக்கிறார். அவரிடத்தில் வசீகா மான முகமிருக்கிறது. இவர் அவ்வளவு அழகாயில்லாவிடினும் இவருடைய இன்னிசைப் பேச்சை நான் எங்ஙனம் மறக்க முடியும்? எப்படி நாம் இவரை நிராகரித்து விட்டதாகக் கூறுவது? என்று யோசித்தேன். அடுத்த நிமிஷம் அவ்வஞ்சகன் கந்தசாமியின் வசீகரத் தோற்றம் என் அகக்கண்முன் தோன்றிற்று. அவனுடைய ஆடம் பரமான வெளித்தோற்றம் என்னை ஈர்த்தது. எனவே நான் சாமி நாதனைப் பார்த்து' நான் உமது காதலைப் புறக்கணித்துவிட்டேன்' என்று கூறினேன். இதனால் வெறுப்புற்ற என் ஆசைக்கண்ணாளன் உடனே அவ்விடத்தை விட்டகன்றார். அச்சமயம் நானும் அதனால் சந்தோஷப்பட்டேனே தவிர வருந்தவில்லை.

நானும் கந்தசாமியும் கூடி வாழலானோம். இரண்டாண்டுகள் வரை எங்கள் 'வாழ்க்கைச் சக்கரம்' பின்னமில்லாமலோடிற்று! நான் எப்பொழுதும் போலத்தான் அவனிடம் என் உயிரையே வைத்தி ருந்தேன். அவன் இஷ்டப்படியெல்லாம் நடந்து வந்தேன். ஆனால் அவனுக்கோ என்மீதிருந்த அன்பு வரவரக் குறையலாயிற்று. அவனுடைய முகத்தில் கவலையும் வெறுப்பும் கலந்த குறி! ஆழ்ந்த யோசனையின் சின்னம்! தென்பட்டது. எங்கள் வாழ்க்கைப் படகில் ஒரு 'பொத்தல்' கண்டது. என் மனதிற்குள் திகில் நிறைந்தது.

நான் 5 மாத கர்ப்பிணி வேறு! பலவித சந்தேகங்கள் என் மனதை அறுத்தன.

ஓர்நாள் அவன் தன் பெற்றோர்களைக் காணவேண்டித் தன் ஊருக்குச் சென்றான். அவ்விதம் அடிக்கடி செல்வதுண்டு. ஆனால் இரண்டொரு நாட்களில் திரும்பி வந்துவிடுவான். ஆனால் இச்சமயம் ஒருவாரமாயும் வரவில்லை. பலவித யோசனைகள் தோன்றி என் மனதைக் கலக்கியது. எட்டாம் நாள் அவனுக்கு பதிலாக அவனால் எழுதப்பட்ட கடிதம் கிடைத்தது. படித்துப் பார்த்தேன். என்னால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் படித்தேன். 'ஸரசா! என் அறியாமைக்கு நான் வருந்துகிறேன். ஒரு வேளாளப் பெண்ணும் ஒரு நாயுடு குல ஆணும் மணந்து வாழ்வது நமது ஹிந்துமத வருணாச்சிரம தர்மத்துக்கு முற்றும் மாறுபட்டதாகும். தயவுசெய்து என்னை மறந்துவிடு. நான் என் குலத்திலேயே விவாகம் செய்து கொள்ள ஏற்பாடு செய்துகொண்டேன். இக்கடிதம் உனக்குக் கிடைப்பதற்குள் எனக்கு விவாகம் நடந்தேறிவிடும். இனி நான் அங்கு வரமாட்டேன். நீ உன் இஷ்டப்படி நடந்துகொள். என்னைச் சபிக்காதே. எல்லாம் விதிப்பயன்' என்று எழுதியிருந்தான் அவ் வஞ்சகக் கள்வன்.

உண்மையாய்ச் சொல்கிறேன். என் ரத்தம் கொதித்தது! தேகம் கிடுகிடென ஆடிற்று! துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது! கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடிற்று! கைகால்கள் சோர் வுற்றன. என்னால் பேச முடியவில்லை' நிற்க முடியவில்லை! என் உயிரில் பாதி போய்விட்டது! அவன் தன் அறியாமைக்கு வருந்துவ தாக எழுதினான். ஆனால் உண்மையில் அவன் அறியாதவனல்ல. அறிந்தே என்னை மோசம் செய்ய எண்ணியவன். நான்தான் அறியா தவளாய் விட்டேன். என் பேதமைக்கு வருந்தினேன். 'ஆசை அறுபது நாள்! மோகம் முப்பது நாள்!' என்பது உண்மையென் பதை யுணர்ந்தேன். அப்போதுதான் என் ஆருயிர்க் காதலர் சாமி நாதனின் ஞாபகம் வந்தது. அவருடைய பெருந்தன்மையும், சிறந்த குணமும், பரந்த நோக்கமும், ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையும் என் உள்ளத்தில் புகுந்து உருக்கின. ஐயோ! கேவலம் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கி மதிமோசம் போனேனே என்று வருந்தினேன். உத்தம நண்பனை வஞ்சித்தேன்! வஞ்சக் கள்வனை நேசித்தேன்' ஏமாற்றமடைந்து அனாதையானேன்!

இவ்வாறாக அன்று முழுதும் ஊணுறக்கமின்றிப் படுக்கையில் கிடந்த வண்ணம் யோசித்துக் கொண்டிருந்தேன். கடைசியாக என் பெற்றோர்கள் ஞாபகம் வந்தது. அங்கு செல்லலாமென நினைத் தேன். ஆனால் மறுநிமிடம் அவ்வெண்ணம் மாறிற்று. என்

தந்தையோ பழுத்த வருணாச்சிரமதர்மி. நாயுடு குலத்தைச் சேர்ந்த அவனை நேசித்ததற்காக இவ்விரண்டாண்டுகளாக என்னை முற்றும் வெறுத்திருக்கிறார். இந்நிலையில் அங்கு சென்றால் என்னை ஆதரிக்க மாட்டார் எனப் புத்தியிற்பட்டது. சே! அங்கு செல்லக்கூடாது. பின் எங்கு போவது! என் ஆருயிர்க் காதலர் சாமிநாதனிடம் செல்வோம் என்று யோசித்தேன். ஆனால் அந்த யோசனையும் மனதிற்குத் திருப்தி யளிக்கவில்லை. எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவரைப்போய் பார்ப்பது? நான் அவருக்குச் செய்த துரோகத்தை மறந்து என்னை மன்னித்தாட் கொள்வாரா? ஒருவேளை அவரும் வேறொரு பெண்ணை மணந்து கொண்டிருந்தாலோ? இத்தகைய யோசனைகள் என் மனதிற் புகுந்து வாட்டவே, நான் செய்வதின்னதெனத் தோன்றாது பயித்தியம் பிடித்தவள்போல் திக்கற்றுத் தெருவில் திரிந்து கொண்டிருக்கிறேன். நான் எங்கு சென்றபோதிலும் முதலில் என் வரலாற்றைக் கேட்கிறார்கள். முடிவில் பெண்களா யிருந்தால் 'சீ! நாயே! விபசாரமுண்டே! போ அப்பால்' என்று திட்டித் துரத்தி விடுகின்றனர். ஆண்களா யிருந்தால் சொல்ல வேண்டியதில்லை. ஒருவனாவது விகற்பமில்லாமல் கருணையுடன் நோக்குவதில்லை. அம்மா! நான் என்ன செய்வேன்! என் மதியீனத்தால் இவ்வொரு வருஷ காலமாக இவ்வித கஷ்டங்களை அனுபவித்து வருகிறேன்' என்று சொல்லி முடித்தாள் ஸரஸா!

'ஆமாம், ஐந்து மாத கர்ப்பிணியா யிருந்ததாகத் தெரிவித்தாயே குழந்தை எங்கே!' என்று கேட்டாள் எச்சுப்பாட்டி.

'அதோ அச்சண்டாளன் என்னை வஞ்சித்து விடவே, நான் அதே வியாகூலத்தில் ஊரூராய்த் திரிந்து கொண்டிருக்கையில் அக்கரு ஆறு ஏழு மாதத்தில் சாய்ந்துவிட்டது' என்று பதில் தந்தாள் அப்பிச்சைக்காரி.

'ஆமாம். நீ முதலில் சாமிநாதன் என்ற ஒருவனைக் காதலித்ததாகத் தெரிவித்தாயே? அவன் எந்த ஊர் என்று உனக்குத் தெரியுமா?' என்று ஆழ்ந்த யோசனையின்மேல் கோபத்துடன் கூடிய ஒரு கேள்வியை விடுத்தாள் காமாக்ஷியம்மாள்.

இத்தருணத்தில் ஓர் மனிதன் இவர்கள் இருக்கும் வீட்டை நோக்கிவந்து கொண்டிருந்தான். அவன் பார்ப்பதற்கு 24 அல்லது 25 வயது மதிப்பிடத்தக்க ஒரு யௌவன வாலிபனாகத் தோன்றிய போதிலும், அவனுடைய முகவாய்க் கட்டையினின்றும் தொங்கிக் கொண்டிருந்த சுமார் அரையடி நீளமுள்ள தாடியும், தலைமுழுதும் ஏகமாக வளர்ந்திருந்த குடிமியும், காவி நிறம்வாய்ந்த ஆடையும், அவனை யார் பார்த்தபோதிலும் 'அடே, இதென்ன, இவ்வளவு சிறு பிராயத்திலேயே இவன் உலகப்பற்றையே முற்றும் அற்றவனாகக்

காண்கிருனே' என்று சொல்லி வியப்புறத்தகுந்த ஒரு சன்னியாசி போல் விளங்கினன்.

இத்தகைய பால்யசன்னியாசி ஏதோ வொன்றைப்பற்றி நினைத்துக்கொண்டு தன் பார்வை முழுவதையும் தரைமீது செலுத்தியவனுய் நடந்துவந்து வீட்டு வாயிற்படியிலேறியவன் தற்செயலாய் அங்கு நின்றுகொண்டிருந்த பிச்சைக்காரியைப் பார்க்கநேர்ந்தது. அப்போது அவன் முகத்தில் ஓர்வித மாறுதல் தென்பட்டது. தான் காண்பது கனவோ அன்றி நினைவோ என்று ஐயமுற்றவன்போல் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு உற்றுநோக்கினன். அவளும் நோக்கினள். அப்போது அச்சன்னியாசி அப்பிச்சைக்காரியைப் பார்த்து, 'ஹா! ஸாஸா! நீயா இக்கோலத்தில் நின்றுகொண்டிருப்பவள்! ஐயோ! செந்தாமரை மலரை நிகர்த்த நின்வதனத்தில் தவழ்ந்த ஒளியெல்லாம் மழுங்கிப்போய் அதில் அழுக்கடைந்து இருள்சூழ்ந்து கிடக்கிறதே! நறுமணம் வீசாநின்ற நின்கூந்தல் இவ்விதம் சடைசடையாய்த் தொங்கிக் கொண்டிருக்கின்றனவே! ஐயோ! சாஸா! காச்சிப் பட்டுப்புடவையைத் தவிர வேறென்றும் அணிந்தறியா உனக்கு இத்தகைய துளைகள் நிறைந்த 'ரக்குரக்காகக்' கிழிந்து கிடக்கும் கந்தலைத் தரித்துக்கொள்ள எப்படித்தான் மனம் வந்ததோ! ஸாஸா! உன் நிலைமையானது என் மார்பைப் பிளக்கின்றதே!' என்று பிரலாபித்தவண்ணம் அப்பிச்சைக்காரியைக் கட்டித் தழுவினன்.

ஸாஸா ஸ்தம்பம்போல் நின்றுவிட்டாள். அவளுடைய உணர்ச்சியானது அவளிடமிருந்ததாகத் தெரியவில்லை. 'நாதா!...' என்று வாய்விட்டுச் சொன்னுள். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. துக்கமும் சந்தோஷமும் ஒன்ருகச் சேர்ந்து அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது. நாணத்தால் தலையைத் தொங்கவிட்டாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் முத்துமுத்தாக மார்பின் மேல் விழுந்து தெரித்தன. சிறிது நேரம் சென்றது.

'சாஸா! காரணமென்ன?' என்ருன்.

'அவ்வஞ்சகன் என்னை ஏமாற்றிவிட்டான்' என்ருள்.

'கண்ணே! அதைக் குறித்து வருத்தவேண்டாம். எந்தெந்தக் காலத்தில் எதுஎதுநடக்க வேண்டுமென்று ஈசன் விரும்புகிருரோ அதன்படிதான் பூவுலகில் காரியங்களனைத்தும் நடைபெறுகின்றன. ஆதலால் நாம் வருந்துவதில் பயனில்லை. எல்லாம் நம் நன்மைக்கென்றே கொள்ளவேண்டும்' என்று சொல்லித் தேற்றினன் சன்னியாசி.

'அன்பரே! நான் மகாபாவி! பரோபகார சிகாமணியாகிய உங்களை வஞ்சித்த குரூபி! உங்களை இத்தகைய கோலத்துக்குக் கொண்டுவந்த சண்டாளி! ஆதலால் இதுவல்ல, இதைக் காட்டிலும் கேவலமான நிலைமையில் ஈசன் என்னை வைத்தபோதிலும் அது எனக்குத் தகும். நரகவேதனை அனுபவிக்க வேண்டிய மிருகம் நான். உங்கள் முகாரவிந்தத்திற் படுவதற்கும் அருகதையற்றவள்! ஆதலால் என்னைப் போகவிடுங்கள்' என்று சொல்லி தன்னைத் தழுவிக் கொண்டிருந்த சாமிநாதனுடைய கைகளை மெதுவாக விடுவித்தாள்.

'எனதின்னுயிர்ச் செல்வமே! சென்றதைக் குறித்துச் சிந்திக்க வேண்டாம். நீ எத்தகைய குற்றம் செய்திருந்தபோதிலும் அவற்றையெல்லாம் மறந்து உன்னை முன்போலவே நேசிக்கிறேன். ஆதலால் வருந்தாதே!' என்று சொல்லித்தேற்றி அவளை வீட்டுக்குள் வரும்படி அழைத்தான்.

இதுவரை இவர்களது சம்பாஷணையை கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த காமாக்ஷி தன் மகனைப்பார்த்து கோபாவேசத்துடன், 'என்னடா இது அநியாயமாயிருக்கு. எவளோ ஒரு பிச்சைக் காரியை 'செல்வமே, மணியே!' என்று சொல்லி வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறாயே! போ அப்பால்' என்று கடுகடுத்துச் சொன்னாள்.

அப்போது சாமிநாதன் தன் தாயாரைப் பார்த்து சாந்தமான குரலில், 'அம்மா! இச்ஜென்மத்தில் என் காதலுக்குப் பாத்திரமான காரிகை இவள் ஒருவள்தான். இவளைத் தவிர வேறு யாரையும் நான் கனவிலும் கருதேன். மேலும் நம்மைப்போலவே இவளும் வேளாளப்பெண். ஆதலால் இவளை உன் மருமகளாக ஏற்றுக்கொள்ள விரும்பாவிடில் நான் இச்சன்னியாசிக் கோலத்துடனே உன்னை விட்டுப் பிரிந்து தேச சஞ்சாரத்திற்குப் புறப்பட்டு விடுவேன். ஆதலால் இவளை உன் மருமகளாக ஏற்றுக்கொள்கிறாயா? அல்லது என்னைப் பிரிந்து வாழ இச்சிக்கிறாயா? சொல்' என்றான்.

காமாக்ஷியம்மாள் யோசித்தாள். 'எங்கு தன் மகன் தன்னை விட்டுப் பிரிந்துசென்று விடுகிறானோ எனப் பயந்தாள்' உன் இஷ்டப்படியே செய்யடாப்பா' என்று சொல்லி மௌனமாயிருந்தாள்.

ஆண்டிரண்டோடின. காமாக்ஷியம்மாள் தன் பௌத்திரன் கதிரேசனுடன் கொஞ்சிப்பேசி விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

---

# தேர்தல் கொண்டாட்டம்



சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் வெற்றிபெற்ற அங்கத்தினருக்கு 3—11—36ல் மாம்பலத்தில் நடந்த விருந்தில் கூடிய கூட்டத்தில் திரு. C. ராஜகோபாலாச்சாரி அவர்கள் பேசியபோது திரு. ஆதிகேசவலு நாய்க்கர் அடாக்கமிட்டியில் இருந்து வேலை செய்து வசைமொழி வாங்கினதையும் அவர் அடாக்கமிட்டியில் எடுத்துக்கொண்ட சிரமத்தையும் பாராட்டி பேசினர். தவிர ஸ்ரீமதி ருக்மணி லக்ஷிமிபதி அவர்களின் வெற்றியைப் பற்றியும் கொண்டாடினர். அதுசமயம் பெண்களுக்கு நம் நாட்டில் உரிமைதரவேண்டும் என்றும், அவர்களோடு கட்சி பேதத்தால் போட்டிபோடக் கூடாதென்றும் தெளிவாக எடுத்துக் கூறினர். அவை பாராட்டத்தக்கது.

ராணிப்பேட்டையில் நின்ற பெண் அங்கத்தினருக்கு எதிராக ஓர் ஆண் அங்கத்தினர் போட்டிபோட்டு பலமாக எதிர்த்தபோது கனம் ஆச்சாரி அவர்கள் இந்நாட்டில் இருந்திருக்கமாட்டார் என நினைக்கிறேன். அப்படி இருந்திருந்தால் இப்பொழுது சொன்ன வார்த்தையை அப்பொழுதே சொல்லி இருப்பாரல்லவா?

அடாக்கமிட்டியின் கஷ்டங்களை பாராட்டியது பொருத்தமாய் இருந்தாலும் அடாக்கமிட்டி நடந்துகொண்ட முறையானது பிற்போக்கானதும், சுயநலம் கொண்டதும், எல்லாநாட்டாரும் பார்த்து இகழக்கூடியதும் அறிவில்லாதவர்கள்கூட ஒத்துகொள்ளக்கூடாத முறையில் நடத்தப்பட்டிருப்பதும், எவரும் மறுக்கமுடியாது. எப்படியெனில் நான்கு சகோதரர்கள் தன்னுடைய தகப்பன் சொத்தில் பாகம்செய்துகொள்ள போராடியபோது அந்த போராட்டத்தை முடிவுசெய்ய ஒரு பஞ்சாயத்துபோர்டை நியமித்தால் அத்தகைய பஞ்சாயத்துபோர்டில் கட்சிக்காரர்களாகிய சகோதரர்களைநீக்கி கட்சியில் சம்பந்தமில்லாதவர்களை அமைத்து ஒழுங்கான முறையில் விசாரித்து நியாயம்வழங்குவது உலகஅனுபவம்.

இதைவிடுத்து கட்சியில் சம்மந்தப்பட்ட நால்வர்களில் இருவரை பஞ்சாயத்துபோர்டில் வைத்துக்கொண்டு நியாயம் வழங்குவதென்ருல் அம்முறையை எவரும் ஒத்துக்கொள்ள முடியாது. அம்முறை எந்த நாட்டிலும் எந்த சரித்திரத்திலும் காணப்படவில்லை. ஆனல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் இதை கையாளப்பட்டிருக்கின்றது. எப்படி யெனில் திரு. ஆதிகேசவலு நாய்க்கரும் ஸ்ரீமதி ருக்மணி

லக்ஷிமிபதி அவர்களும் அடாக்கமிட்டி என்னும் பஞ்சாயத்தார்கள் ஆவார்கள். தாங்களே பஞ்சாயத்தார்களாய் இருந்து தங்களையே தாங்கள் தேர்ந்து எடுத்துக்கொண்டு மீதியுள்ள ஸ்தானங்களை பல பேருக்கு கொடுத்தது தமிழ்நாடு காங்கிரசின் சரித்திரத்திலேயே மோசமான காரியமாய் நிலைத்திருக்கக் கூடியது.

## ஒழுங்கற்ற முறை.


காங்கிரஸ் அடாக்கமிட்டியின் நிர்வாகமுறை எங்கும் காணப்படாதவகையில் நடந்திருக்கின்றது. அதாவது அடாக்கமிட்டி மெம்பர்கள் ஏகோபித்து ஒருமுறை கார்ப்பரேஷன் தேர்தலுக்கு கனம் தாவுத்ஷா அவர்களை தேர்ந்தெடுத்து பத்திரிகையிலும் விளம்பரம் செய்துவிட்டு ஓட்டர்களிடம் ஓட்டையையும் இவர்களுக்கு கொடுக்கும்படி சொல்லிவிட்டு அதை தலைவரும் ஆமோதித்தபிறகு அடாக்கமிட்டியின் தீர்மானத்தை மாற்றவோ அல்லது திருத்தவோ ரத்து செய்யவோ தலைவருக்கு அல்லது அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தான் உரிமை இருத்தல்வேண்டும். அதுதான் அறிவுடைய செய்கையாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் அடாக்கமிட்டி என்ன செய்திருக்கின்றது. என்று கேட்டால் தாங்களே கனம் தாவுத்ஷா அவர்களை அங்கத்தினராக தேர்ந்தெடுத்துவிட்டு மீண்டும் தாங்களே அதைமாற்றி இருப்பது சிறு குழந்தையும் வெறுக்கத்தக்கது. இந்த ஓர்சிறிய காரியத்தைக் கூட ஒழுங்காகச் செய்துமுடிக்கக் கூடாத கூட்டத்தாரென்று பிற நாட்டார் நம்மைப்பார்த்து ஏளனம் செய்யும் நிலைமையில் தமிழ் நாடு காங்கிரஸ் நடத்தப்பட்டிருக்கின்றது. தலைவர் வேண்டுமானால் அடாக்கமிட்டி செய்தது தவறுதான் என்று பத்திரிகையில் வெளியிட்டதே போதுமானது என்று நினைக்கலாம். அறிவுள்ள உலகம் என்ன நினைக்கும் என்று யோசிக்கவேண்டும். நாம்செய்யும் தவறுகளுக்கெல்லாம் வேண்டுமென்றே தவறு செய்துகொண்டு தவறாய் நடந்ததை மன்னிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்வது முட்டாள் தனமானதும் பிற்போக்கானதும் ஏமாற்றக் கூடியதுமாகும்.

இந்திய மக்கள் காங்கிரசினிடத்தில் தேசத்தினிடத்தில் கொண்டுள்ளபற்றின் காரணமாய் பிற்போக்கான காரியங்களை பொருட்படுத்தாமல் உங்களை மக்கள் ஆதரிக்கின்றனர் என்ற எண்ணமானது உங்களுக்கு இருக்குமானால் அதை அடிப்படியாய் வைத்துக் கொண்டு இத்தகைய காரியங்களைசெய்து வருவீர்களேயானால் நீங்கள் பெரிய தேசத் துரோகிகள் ஆவீர்கள் என்பதை உங்களுக்கு ஞாபகம் மூட்டுகிறேன். ஆதலால் கனம் C. R. அவர்கள் கொண்டாடிய புகழ்மாலை அறிவுடையோர் பாராட்டக்கூடியதா என்பதை வாசகர்களே உணர்வீர்களாக.

# எனது குருட்டு அதிர்ஷ்டம்

['அதிகப்பிரசங்கி']



மனோஹரா டிராமாவை படம் பிடிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் எனது நிலைமையே ஒருவிதமாக மாறிப்போயிற்று. எவ்வளவோ பேர்கள் மனோஹரா டிராமாவை டிராமா ஸ்டேஜில் நடித்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் சினிமா படத்தில் பார்த்தது கிடையவே கிடையாது. ஆசையால் எது எப்படிப் போனாலும் சரி, கிழக்கு மேற்காக சஞ்சரிக்கும் சூரியன் வடக்குத் தெற்காகத் திரும்பினாலும் சரி, மனோஹரா படத்தைப் பார்த்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பது என்று மனதில் உறுதிகொண்டேன். கதையின் கர்த்தாவாகிய ஸ்ரீமான் பி. சம்மந்த முதலியாரே நடிக்கின்றார் என்பதைக் கேள்விப்பட்டதும் எனக்கு சந்தோஷம் பலேஜோராய் உண்டாயிற்று. தலையாட்டி ஸ்ரீமதி கே. டி. ருக்மணி அம்மையார் விஜயாளாக நடிக்கின்றார் என்றதுதான். பொழுது போகாமல் பகலாகவே நின்றுவிட்டாலும் சரி, படத்தை எப்படியாவது வரவழைத்து ஒரு டார்க்ரூம் ஏற்படுத்தி அதில் ரோல்செய்து பார்த்து விடுவதென்ற தீர்மானம் என் மனதில் தீவிரமாய்க் குடிகொண்டது. சதா 'மனோஹரா படம்' என்ற நாமத்தையே ஜபித்து வந்தேன்.

வழக்கம்போல் ஒருநாள் மத்தியானம் 12 மணிக்கு எனது படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தேன். நல்ல சௌண்டு ஸ்லீப் செய்யும கட்டம். யாரோ முதுகில் படேர் என்று அறையவே திடுக்கிட்டுக் கலவரத்துடன் எழுந்தேன். '......அப்பளான்' என்று கூவிக்கொண்டே எனது சிறிய தங்கை விமலா ஓடுவதைக் கண்டேன். 'சே...மூதேவி...க்ஷாமமே, எனக்கு அப்பளமும் வேண்டாம், மண்ணும் வேண்டாம்' என்று சீறிவிழுந்துவிட்டு போர்வையை இழுத்து நன்றாய்ப் போர்த்திக்கொண்டு குப்புறக் கவிழ்ந்து படுத்தேன். படுத்ததுதான் தாமதம் உச்சிமயிரைப் பிடித்துத் தூக்கினாற்போல் முதுகுமூள்ளின் மையத்தில் ஏதோ ஒன்று கடிக்கவே துடித்துப் புடைத்துக்கொண்டு எழுந்தேன். கடித்தது தேளல்ல. பூரானல்ல. ஒரு சிறு கட்டை எறும்புதான். அதை நான் ஆத்திரத்துடன் நசுக்கிய அதே சமயம் வீட்டுக் கூரையின்மேல் ஆகாயத்தில் 'பூ...ம், ஊ...ம்' என்ற சப்தமுண்டாயிற்று. 'ஓஹோ...ஏரோப்ளேன்' என்று வாரிப்புடைத்துக்கொண்டு தெருவிற்கு ஓடினேன். தெருவார் எல்லோரும் வாயைப் பிளந்துகொண்டு ஆகாயத்தைப் பார்த்து 'அதோ...போகிறது, அதோ...பச்சை வருணம்பூசி இருக்கிறது' என்று கூவினர். நானும் அவர்களுடன் கலந்துகொண்டேன். என்னைக் கண்டவுடன் எல்லோரும் ஏரோப்ளேனையும் பார்ப்பதை விடுத்து

கைதட்டிக்கொண்டு சிரித்தனர். எனக்கு ஒன்றும் அர்த்தம் புரியாமல் சுற்றும்



முற்றும் பார்த்தேன். அப்போது எனது நிலைமையைப் பார்க்க எனக்கே வெட்கமாய்ப் போய்விட்டது. தூக்கக் கலக்கத்தாலும், அவசரத்தாலும் இடையில் ஒரு கோட்டை எடுத்து சுற்றிக்கொண்டு வந்திருப்பதை யுணர்ந்தேன். உடனே வீட்டினுள் ஓடி அதைக் கழற்றி ஒரு மூலையில் எறிந்துவிட்டு விசிரிமடி அங்கவஸ்திரத்தை எடுத்து இடையில் கட்டிக்கொண்டு தெருவிற்கு ஓடினேன். என் மாமா வந்துகொண்டிருந்தார்.



'என்ன மாமா விசேஷம்? ஏரோப்ளேன் போகின்றதே?' என்றேன்.

'எல்லாம் சினிமா மயந்தான். இதோ போர ஏரோப்ளேனும் சினிமா அட்வடேஸ்மெண்டுக்காகத்தான்' என்றார் மாமா.

'சினிமாவுக்கா ஏரோப்ளேன் அட்வடேஸ்மெண்ட்?' என்றேன்.

'ஆமாம்...சம்மந்த முதலியார், ஜட்ஜோல்லியோ? அவர் நடித்த மனோஹரா படத்திற்காகத்தான்' என்றார்.

எனக்கு இதைக்கேட்டதும் சந்தோஷத்தால் உடல் தானே தூக்கிப் போட்டுக் கொண்டது. 'மனோஹராவா, எங்கே? என்றைக்கு?' என்று இரண்டு அவசரக் கேள்விகளை விடுத்தேன்.

'இன்றைக்கு மாயவரத்திலே கூடத்தானும்' என்றார் மாமா.

கடலுக்காவது ஒரு எல்லையைக் கண்டுபிடித்து விடலாம். அடாடா, எனக்கு அப்பொழுது உண்டான சந்தோஷத்திற்கு ஒருவராலும் எல்லையைக் கண்டுபிடிக்க முடியவே முடியாது. உடனே நான் குதித்து எழுந்து, 'அப்பாடா...எவ்வளவு நாட்களாய் எதிர்பார்த்தது!' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு விர் என்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சாப்பாட்டில் உட்கார்ந்தேன். (குளித்த வேகத்தில் பூணூலையும் கசக்கமறந்து போய் விட்டேன்.)

நல்ல வெங்காய சாம்பார். உருளைக்கிழங்கு வருகல்தான். என்ன இருந்தாலும் என்ன பயன்? எனது முழுமனதும் மனோஹராவின்மேல் லயித்துப் போயிருந்தபடியால் சாப்பாடு பிடிக்கவே இல்லை. நாலுகவளம் சாப்பாட்டை எடுத்து வாயில்வைத்தேன். 'களக், களக்...எவ்' என்று விக்கல்களுடன் எப்பமும் எடுத்துவிட்டது. வீட்டில் வைவார்களே என்று வீட்டாருக்காக

உள்ளே செலுத்திக் கொண்டிருந்தேன். தயிர் சாதம் இலையில் பரிமாறப் பட்டது. தயிர் என்றால் எப்போதும் எனக்குக் கொஞ்சம் கசப்புத்தான். நல்ல காலத்தின் பலனாக எனது பரமசத்ருவாகிய கரப்பான்வண்டு ஒன்று பரிமாறப்பட்டிருந்த தயிர் சாதத்தின்மேல் ஓடிற்று. உடனே ஆத்திரக் குறியையும், கோபக் குறியையும் ஒருங்கே முகத்தில் வரவழைத்துக்கொண்டு, 'அட... இழவே' என்று கையை விசுக்கென்று உதறிவிட்டு எழுந்தேன். (கையைக் கழுவினேனோ, இல்லையோ? எனக்கு ஞாபகமில்லை) நன்றாய் டிரஸ் பண்ணிக்கொண்டு, மணிபர்சில் ஐந்து ரூபாயை எடுத்துப்போட்டு அதை டப் என்ற சப்தத்துடன்மூடி ஷர்ட் வாச்பாக்கட்டினுள் சொருகினேன். உடனே எனது சைகிள் இருந்த இடத்திற்குப் போனேன். பைசிகளைக் கண்ட எனக்கு வயிறெறிந்து போயிற்று. முன் சக்கரத்தில் இரண்டு விரல்கள் கொள்ளும்படியான ஒரு பஞ்சர்.

'இதேதடா...' என்று நினைத்துக்கொண்டு வீட்டிலுள்ளாரிடம் அதைப்பற்றி சண்டை போடவும் அவகாசமில்லாமல் பஜாருக்குப் போனேன். அங்கே ஒரே வாடகை வண்டிதானிருந்தது. அதில் இரண்டு பிரேக்குகள் மட்டும் பூஜ்ஜியமென்று முதலில் தெரிந்து கொண்டேன். உடனே அதை வாடகைக்கு எடுத்துக்கொண்டு விர் என்று மாயவரத்தை நோக்கிப் புறப்பட்டேன். ரிஸ்ட்வாச்சில் டையத்தைப் பார்த்தேன். மணி சரியாய் மூன்று. விர் என்று மிதித்தேன். எதிரே போய்க்கொண்டிருந்த ஒருவர் நான் எச்சரிக்கை செய்யாமலே விலகுவதைக் கண்டேன். என்ன இருந்தாலும் பெல் கொடுப்போம் என்று எண்ணி ஹாண்டில்பாரைப் பார்த்தேன். பெல்லையும் காணோம், கில்லையும் காணோம். என்றாலும் பெல் இல்லையே என்ற எனது பயம் தீரும்படி சைகிளின் சக்கரங்கள் ஒரு பர்லாங்குதூரம் கேட்கும்படி கிரீச்கொட்டுவதை யுணர்ந்தேன். கிட்டதட்ட மாயவரம் போய்விட்டேன். இரண்டு மைல்கள்தான் பாக்கி. எனக்கு பெரிய ஆபத்தொன்று நேரிட்டது.

ஒரு முடுக்குத் திரும்பவேண்டிய இடம். எதிரிலோ பூம், பூம் என்று கொண்டு ஒரே வேகமாக ஒரு மோடார்கார் வந்துகொண்டிருந்தது. ரோட்டின் இருபுறங்களிலோ நெருங்கிய சப்பாத்திக்காடு. நானோ சைகிள் விடுவதில் தகரார் சொசைடியில் சேர்ந்தவன். காரோ நெருங்கிவிட்டது. எனது கைகள் கட கடவென்று ஹாண்டில்பாரை ஆட்டின. 'கார்தான் நமக்காக நிறுத்தப்படுமோ, அல்லது நாம்தான் காருக்காக சைகிளினின்றும் இறங்க வேண்டுமோ?' என்ற கொடிய பிரச்சினைகள் எனது மனதில் உதித்தன. கீழே இறங்கினாலோ தகரார் பேர்வழி என்ற குட்டுவெளிப்பட்டுவிடும். எது வந்தாலும் வரட்டுமென்று மனதை திடப்படுத்திக்கொண்டு ஒரு மிதி மிதித்தேன். அதேசமயம் மோட்டார்கார் என்னைத் தாண்ட அதன் வேகத்தின் அதிர்ச்சியால் சைகிள்தானாகவே பக்கத்து சப்பாத்திக்காட்டில் சவாரிசெய்ய ஆரம்பித்தது. அப்பொழுது-எனது உயிரே போய்விட்டது. (உயிர் போய் விடவில்லை. நானிருந்த அபாயத்தின் கொடூரத்தைத் தெரிவிக்க ஒரு சாந்திக்காகச் சொன்னேன்.) என்றாலும் எனக்கு ஆபத்து நேரிடாவண்ணம் ('நன்றாய் இருக்கவேண்டும்') சர்க்காரின் எல்லைக்கல் ஒன்றில் முன்சக்கரம் மோத மெள்ள வண்டியை சாய்த்துக்கொண்டு கீழே இறங்கினேன். (யாராவது பின்னாலோ முன்னாலோ வருகின்றார்களோவென்று பார்த்தேன்.) எனது மானத்தைக் காக்கக் கடவுளுக்கு திருப்திபோலும். ஒருவரும் வரவில்லை. கால்

களில்மட்டும் (வலதுகாலில் மூன்றும், இடதுகாலில் இரண்டுமாக) ஐந்து முட்கள் தைத்திருப்பதை உணர்ந்தேன். மனோஹராவின் குதூகலத்தால் வலிதெரியவே இல்லை. உடனே பின்புறத்தால் நான்கைந்து ஜம்புகள்பண்ணி சைகிளின்மேல் ஜம்மென்று உட்கார்ந்தேன். என்னை யறியாமலே, '......மறுபடியும் கருவடையும் குழியில்......' என்ற பாபநாசம்சிவன் ஐயரின் அனுபல்லவி எனது தொனியினின்று கிளம்பி ஆகாயத்திற் பறந்தது. நான்கு மிதிகூட சரியாய் மிதித்திருக்கமாட்டேன். சைகிளின் ரிம் 'பராச்' சென்று தரையில் தேய்ந்த சப்தம் கேட்டது. உடனே சடக்கென்று சாய்த்துக்கொண்டு வண்டியினின்றும் கீழே இறங்கினேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது, இரண்டு சக்கரங்களின் டயர்களும் கொஞ்சம்கூட ஏர் இல்லாதபடி அவ்வளவு பஞ்சர்களாகி யிருந்தன. 'அட...தெய்வமே என்று தலையில் இரண்டு அடி அடித்துக்கொண்டு வரிந்து கட்டிக்கொண்டு சைகிளை உருட்டினேன். ரிஸ்ட் வாச்சைப் பார்த்தேன். அதில் மூன்று, முப்பத்திரண்டு ஆகி இருந்தது. உடனே உருட்டினேன், உருட்டினேன், உருட்டினேன், அப்படி உருட்டினேன். அப்பா, எத்தனை உருட்டல்கள். மெள்ள சினிமா கொட்டகையை ஆறுமுப்பத்தி எழுக்கு அடைந்தேன். எவ்வளவு நாழி உருட்டியிருப்பேன் என்பதை நீங்களே கணக்குப் பண்ணிக்கொள்ளுங்கள். உடனே சைகிளை எனக்கு அரைகுறையாக அறிமுகமான ஒரு நண்பரின் வீட்டில் வைத்துவிட்டு ஒரு காலரிடிக்கட் வாங்கிக்கொண்டு 'லலிதா டாக்கீசு'க்குள் நுழைந்தேன். எனது மனம் மனோஹராவைப் பார்க்கப் பறந்தது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன். ஸ்கிரீனையே நோக்கியவண்ண மிருந்தேன். ஆட்டமும் துவக்கப்பட்டது. 'ஐயையோ...எனது ஏமாற்றத்தை என்னென்று சொல்லுவேன்? கண்களை நன்றாய் கசக்கிக்கொண்டு பார்த்தேன். பக்த குசேலா படத்தில் பாலகிருஷ்ணனின் திருவிளையாடல்கள் ஸ்கிரீனில் நடந்தது. உடனே அடக்கொணு ஆத்திரத்துடன் உச்சிகாலரியினின்று தடபுடவென்று கீழே இறங்கினேன். இறங்கிய வேகத்தில் எனது வலதுகாலின் கட்டைவிரல் ஒருவரது உச்சிக்குடுமியில் சிக்கிக்கொள்ளவே திடீரென்று குப்புறக் கீழேவிழுந்தேன். நான் கீழேதரையில் விழுந்துவிடவில்லை. அவர் கீழும் நான் மேலுமாகத்தான். உடனே அவர் எழுமுன் நான் மூந்திக்கொண்டு சப்தம் செய்யாமல் டோராவைவிட்டு வெளியே வந்தேன். அதேசமயம் படபடவென்று சிலர் டிரம் அடித்துக்கொண்டு போவதைக்கண்டு அங்கு ஓடினேன். எனது அதிர்ஷ்டத்தை என்னென்று சொல்வது?

அவர்கள் கொடுத்த விளம்பரத்தில் கொட்டை எழுத்தில் (இன்றிரவு, இன்றிரவு—கும்பகோணம், டைமண்டு சினிமாவில் 'மனோஹரா') என்பதைத்தான் நான் படித்தது. ஓடோடியும் பஸ் ஸ்டேன்டை அடைந்தேன். அங்கு நின்றுகொண்டிருந்த கண்டக்டரைநோக்கி, 'கும்பகோணம் பஸ் எப்போ சார்?' என்று அவசரக்கேள்வி விடுத்தேன்.

அந்த முட்டாள்பயல் சாவகாசமாகக் கொட்டாவி விட்டுக்கொண்டே, 'உம்...கும்பகோணம் பஸ்ஸா...அது கொஞ்சநாழிக்கி மிந்தியே போய்ட்டுதே' என்றான்.

நான் அப்பொழுதும் ஏமாந்து போனேனென்றாலும் எட்டரை மணிக்கு ஜங்ஷனில் வண்டியுண்டென்பது தெரியும். உடனே விர்என்று

ஜங்ஷனைநோக்கிப் புறப்பட்டேன். நடந்த வேகத்தில் ஒரு கப்பிக்கல்லும் எனது பாபத்தைக் கொட்டிக்கொண்டு படீர் என்று காலில்இடித்தது. முன்னைத்த வேதனையுடன் இவ்வேதனையும் ஒன்றாக்கொன்று சளைக்காமல் எனக்குப் பெருத்தவேதனையை உண்டாக்கி விட்டன. 'அப்பாடா' என்று காலைப் பிடித்துக்கொண்டு லாந்தர் கம்பத்தடியில்போய் வெளிச்சத்தில் பார்த்தேன். வேறொன்றும் ஆய்விடவில்லை. வலதுகாலின் பெருவிரல் நகந்தான் அடியோடு பேர்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. வழிந்த உதிரத்தைக்கண்ட எனது கண்கள் 'வெந்த புண்ணில் வேல்பாய்ச்சினாற்போல்' இரண்டு உப்புக்கண்ணீரை காயத்தில் உதிர்த்தன. அப்பாடா என்ன எரிச்சல்? இத்துடன் வயிற்றுப்பசியும் கிள்ளஆரம்பித்தது. மத்தியானம்கூட சரியாய் சாப்பிடவில்லையல்லவா? நொண்டி, நொண்டி ஜங்ஷனை அடைந்தேன். கைக்கடியாரத்தைப் பார்த்தேன். மணி சரியாய் ஏழரை ஆகியிருந்தது. 'என்னடா இதற்குள் வந்துவிட்டோமே, இன்னும் ஒருமணி சாவகாசம் இருக்கிறது. அதற்குள் பசியாற்றிக் கொள்வோம்' என்று கிளப்பினுள் நுழைந்தேன். மத்தியானமும் சாப்பிடாததினால் கொஞ்சம் வலுவாகவே இழுத்துவிட்டேன். 'பில் எவ்வளவு சார்?' என்றேன். அவன் ஒருகாகிதத்தை என்னிடத்தில் நீட்டினான். அதில் 0—12—9 என்று போடப்பட்டு இருந்தது. எனக்கோ திக்கென்றது. உடனே மணிபர்சினின்று ஒரு ரூபாயை எடுத்து மேஜையின்மேல் எறிந்து 'மீதி சேஞ்சு,' என்றேன்.

அதேசமயம் 'கோ...க்கோ'வென்று ஒரு டிரைனின் சப்தம் காதில் கேட்டது. திடுக்கிட்டுக் கைக்கடியாரத்தைப் பார்த்தேன். அக்கடியாரமும் என்னைப் பரிகாசம் பண்ணுவதைப்போல் அப்பொழுதும் ஏழரையிலேயே இருந்தது. சுறுசுறுப்புடன் காதண்டைவைத்துப் பார்த்தேன். எனது மனம் அதிதீவிரமாய் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. கடியாரம் நின்றுபோயிருந்தது. 'கல் இடறிக் கீழேவிழுந்தபோது நின்றுபோயிருக்கக் கூடுமோ?' என்று எண்ணி மீதி சில்லரையும் வாங்காமல் பிளேட்பாரத்தினுள் ஓடினேன். நான் கிளப்பிலிருந்தபோது கூவியவண்டி ஒருபர்லாங் தூரத்திற்கப்பால் தனது பின்புறத்து டேஞ்சர் லைட்டைக் காட்டியவண்ணம் தெற்குநோக்கிப் போய்க்கொண்டிருந்தது. உடனே ஸ்டேஷனுக்குள் நுழைந்து மணியைப் பார்த்தேன். ஒன்பது அடித்து இரண்டு நிமிடங்கள் ஆகியிருந்தது. 'அட..., இழவே. என்று நினைத்துக்கொண்டு, 'சரி, கும்பகோணம் வண்டிகள், எட்டரைமணி வண்டியும் போய்விட்டது. ஒன்பது மணி வண்டியும் போய்விட்டது. போனது போய்விட்டது. மீதி சில்லரையையாவது வாங்கிக்கொண்டு 'லலிதா'வுக்குப் போவோம், என்று தீர்மானித்துக்கொண்டு நொண்டியவண்ணம் கிளப்பிற்கு வந்து 'மீதிசில்லரை சார்' என்றேன்.

அவன், ஓய் என்னங்காணும்? வாங்கிக்கொண்டு போய்விட்டு மீதிசில்லரை...என்கிறீர்?' என்று அதட்டினான்.

நான் 'இதுவும் நமது கிரகசாரந்தான்' என்று நினைத்துக்கொண்டு வெளியேவந்து தலையில் நான்கடி அடித்துக்கொண்டு நொண்டியவண்ணம் லலிதா டாக்கீசை நோக்கி நடந்தேன். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன். 'ஐயோ...இரண்டாவது முறையாக பக்த குசேலாவையாவது பார்த்திருக்கலாமே' என்று எண்ணிக்கொண்டே வந்தேன். 'இப்போதான்

என்னமுடை மூழ்கிப்போய் விட்டது? இரண்டாவது ஆட்டத்தையாவது பார்த்து விடுவோமே' என்று என் மனது என்னை திடப்படுத்தியது. நான்கடி எடுத்துவைத்தேன். எனது பழைய நண்பர் ஒருவர் என்னை சந்தித்தார்.

'அலோ, மைடியர் பிரகாஸ்' என்று எனது வலதுகையை வெடுக்கென்று பிடித்திழுத்தார். 'எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?' என்றார், அவர்.

'ஜங்ஷனுக்கு ஓர் அலுவலாகப் போய்விட்டு வருகின்றேன்' என்று பதிலளித்தேன் நான்.

'சரி, பக்தகுசேலாவைப் பார்த்தீர்களோ?' என்றார்.

'ஆம், முன் தடவை வந்தபோது பார்த்தேன்' என்றேன்.

ரொம்ப பெஸ்ட்சார், வெரிகுட் பிலிம். என்ன சார் மனோஹரா இவ்வளவு ஓர்ஸ்ட்டாக இருக்கு!' என்றார்.

எனக்கோ தூக்கிவாரிப் போட்டது. 'எங்கே மனோஹரா நடக்கின்றது?' என்று ஆச்சரியம் ததும்பிய குரலுடன் கேட்டேன். 'லலிதா டாக்கீஸில் டிரயல்காட்ரா...சுத்தமோசமா இருக்குசார். எவ்வளவுக் கெவ்வளவு பெஸ்ட்டாக இருக்குமென்று எண்ணினேனோ அவ்வளவுக்கவ்வளவு ஓர்ஸ்ட், சார்' என்றார்.

இதைக்கேட்டதும் எனது மனம் சிறிது சாந்தமடைந்தது. 'என்னை இப்படிப் பழிவாங்கிய அப்படம் குட்டிச்சுவராய்த்தான் போகவேண்டும்' என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டே மெள்ள, மெள்ள டாக்கீஸை அடைந்தேன். எனது வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள பாபநாசம் ஐயருக்கும் சந்தோஷம்போலும். அப்பொழுதுதான் அவர், 'தேவாதி...தேவா...நின் திருவடி...சரணமென்...றிங்கு...நான்...நம்பி...வந்தேன்' என்று நீட்டி முழக்கித் தமது அடித்தொண்டையுடனும், பொடிபோட்ட மூக்குடனும் அலங்கரித்துக் கொண்டிருந்தார்.

உடனே நான், 'அடடா...மூக்கால்வாசிப்படம் ஆய்விட்டதே, அப்படியென்றால் மனோஹராடிரயலும் ஆகியிருக்கும்' என்று நினைத்துக்கொண்டு ஆப்பரேட்டிங் ரூமண்டை போனேன். ரூம் உள்புறம் பூட்டப்பட்டிருந்தது. கதவிலிருந்த இடுக்கின் வழியாய்க் கண்ணைவைத்துக்கொண்டு பார்த்தேன். எனது நண்பர் ஆப்பரேட்டர் ஆழ்ந்து மிஷினை நோக்கிக் கொண்டிருந்தார். நான் முதலில், 'சார், சார்' என்றேன் பதிலில்லை. பிறகு சூ, சூ என்று இரண்டு சிட்டி அடித்தேன். யாரையா அது!' என்று அதட்டினார் எனது நண்பர்.

நான் சிரித்துக்கொண்டே, 'ஐ ஏம்...நான்தான்...பிரகாஸ்' என்றேன். உடனே அவர், 'கெட் இன் மை—டியர் பிரண்டு, பிரகாஸ்' என்று கூறிக்கொண்டே கதவைத்திறந்தார். நானும் உள்ளே போனேன். அவரைநோக்கி, மனோஹரா டிரயல் ஆய்விட்டதோ?' என்று கேட்டேன். ஓ, எஸ்...அப்பொழுதே இண்டர்வெல்லில் ஆய்விட்டதே' என்றார்.

---

எனக்கு துக்கம் பொறுக்கமுடியவில்லை. அப்பொழுது எனக்குப் பழைய நினைவு ஒன்று உதித்தது. உடனே நான் ஆப்பரேட்டர்சாரை நோக்கி, 'தங்களால் எனக்கொரு உதவிவேண்டும்' என்று நீட்டினேன்.

'என்ன உதவி? என்னல் ஆகக்கூடுமானல் செய்கின்றேன்' என்ருர் அவர்.

'எனக்கு இந்த பக்த குசேலா படத்தில் மூன்று பிலிம் படங்கள் வேண்டும்' என்றேன்.

'என்ன படங்கள்?' என்ருர் அவர்.

நான் குதூகலத்துடன், 'பாலகிருஷ்ணன் மூக்கின்மேல் கையை வைத்துக்கொண்டு ' உஷ்...பேசாதே ' என்கின்ருனே அந்தக் கட்டிடத்தில் ஒரு படம். குசேலர் திருவடி சரணம் பாடும் கட்டத்தில் ஒன்று. மூதிய கிருஷ்ணனின் புன்முறுவல் கட்டத்தில் ஒன்று. ஆக மூன்று படங்கள் வேண்டும் ' என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே, சல்யூட் செய்துவிட்டுத் தமது வேலையில் மூனைந்தார். 'சரி, நமக்குப்படம் கண்டிப்பாய்க் கொடுப்பார்' என்று தீர்மானித்துக்கொண்டு ரூமிலிருந்த இடுக்கின் வழியாய் ஸ்கிரீனைப் பார்த்துக் கொண்டே குந்தியிருந்தேன். ஆட்டமும் விடப்பட்டது. எனது நண்பர் ரகஸ்யமாக அழைத்து மூன்றுபடங்களை எனது பாக்கட்டில்போட்டு, 'வெளியே தூரத்தில் போய்ப்பாருங்கள்' என்று எச்சரிக்கை செய்தார். உடனே எனக்குப் பழையநினைவுகளெல்லாம் பறந்து போயின. சிறிதும் தாமதிக்காமல் நான் அவருக்கு சல்யூட் செய்துவிட்டு, 'ஷெல் ஐ டேக் லீவ்?' என்றேன்.

'எஸ் யு ஷெல்' என்ருர் எனது நண்பர்.

உடனே நான் விர் என்று நொண்டிக்கொண்டே சைகிளைவைத்த அரை குறை நண்பரின் வீட்டிற்குப் போனேன். சைகிளை நான்வைத்த இடத்தில் காணப்படவில்லை. உடனே திடுக்கிட்டு வீட்டினுள் தூங்கிக்கொண்டிருந்த நண்பரை எழுப்பி வினவினேன். அவரும் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுப் பரக்கப்பரக்க விழித்தார். 'என்ன சார், ...எவனே அடிச்சிகிட்டுப் போய்டான். சார்' என்ருர்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'அப்புறம்? ' என்றேன். 'அப்புறம் என்ன? வேண்டுமென்ருல் சைகிளின் அடையாளங்களைத் தெரிவித்துவிட்டுப் போங்கள். நான் என்னலானமட்டும் தேடிப்பார்க்கிறேன்' என்று கண்களைக் கசக்கிக்கொண்டே சொன்னர்.

நான் துக்கம் சகிக்கமாட்டாதவனய், 'இரண்டு சக்கரங்களும் பஞ்சர், பெல் பிரேக்குகள் ஒன்றும் கிடையாது, பழையவண்டி, வண்டி கிரீச்கொட்டும்' என்று அடையாளங்களை எல்லாம் சரியாய்ச் சொன்னேன். உடனே அவர் அதைக் குறித்துக்கொண்டு, 'என்னடா பாபி' என்றும் கேட்காமல் படார் என்றுக் கதவை சாத்திக்கொண்டு, 'போய்ட்டு வாருங்க சார்' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

நான் மனவருத்தத்துடன், சீ, இம்மூதேவி ஆட்டத்தைப் பார்க்கவந்ததில் எவ்வளவு நஷ்டங்கள்? ' என்று முணுமுணுத்துக்கொண்டே அப்

பொழுதே அக்காரிருளில் ஊரைநோக்கிப் புறப்பட்டேன். எலக்டிரிக் போடப்பட்டிருந்த டவுன் எல்லையைத் தாண்டும்வரையில் கொஞ்சம் வேகமாகவே வந்த எனக்குப் பேயிருளைக் கண்டதும் பீதி ஏற்பட்டது. கால்வலியும் கடுகடு என்றது. 'என்ன அவசரம்?' என்று நினைத்து ஓர்வீட்டுத் திண்ணையில் படுத்தேன். படுத்தததுதான் தெரியும். யாரோ எழுப்பியதைப்போல் தோன்றவே மிரண்டு எழுந்தேன். கைக்கெடியாரத்தைப் பார்த்தேன். அப்பொழுது மணி எழரை ஆகியிருந்தது. சூரியன் இரண்டு தென்னைகள் உயரம் ஆகாயத்தில் எழும்பி யிருந்தான். 'ஐயையோ' என்று கூறிக்கொண்டு ஊரை நோக்கிப் புறப்பட்டேன். கால் வலியோ தாங்க முடியவில்லை. பசியும் மெள்ள, மெள்ள எடுத்தது. 'பசியாற்றிக்கொண்டு மெள்ளப் போகலாமெ'ன்று நினைத்து ரோட்டின் குருக்காக ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் பல்லைத் துலக்கிக்கொண்டு அருகாமையிலிருந்த கிளப்பினுள் புகுந்தேன். 'இட்டலி விலை காலணாதானே?' என்றேன். 'ஆம்' என்ற பதில் உண்டாயிற்று. 'எழு இட்டலி, இரண்டு சேர் காப்பி' என்றேன். உடனே எல்லாம் கொண்டுவரப்படவே நன்றாய் சாப்பிட்டேன். சில்லரைகொடுக்க வேண்டுமல்லவா? மணிபர்சை எடுத்தேன். தூக்கி வாரிப்போட்டது, மணிபர்ஸில் இரவு மிஞ்சியிருந்த மூன்றேமுக்கால் ரூபாயில் ஒருபைசாவையும் காணோம். என்மனம் அப்பொழுது எப்படி இருந்திருக்கும். (நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.) மிரள, மிரள விழித்தேன்.

கடைக்காரர், 'என்ன ஐயா விழிக்கிறீர்கள்?' என்றார்.

'பணமெல்லாம் காணமற் போய்விட்டது' என்று சொல்லி மிஞ்சி இருந்த நான்கு ரூபாய் பெறும்படியான மணிபர்சை மூன்றே முக்கால் அணவுக்காக அடகுவைத்துவிட்டு ஊரைநோக்கி வந்தேன். எனக்கு மனோவேதனையும், கால்வேதனையும் பொறுக்கமுடியவில்லை. சடக்கென்று ஒரு நினைவுவரவே சிறிது சாந்தமடைந்தேன். எனது ஆப்பரேட்டிங் நண்பர் படங்கள் கொடுத்தாரல்லவா? 'அவைகளாவது மனோவேதனையை ஆறுதல் செய்யாதா?' என்று எண்ணிப் படங்களைப் பாக்கட்டினின்றும் எடுத்தேன். எனது தலை கிர், கிர் என்று பம்பரம்போல் சுழன்றது. அப்போதைய ஏமாற்றத்தில் எனது மனமே படீர் என்று வெடித்துவிடும் போலிருந்தது. அப்பிலிம்களில் ஒன்றில் 'வருகிறது, வருகிறது மனோஹரா என்றும், ஒன்றில் மகத்தான தமிழ்ப் பேசும் படம்' என்றும், மற்றொன்றில் 'கதை எழுதியவவர் ஜட்ஜ் ஸ்ரீமான் பி. சம்பந்த மூதலியார்,' என்றும் எழுதியிருந்தது. எனக்கோ பொறுக்கமுடியாக் கோபம் வந்தது. உடனே மடியிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து அதினின்று ஒரு குச்சியை வெளிப்படுத்தி அதை சுர் என்று பெட்டியின் புறத்தில் தேய்த்து அதில் உண்டான அக்கினி பகவானுக்கு அம்மூன்று கொடிய படங்களையும் அர்ப்பணம் பண்ணினேன். அவைகள் புஸ் என்று எரிந்து என்னைக் கொஞ்சத்தூரம் ஓடும்படி துர்நாற்றத்தை வீசின. மெள்ள, மெள்ள ஊருக்கும் வந்து சேர்ந்தேன். வீட்டிற்குள் நுழைந்தேனோ, இல்லையோ, வாடகை வண்டிக்காரர் வந்து, 'சைகிள் எங்கே சார்?' என்று பிடித்துக்கொண்டார். என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தேன். 'என்ன சார் விழிக்கிறீர்கள்? வண்டி எங்கே?' என்றார்.

நான் ஒருவித முடிவிற்கு வந்து 'சார், சைகிள் என்னிடம் உள்ளவரையிலும் தினம் ஒன்னுக்கு எட்டு அணு வீதம் வாடகை கொடுத்து விடுகிே

றேன் சார். சைகிள் பத்திரமாய்த்தான் சார் இருக்கிறது' என்று சொல்லி அவனை மெள்ளத் தட்டிக்கழித்தேன்.

* * *

ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள். இப்படியே நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. பதினைந்து நாட்களும் ஆயின. பதினாறும் நாள் சாயந் திரம், அப்பொழுதுதான் சைகிளின் வாடகைக் கணக்குப் போட்டுக்கொண் டிருந்தேன். 7—8—0 ரூபாய் என்று எனது பேனா மனோவேதனையுடன் எழுதிய அதேசமயம் வாடகை சைகிள் பேர்வழிவந்து, 'என்ன ஐயா, சைகி ளைக் கொடுக்கப் போகின்றீரா? சைகிளின் கிரயத்தைக் கொடுக்கப் போகின் றீரா?' என்று ஆர்பாட்டம் செய்தான்.

'இன்னும் இரண்டு நாட்களில்' என்ற சொல் வாயினின்று வந்ததுதான் தாமதம்.

'எனக்கு சைகிளை வாங்கிக் கொள்கிறப்போல் வாங்கிக்கொள்ளத் தெரி யும்...' என்று என்னைப் பருகிவிடுபவன்போல் விறைக்கப் பார்த்துவிட்டு விர் என்று மறைந்து போனான். எனக்கோ கலவரமாகவே இருந்தது.

மறுநாள் எனக்கொரு சம்மன் விடுவிக்கப்பட்டது. அதில் 'சைகிளின் கிரயம்ரூபாய் ஐம்பதையும் நாளைமாலைக்குள் கொடுத்துவிட வேண்டும். இல்லை யேல் பதினைந்து ரூபாய் அபராதத்துடன் சேர்த்து அறுபத்தைந்து ரூபாய் களாக வசூலிக்கப்படும்' என்று எழுதியிருந்தது. இதைக் கண்டதும் எனக்கு ஒன்றும் புரியவேயில்லை. 'ஐயோ, ஐயோ, ஐயோ, அந்த ஓட்டை சைகளுக்கா ஐம்பது ரூபாய்? வேண்டும், வேண்டும், இன்னும் வேண்டும். பேஷ்...எல்லாம் மனோஹராசெய்த வேலையல்லவா?'

மறுநாள் எனது பெட்டியிலிருந்த நாற்பத்தைந்து ரூபாய்களையும் அரித்து எடுத்துக்கொண்டு மீதிப்பணத்திற்கு எனது அருமைக்காதலி கமலா வின் முகத்தைநோக்கி நின்றேன்.

அவள், 'எதற்காக?' என்று சிடுக்கென்று கேட்டுவிட்டாள்.


நானும் அதுதான் தக்கசமயமென்று எனது விர்த்தாந்தங்களை எல்லாம் (வீடுவிட்டுக் கிளம்பியதுமுதல் வீடுவந்து சேர்ந்தவரையில்) ஒன்று விடாமல் தெரிவித்தேன்.

அவள் சிரித்துக்கொண்டே முதலில் பெரிய 'ஊம்' போட்டுவிட்டுப் பிறகு, 'நான் சொன்னவைகளெல்லாம் உமக்கு ஏறாமல் போய்விட்டதே. பெண்கள்பேச்சைக் கேட்காதவர்களுக்கெல்லாம் இக்கதிதான் நேரும். எல்லாம் மனோஹராசெய்த வேலைதானா? காலில் கட்டியுள்ள கட்டுகள் சப்பாத் திக் காட்டில் விழுந்தபோது உண்டானதுதானே? இனிமேலாவது இந்த சினிமா பைத்தியம் உங்களைவிட்டு விடுமோ? விடாதோ?' என்று ஆரம்பித்து மூச்சுவிடாமல் பேசினாள்.

'ஆம், அன்றோடு துலைத்துத் தலைமுழுகிவிட்டேன்' என்று தழதழத்த குரலில் தொண்டையை அடைக்கச் சொன்னேன்.

உடனே அவள் சடக்கென்று தன் முகத்தை ஒரு திருப்பு திருப்பிக் கொண்டு, (கழுத்து சுளுக்கிகொண்டு இருக்குமென்றே எண்ணினேன்.) அவளது மாங்கல்யத்தில் தொங்கிக்கொண்டிருந்த சாவியினால் பெட்டியைத் திறந்து ஐந்துரூபாய் நோட்டுஒன்றை எடுத்து என்கையிலிருந்த தொகையுடன்வைத்து 'கொண்டுபோய்த் தொலைத்துவிட்டு வாருங்கள்' என்று என்னை மிரளமிரளப் பார்த்தாள்.

'தெய்வமே ஐம்பத்து ஐந்துரூபாய் தண்டம்.' என்று நினைத்தவனாய்ப் பஞ்சாயத்துக் கோர்ட்டை நோக்கி நடந்தேன். கோர்ட்டின் வாயில் ஏறும் சமயம், பின்னால் சிறிது தூரத்தில் 'கிரீச்' என்று அறிமுகமான சப்தத்துடன் 'சார்' என்ற தொனி யுண்டாயிற்று. சடக்கென்று மௌனத்துடன் திரும்பினேன். என்ன ஆச்சரியம்? கண்களை நன்றாய் கசக்கிக்கொண்டுபார்த்தேன். எனது அரைகுறை அறிமுக நண்பர் எனது வாதியின் இரண்டு டியூப் பஞ்சரான சைகிளின்மேல் ஜாம் என்று வந்து என்பக்கத்தில் இறங்கினார். அடாடா எனக்கு எப்பேற்பட்ட சந்தோஷம் உண்டாயிற்று தெரியுமா? அப்படியே அந்த ஐம்பது ரூபாயையும் அவருக்கு அர்ப்பணம் செய்துவிடலாமா வென்று எண்ணினேன். ஆனால் பாழும் மனம் அதற்கு இடந்தரவில்லை. உடனே நான் சைகிளைப் பஞ்சாயத்துக்கு கோர்ட்டில் ஒப்புவித்துவிட்டு எனது அரைகுறை அறிமுக நண்பரோடு வீடுதிரும்பினேன். அன்று இரவு அரைகுறை நண்பருக்கு வடை பாயாசத்தோடு சாப்பாடு அளித்தேன். பிறகு தாம்பூலம் போட்டுக்கொணடு உட்கார்ந்திருக்கையில் எனது நண்பர் என்னை நோக்கி 'என்ன சார், நீங்கள் ஏதாவது சில்லரையை மாயவரத்தில் பொட்டளத்துடன் கெட்டுப் போக்கிவிட்டீர்களோ?' என்றார்.



நான், 'இல்லையே, அப்படியொன்றும் கெட்டுப்போக்கியதாக ஞாபகமில்லை' என்று மழுப்பினேன்.

'அப்படியென்றால் உமது நண்பர் ஆப்பரேட்டர் என்னிடம் மூன்றே முக்கால் ரூபாய் மடித்தபொட்டளத்தைக் கொடுத்து உங்களிடம் கொடுக்கச் சொன்னாரே' என்று கூறி தனது பாக்கட்டிலிருந்து (நான் மாய

வாத்தில் போக்கடித்த அதே) மூன்றே முக்கால் ரூபாய் மடித்த பொட்டணத்தை என்னிடம் கொடுத்தார். நான் மடித்தது மடித்தபடியே இருந்தது.

'பேஷ்... இதுவும் 'எனது குருட்டு அதிர்ஷ்டம் தான்' என்று நினைத்துக்கொண்டு, 'நான் அவருக்குத்தவணையாக இந்தத் தொகையைக் கொடுத்திருந்தேன். அதைத் தங்களிடம் கொடுத்தனுப்பியிருக்கிறார். எவ்விஷயத்திலும் மிகவும் நாணயக்காரர்' என்று குட்டாகப் பேசினேன். அவர், 'இல்லே, இல்லே, அவர் உங்களுடைய பாக்கட்டிலிருந்து உங்களுக்குத் தெரியாமல் எடுத்துவிட்டதாகச் சொன்னர்' என்றார்.

நான், 'ஈ ஈ ஈ' என்று இளித்துக்கொண்டே 'இல்லே, இல்லே அப்படியொன்றுமில்லே' என்றேன். 'சார், வாடகைசைகிளில் எவ்வளவு பஞ்சர்கள் சார்!' இருந்தது என்றார். நான் ஆவலுடன், 'எவ்வளவு பஞ்சர்கள்' என்றேன்.

'முன்சக்கரத்தில் முப்பத்து ஒன்பதும், பின்சக்கரத்தி இருபத்து ஒன்றுமாக அறுபது பஞ்சர்கள் என்றார்.

'அடாடா ஒட்டுப்போட ரொம்ப கஷ்டப்பட்டிருப்பீர்கள்' என்று கூறிக்கொண்டே எனது கால்களை நோக்கினேன். வலது காலில் நான்கும், இடது காலில் இரண்டுமாக ஆறு ஒட்டுகள் காணப்பட்டன.

எனது அரைகுறை நண்பரும் விடைபெற்றுக்கொண்டு மெள்ள ஊர் போய்ச் சேர்ந்தார்.

'சார், இந்த இரண்டு நண்பர்களில் நான் யாரை சார் அதிகமாக நேசிக்கலாம்? நீங்களே சொல்லுங்கள்'

மறுநாள் எனது வாதிக்கு (அபாண்டமாக பதினைந்துரூபாய் பெறும் படியான சைகிளை ஐம்பது ரூபாய் என்று சாதித்ததற்காக) பதினைந்துரூபாய் அபராதம் விதித்ததாகக் கேள்விப்பட்டேன், எனக்கு பலே சந்தோஷம்.

* * *

'என் சார்! கைவிட்டுப்போகவிருந்த ஐம்பத்து மூன்றேமுக்கால் ரூபாய் எதிர்பாராத விதமாகக் கிடைத்ததே, அதில்பாதி இருபத்தாறு ரூபாய் பதினன்கணவுக்குப் எங்களுக்கெல்லாம் ஒரு டீ பார்டீ வைக்கக்கூடாதா சார்? சரி, அதுதான் முடியாதென்கிறீரே, கைவிட்டுப்போன பணம்தான் திரும்பி வந்துவிட்டதே, இனிமேல் சினிமா பார்க்கவாவது போங்களேன் சார்' என்கிறீர்களோ?

'முடியாது, முடியாது. அந்த சங்கதியைப்பற்றி இனிமேல் என்னைக் கேட்காதீர்கள். வேண்டுமென்றால் கமலாவைப் போய்க்கேளுங்கள். இனிமேல் எனக்கொன்றும் தெரியவே தெரியாது.'


• • •

'என் சார்; மனோஹராபடம் ஆடி எத்தனை மாதங்கள் ஆகின்றன? அதைப்பற்றி இப்பொழுது என் அதிகப்பிரசங்கம் செய்கிறீர்?' என்ற கேள்வியையும் நீங்கள் கேட்கலாம்.

'நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த காரியம் கைகூடித்தானே சார் எழுதவேண்டும்.'

---

# இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினலாவது அல்லது வேறு எந்த சுரத்தினலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசிகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

# சில அபிப்பிராயங்கள்

---

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்து அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

---

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.